கவிராச மார்க்கம்

கன்னட மூலத்தின் தமிழாக்கம்

தண். கி. வேங்கடாசலம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005

கவிராச மார்க்கம்

கன்னட மொழியின் முதல் இலக்கணநூல்

கன்னட மூலத்தின் தமிழாக்கம்

பேராசிரியர் தண். கி. வேங்கடாசலம், எம். ஏ.,

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் – 613 005.

ISBN : 81-7090-270-3

எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டுப்
பதிப்புச் சுழல்நிதி வெளியீடு

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 210

திருவள்ளுவராண்டு 2031 கார்த்திகை - திசம்பர் 2000

நூல்	:	**கவிராச மார்க்கம்** (கன்னடமொழியின் முதல் இலக்கணநூல்)
ஆசிரியர்	:	தண்.கி. வேங்கடாசலம் (கன்னட மூலத்தின் தமிழாக்கம்)
படிகள்	:	500
விலை	:	உரூ. 100-00
பதிப்பு	:	முதற்பதிப்பு
அச்சுப் பதிவம்	:	இலக்மி அச்சகம், தஞ்சாவூர்
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம். தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் கதிர். மகாதேவன்
துணைவேந்தர்

அணிந்துரை

திராவிட மொழிக் குடும்பத்தில் கன்னட மொழியும் ஒன்றாகும். ஒரு மொழியின் சிறப்பினைக் கண்டறிய அம்மொழியின் அடிப்படை இலக்கணத்தை உற்று நோக்குதல் நன்று. முனைவர் காலடுவெல் அவர்கள், திராவிட மொழிக் குடும்பத்தில் காணப்படும் மொழிகளின் இலக்கணங்களைத் தெள்ளத்தெளிவாக ஆராய்ந்த காரணத்தினால் இந்தோ - அய்ரோப்பியக் குடும்பம் வேறு என்றும் திராவிட மொழிக் குடும்பம் வேறு என்றும் நிலைநாட்டினார்.

அமரர் தண்.கி. வேங்கடாசலம் அவர்கள் கன்னட மொழியில் வெளிவந்துள்ள "கவிராச மார்க்கம்" எனும் முதல் இலக்கண நூலினைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். இம்மொழிபெயர்ப்பின் சிறப்பினால் இந்நூலாசிரியர் மறைந்தாலும் இறவாப் புகழ் பெறுகிறார்.

அமரர் பேராசிரியர் தண்.கி.வேங்கடாசலம் அவர்கள், செய்த இப்பெரும் பணி மேலும் பலரால் தொடரப்படவேண்டும். திராவிட மொழிகளில் காணப்படும் இலக்கண நூல்கள் அனைத்தும் தமிழில் மொழிபெயர்க்கப் படுமானால், பல உண்மைகளும் நுண்மைகளும் வெளிப்படும்; முனைவர் கார்டுவெல் அவர்கள் தாம் மேற்கொண்ட முயற்சியினால் கண்டுபிடித்த உண்மைகள் போலப் பல உண்மைகள் புலப்படும்; இந்திய மொழிகளின் பள்ளியும், மொழியியல் துறையும் இத்தகைய பணிகளில் ஈடுபடுத்தி மொழியியல் ஆராய்ச்சிக்குத் துணை புரிய வேண்டும் என்பதை அணிந்துரையின் வழி தெரிவிக்க விழைகிறேன்.

"கவிராச மார்க்கம்" எனும் இம்மொழிபெயர்ப்பு நூலினையும், தமிழ் மொழியில் உள்ள இலக்கண நூல்களையும் ஒப்பிட்டும், உறழ்ந்தும், நோக்குதல் நன்று.

அமரர் பேராசிரியர் தண்.கி.வேங்கடாசலம் மறைந்தாலும் அவர்தம் பணி இந்நூலின் வழி என்றும் நினைவோடு போற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

கதிர். மகாதேவன்

தஞ்சாவூர்
04-12-2000

கன்னட மொழியில் வெளிவந்த கவிராச மார்க்கம் எனும் முதல் இலக்கண நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு இன்று நூல் வடிவில் வெளியிடப்படுகிறது. இத்தகைய மொழிபெயர்ப்புப் பணியினை ஆர்வத்தோடு மேற்கொண்டு மிகச் சிறப்பான முறையில் முடித்துக் கொடுத்துள்ள பணி பாராட்டுக்குரியது. இந்தப் பாராட்டைப் பெறுபவர் மறைந்த பேராசிரியர் தண்.கி. வேங்கடாசலம் ஆவார். அவருடைய உழைப்பிற்கும் நற்பணிக்கும் இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

திராவிட மொழிகளில் எழுதப்பட்ட முதல் இலக்கண நூல்கள் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். அவ்வாறு கொண்டு செல்லும் நிலையில் பல்வேறு நூலாசிரியர்கள் இலக்கணத்தை அணுகியுள்ள முறை, விளக்க முறை, வைப்பு முறை போன்றவையும் தொடர்பான பிற செய்திகளும் வெளிப்படும். இலக்கண ஒப்பாய்விற்கு இத்தகைய முயற்சிகள் மிகவும் பயன்படும். அது மட்டுமின்றி இலக்கண நூல்களின் தனித்தன்மையும் நன்கு புலனாகும். ஒரே மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளின் இலக்கணங்களில் காணப்படும் பொதுமைக் கூறுகளும் சிறப்பு இயல்புகளும் அனைவருக்கும் நன்கு தெரியவரும். ஒப்புமை மொழியியல் ஆய்விற்கு இத்தகைய மொழிபெயர்ப்பு நூல்கள் அடிப்படையாகவும் ஆதாரமாகவும் அமையும். எனவே, இது போன்ற மொழிபெயர்ப்பு நூல்கள் மிகவும் தேவையானவை; வரவேற்கப்பட வேண்டியவை. எனவே இத்தகைய நூலை வெளியிடத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சி கொள்ளலாம். நூல் வெளிவர உதவிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றியும் உரியன. குறிப்பாக, இந்திய மொழிகள் பள்ளியின் நன் முயற்சிக்கும் பயனுள்ள பணிக்கும் பாராட்டுகள் உரியன.

தஞ்சாவூர் – 5 துணைவேந்தர்

முன்னுரை

தமிழ்நாட்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம் தோன்றிய நாள் முதல் அது செயற்கரிய சிறந்த தமிழ்ப்பணிகளைச் செவ்வனே செய்துகொண்டு வருவதறிந்து அதனை அனைவரும் பாராட்டி வருகின்றனர். அப்பல்கலைக் கழகத்தின் 'இந்திய மொழிகள் பள்ளி' பல்வேறு இந்திய மொழிகளில் முதன் முதலில் தோன்றிய இலக்கண நூல்களையெல்லாம் தமிழில் மொழி பெயர்க்க மேற்கொண்டுள்ள திட்டத்தின் கீழ் கன்னட மொழியின் முதல் இலக்கணமாகிய கவிராச மார்க்கம் என்னும் நூலினைத் தமிழில் மொழிபெயர்த்தளிக்கும் பணியினை அப்பள்ளித் தலைவர் பேராசிரியர் முனைவர் சு. இராசாராம் அவர்கள் எனக்கு அன்புடன் வழங்கினார்கள். யானும் அப்பணியை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு அந்நூலினைத் தமிழாக்கம் செய்து தந்துள்ளேன்.

கவிராச மார்க்கம் அணியிலக்கண நூலாகக் கருதப்படினும் அது அணியிலக்கணத்திற்கு அப்பாற்பட்ட பல்வேறு இலக்கண மரபுகளையும் விளக்குவதாயுள்ளது. பழங்கன்னடத் தேர்ச்சியும் வடமொழிப் புலமையும் அம்மொழிகளின் இலக்கணப் பயிற்சியும் வாய்ந்த அறிஞர்களே கவிராச மார்க்கத்தைத் தெளிவாக உணர்ந்து கொள்ள இயலும். எனவே அத்தகுதிகள் யாவும் ஒருங்கே பெற்ற பேராசிரியர் பி.எல். பட் அவர்களை அணுகி இப்பணிக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டேன். அவர்கள் உளமுவந்து உதவ முன் வந்தார்கள். என் அன்பிற்கினிய நண்பரும் உடன்பிறவாச் சகோதரருமான புலவர் திரு.மா. விசுவநாதன் அவர்கள் இந்நூலின் தமிழாக்கத்தைக் கூர்ந்து நோக்கி அது செப்பம் பெறுவதற்குப் பெரிதும் உதவினார்கள். இவர்கள் இருவருக்கும் என் உளமார்ந்த நன்றியினையும் வாழ்த்தினையும் அறிவித்துக் கொள்கிறேன்.

இப்பணியினை எனக்கு வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இந்திய மொழிகள் பள்ளித் தலைவர் பேராசிரியர் முனைவர் சு. இராசாராம் அவர்கட்கும் என் உளம் நிறைந்த நன்றியினைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

தமிழார்வம் மிக்க பேராசிரியரும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தருமான முனைவர் கி.கருணாகரன் அவர்களின் தலைமையில் இத்தகைய நற்பணிகள் பல சிறப்பாக நடைபெற்றுவருதல் பெரிதும் பாராட்டுக்குரியதாகும். அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலினைத் திறம்பட அச்சிட்டுதவிய அச்சகத்தினர்க்கும் என் நன்றி உரியதாகும்.

இம்முயற்சி நற்பயன் தரும் என்பதில் ஐயமில்லை. மேலும் இதனை விரிவுபடுத்தி ஆராய்ச்சி – விளக்கவுரையுடன் வெளியிட இயலுமாயின் இது பெரும் பயன் நல்கும் என்பதைப் பணிவுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

என்னை இப்பணியில் ஈடுபடுத்தி ஊக்குவித்த அனைவருக்கும் என் நன்றியை மீண்டும் கூறிக்கொள்கிறேன்.

'தண்டலை இல்லம்'
பெங்களூர் – 560 005
11 – 01 – 1991

இங்ஙனம்,
தண்.கி. வேங்கடாசலம்.

கவிராச மார்க்கம்

கன்னட மொழியில் இன்று வரை கிடைத்துள்ள நூல்களில் காலத்தால் முற்பட்ட முதல் நூல் கவிராச மார்க்கம் என்பதாகும். இது அணியிலக்கண நூல்தான் எனினும் ஒரு சிறந்த இலக்கிய நூலாகவும் போற்றப்பட்டு வருகின்றது. இதன் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு என்பதற்குத் தக்க சான்றுகள் கிடைத்துள்ளன. நூலின் பெயருக்கிணங்க, இது கவியரசன் ஒருவன் இயற்றிய, கவியரசர்க்குரிய நெறியாகவே விளங்குகிறது.

ஆசிரியர்

இந்நூலை இயற்றிய ஆசிரியர் யார் என்பது பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. ராஷ்டிரகூட மன்னன் அமோகவர்ஷன் நிருபதுங்கனே இந்நூலை இயற்றியவனாதல் வேண்டும் என்பது ஒரு கருத்து. அம்மன்னனின் அவைக்களப் புலவர்களுள் ஒருவனான ஸ்ரீவிஜயனே இந்நூலின் ஆசிரியன் என்பது மற்றொரு கருத்து. மூன்றாவதாக, ஸ்ரீவிஜயன் என்ற பழம் புலவன் இயற்றிய கவிமார்க்கம் என்ற நூலை, நிருபதுங்க மன்னனின் அவைக்களப் புலவர்களுள் ஒருவனான கவீஸ்வரன் என்பவன், சற்றுத் திருத்தி விரிவாக்கிக் கவிராச மார்க்கம் என்ற பெயரில் அமைத்திருக்கக் கூடும் என்ற கருத்தும் உளது. மேலும், நிருபதுங்கன், ஸ்ரீவிஜயன், கவீஸ்வரன் என்ற மூன்று பெயர்களும் ஒருவனையே குறிக்கும் எனக் கொள்வாரும் உளர். எவ்வாறாயினும் இந்நூல் இயற்றுவதற்குப் பேராதரவு நல்கிய புரவலன் நிருபதுங்க மன்னன்தான் என்பதில் ஐயமில்லை. இவன் காலம் கி.பி. 814–877 என்பது தெளிவாகும்.

வழிநூல்

இந்நூல் வடமொழிப் புலவர் 'தண்டி' என்பவர் இயற்றிய 'காவ்யதர்சம்' என்னும் அணியிலக்கண நூலின் மொழிபெயர்ப்பு என்ற கருத்து உண்டு. அது முற்றிலும் பொருந்துவதன்று. காவ்யதர்சத்தில் இல்லாத செய்திகள் பல இதில் காணப்படுகின்றன. அதேபோல் அதில் இடம் பெற்றுள்ள பல செய்திகள் இதில் இடம் பெறாமலும் உள்ளன. காவ்யதர்சத்தை முதல் நூலாகக் கொண்டு எழுந்த வழிநூலாக இதனைக் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது.

நூற்சிறப்பு

கவிராச மார்க்கம் கன்னட மரபும் பண்பும் விரவிச் சிறப்புறத் திகழ்கிறது. இந்நூலில் வந்துள்ள எடுத்துக்காட்டுச் செய்யுட்கள் பல வகையாயுள்ளன. பழங்கன்னடத்திலுள்ள இராமாயணம், பாரதம் முதலிய நூல்களிலிருந்து எடுத்தாளப்பட்ட செய்யுட்களும் இந்நூலாசிரியன் தானே இயற்றியமைத்துக் கொண்ட செய்யுட்களும் இந்நூலில் எடுத்துக்காட்டுப் பாடல்களாய் இடம் பெற்றுள்ளன. கன்னடத்தின் முதல் நூலாகிய இது வரலாற்றுச் சிறப்பு மிக்கது. கன்னட நாடு, கன்னட மொழி, கன்னடப் பண்பாடு, கன்னட மக்களின் மேம்பாடு முதலியன பற்றி அறிந்து கொள்வதற்கு உறுதுணையாகவுள்ள இந்நூல் கன்னடத்தின் தொன்மைக்குச் சான்றாக இலங்குகிறது.

சிறப்புச் செய்திகள்

அரிசியைத் தின்று மோர் பருகுதல், முத்தும் மிளகும் சேர்த்து மாலை தொடுத்தல், குழந்தை தலையில் பெருஞ்சுமை வைத்தல், இரண்டு பசுக்களிடம் ஒரு கன்றினை விடுதல், தலையை மழித்துக் கொண்ட பின்பு நாள் பார்த்தல் போன்ற அரிய செய்திகள் இந்நூலில் உவமைகளாக எடுத்தாளப்பட்டுள்ளன. சிற்சில இடங்களில் பொருள் தெளிவாகப் புலப்படவில்லை. உண்மைப் பொருள் காண்பது மிக அரிதாகவேயுளது. நூல் வழுக்கள், இலக்கண மரபுகள் முதலியன இடையிடையே கூறப்பட்டுள்ளன. கௌட நெறி, வைதர்ப்ப நெறி என்பன தென் நெறி, வட நெறி என விளக்கப்பட்டுள்ளன.

கூறியது கூறல்

இந்நூலில் சில செய்திகள் மீண்டும் மீண்டும் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் கூறப்பட்டுள்ளன. காவிய இலக்கணம் முதற்பரிச்சேதத்திலும் (18–28) மூன்றாம் பரிச்சேதத்திலும் (209–217) கூறப்பட்டுள்ளன. கூறியது கூறல் என்பது முதற்பரிச்சேதத்திலும் (85) இரண்டாம் பரிச்சேதத்திலும் (25) இடம் பெற்றுள்ளது. எதுகை வகைகள் இரண்டாம் பரிச் சேதத்திலும் (30–45) நூலின் இறுதியில் காணப்படும் மிகைப் பாடல்களிலும் விளக்கப்பட்டுள்ளன. ஸமாஹிதம் இரண்டாம் பரிச்சேதத்தில் (73–76) ஒரு நெறி எனவும் மூன்றாம் பரிச்சேதத்தில் (123) ஓர்

அணியாகவும் கூறப்பட்டுள்ளது. ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைத் தருதல் நேயார்த்தம் (I–101), ஓர்நுடி (II–150), சிலேடை (III–108) என மூவேறிடங்களில் மூவேறு பெயர்களால் சுட்டப்பட்டுள்ளன. இரண்டாம் பரிச்சேதத்தின் (152) சமந்தகமும், மூன்றாம் பரிச்சேதத்தின் (156) சங்கீரணமும் ஒத்தனவாகவே காணப்படுகின்றன.

நூல் நுவல் பொருள்

இந்நூல், தண்டியலங்காரம் கூறும் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்பவற்றுள் பரிச்சேதம் என்ற பிரிவுகளைக் கொண்டுள்ளது. மொத்தம் மூன்று பரிச்சேதங்கள் இந்நூலில் உள்ளன.

முதற் பரிச்சேதம்

முதற் பரிச்சேதத்தின் முதற்பாடல் வள்ளல் நிருபதுங்கனைத் திருமாலுக்கு இணையாக வைத்துப் போற்றுகிறது. இரண்டாம் பாடல் கலைமகள் வணக்கம். அடுத்துச் சில பாடல்கள் நிருபதுங்கனின் அவைக்களப் புலவர்களின் சிறப்பை இயம்புகின்றன. பின்னர் உரை நடையின் உயர்வு, கல்வியின் பயன், குருவின் மேன்மை, மொழித்திறம் பெறும் வழி என்பன கூறப்பட்டுள்ளன. பன்னிரண்டாம் பாடல் அவையடக்கமாகவும் பதின் மூன்றாம் பாடல் புலவர்களின் அன்புச் சிறப்பைக் கூறுவதாகவும் உள்ளன. சொல்வன்மை, விளக்கும் ஆற்றல், யாப்பு வன்மை, நூல் படைக்கும் ஆற்றல் முதலியன அடுத்து விளக்கப்பட்டுள்ளன. பிறகு, ஒரு பாடலில் பாவலர் ஏறுகளின் புகழ் சொல்லப்பட்டுள்ளன.

காவிய இலக்கணம், காவியத்தின் இருவகை உடல்களாகிய உரை நடை, பாநடைகளின் இலக்கணம் இரண்டும் அடுத்து விளக்கப்பட்டுள்ளன. பிறகு காவியப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன. தற்சம நடைக் காவியங்களுள் ஹர்ஷ சரிதமும், காதம்பரியும் சிறந்தவை என்பது அடுத்து உணர்த்தப்பட்டுள்ளது. அதன்பின் உரைநடைப் புலவர்கள், பாநடைப் புலவர்களின் சிறு பட்டியல் ஒன்று தரப்பட்டுள்ளது. பின்னர், ஆதி காவியங்களை இயற்றிய சிலருடைய பெயர்கள் வருகின்றன. பிறகு, காவியங்களில் சத்தாணம், பெதண்டெ என இருவகை உண்டென்று கூறப்பட்டுள்ளது. அவற்றின் இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன.

அடுத்து, கன்னட நாடு எல்லை காட்டி விளக்கப்பட்டுள்ளது. கன்னட மக்களின் அறிவும் ஆற்றலும் புகழும் கூறப்பட்டுள்ளன. நூல் குற்றம் இன்றி அமைய வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. வடமொழி – கன்னடக் கலப்பு எவ்வகையில் இருக்க வேண்டும் என்பது விளக்கப்படுகின்றது.

நூல் வழுக்களாக, முதலில் ஸ்ருத துஷ்டம் முதலிய நான்கும், இரண்டாவதாக யதிபங்கம் முதலிய ஒன்பதும் கூறப்பட்டுள்ளன. மூன்றாவதாக நூல்வழு, கலைவழு முதலிய ஐந்தும், நான்காவதாகக் காரகம், வசனம் முதலிய எட்டும் இறுதியாக உவம வழுவும் உணர்த்தப்பட்டுள்ளன. நிருபதுங்கனின் நெறி முறைகளைப் போற்றுவோர் சிறந்த காவியம் படைக்கும் திறன் பெறுவர் என்ற முடிவுரையுடன் முதற் பரிச்சேதம் முற்றுப் பெறுகிறது.

சுருங்கக் கூறின் முதற்பரிச்சேதம் முன்னுரை போன்ற பொதுச் செய்திகளையும், நூலில் வரும் வழுக்கள் இருபத்தேழையும் விளக்கு வதாகவும், வள்ளல் நிருபதுங்கனைப் புகழ்ந்து போற்றுவதாகவும், கன்னட மக்களைப் பாராட்டுவதாகவும் உள்ளது எனலாம்.

இரண்டாம் பரிச்சேதம்

இரண்டாம் பரிச்சேதம் அணியிலக்கணம் கூறப்புகுவதாகத் தொடங்குகிறது. தக்கது, தகாதது அறிந்து சொல்லுதல், சீர்கள் சேரும் முறை, வேற்றுமை உருபுகள் நெடிலாதல், அடுக்குத் தொடர்கள் அமைத்தல், அடைமொழிகளின் அமைப்பு என்பவற்றை விளக்குகிறது. அறுவகை எதுகைகள் அடுத்து விளக்கப்படுகின்றன. பிறகு சில இலக்கண நெறிகளும், ஸமம், மதுரம் முதலிய பத்து நெறிகளும், ஒன்பது சுவைகளும், அவற்றைச் சொல்லும் முறைகளும் வடநெறி, தென்நெறி வேறுபாடுகளும் இயம்பப்பட்டுள்ளன. கோமூத்ரி முதலிய சித்திர கவிகளும், சொல், அடி, பா முதலியவற்றின் அமைப்பினால் சுவைகெடுதலும், கூடசதுர்த்தமும் துஷ்கர காவிய வகைகளும் அடுத்துக் கூறப்பட்டுள்ளன. இறுதியில் ஸ்ரீ விஜயன் அருளிய கவியின் பத்தைக் கவீஸ்வரன் தனதாக ஏற்றுக் கொண்டனன் என்று கூறி முற்றுப் பெறுகிறது.

இப்பரிச்சேதம் கவிராச மார்க்கத்தில் சொல்லணி இலக்கணத்தைக் கூறுவதாகும் என்ற குறிப்பும் காணப்படுகின்றது.

மூன்றாம் பரிச்சேதம்

மூன்றாம் பரிச்சேதம் பொருளணி இலக்கணம் கூறுவது. சாதியணி முதல் வாழ்த்தணி வரை முப்பத்து நான்கு அணிகளின் பெயர்களை முதலிற்கூறி, அதன் பின் ஒவ்வோரணியாக எடுத்துக் கொண்டு அதன் இலக்கணம், வகை, காட்டு, விளக்கம் ஆகியவற்றைத் தருவதாக இப்பரிச்சேதம் அமைந்துள்ளது. இப் பொருளணிகள் பெரும்பாலும் தமிழில் உள்ள தண்டியலங்காரம் கூறும் அணிகளை ஒத்துள்ளன. ஆனால் வைப்பு முறை முற்றிலும் மாறுபட்டுள்ளது. எடுத்துக்காட்டுப் பாடல்கள் சிலவற்றின் பொருத்தம் புலனாவது மிகவும் அரிதாயுள்ளது.

1. சாதி, 2. உருவகம், 3. வேற்றுப் பொருள் வைப்பு, 4. வேற்றுமை, 5. நிரல் நிறை, 6. தீவகம், 7. உவமை, 8. அதிசயம், 9. ஒப்புமைக் கூட்டம், 10. ஆட்சேபம், 11. சிலேடை, 12. தற்குறிப்பேற்றம், 13. சூட்சுமம், 14. விசேடம், 15. சமாயிதம், 16. சமாசம், 17. பரியாயம், 18. விரோதம், 19. அப்ரஸ்துதம், 20. நிதர்சனம், 21. ஸஹோக்தி, 22. சங்கீரணம், 23. பரிவிருத்தி, 24. வியாஜஸ்துதி, 25. ஏது, 26. விபாவனை, 27. லவம், 28. உதாத்தம், 29. அவநுதி, 30. சுவை, 31. ஊர்ஜிதம், 32. வ்யாவிருத்தி, 33. ஆர்வமொழி, 34. வாழ்த்து என்னும் முப்பத்தி நான்கும் இப்பரிச்சேதத்தின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டுப் பின்னர் முறையாக விளக்கப்பட்டுள்ள அணிகளாம். தொடக்கத்தில் குறிப்பிடப்படாத பாவிகம், தொளி என்ற இரண்டு அணிகளும் 35,36 – ஆவது அணிகளாக அமைந்துள்ளன. இங்ஙனம் முப்பத்தாறு அணிகளையும் விளக்கி முடித்த பின், ஒன்பது பாடல்கள் பெருங் காப்பியத்தின் இலக்கணம் கூறுகின்றன.

இறுதியில் பதினான்கு பாடல்களில் இந்நூலின் ஆசிரியன் புகழ் விரித்துரைக்கப்படுகின்றது. இந்நூலாசிரியன், நிருபதுங்கனின் நண்பன் என்பதும், ஸ்ரீவிஜயன் என்பதும் கூறப்படுகின்றன. நூலாசிரியன் புகழ் சற்று மிகைப்படவே அமைந்துள்ளது.

பயன்பட்ட பதிப்புக்கள்

இம் மொழிபெயர்ப்புக்குப் பயன்படுத்தப்பட்ட கவிராச மார்க்கப் பதிப்புக்கள் இரண்டு. முதலாவது, மைசூர் டி.வி. கே. மூர்த்தியவர்களின் வெளியீடு. இதன் பதிப்பாசிரியர் பேராசிரியர் எம்.வி. சீதாராமையா

அவர்கள். வெளியிடப்பட்ட ஆண்டு 1975. இரண்டாவது, சென்னைப் பல்கலைக் கழகப் பதிப்பு. இதனைப் பதிப்பித்தவர்கள் திருவாளர்கள் ஏ. வேங்கட ராஜுவும், பண்டித ஹெச். சேஷையங்காரும் ஆவர். முதற் பதிப்பு 1930 ; மறுபதிப்பு 1973. இவ் வெளியீடுகளின் இறுதியில் ஐந்து பாடல்கள் மிகைப் பாடல்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவை நால்வகை எதுகைகளை விளக்குவன.

முடிவுரை

பொதுவாகக் கூறுமிடத்து மொழிபெயர்ப்பு என்பது ஒரு கடினமான கலை. முதல் நூலின் கருத்துக்களேயன்றி உணர்வுகளும் மொழி பெயர்ப்பில் இடம் பெற வேண்டும். மொழி பெயர்ப்பு நடையும் தெளிவாக, எளிதாக, இனிதாக அமைய வேண்டும். இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டே இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாயினும் இது எந்த அளவிற்கு வெற்றி பெற்றுள்ளது என்பதை ஆய்வாளர்களே முடிவு செய்ய வேண்டும். அறிஞர் பெருமக்களின் திருத்தங்களும் குறிப்புக்களும் நற்பயன் நல்கும் என்பதைப் பணிவுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இந்திய மொழிகள் பள்ளி இந்திய மொழிகளில் முதன் முதலில் தோன்றிய இலக்கண நூல்களையெல்லாம் தமிழில் மொழிபெயர்க்கும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கன்னட மொழியின் முதலாவது இலக்கணமாகிய கவிராச மார்க்கம் என்னும் இந்நூலினைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியினை எனக்கு வழங்கிய இந்திய மொழிகள் பள்ளித் தலைவர் பேராசிரியர் முனைவர் சு.இராசாராம் அவர்கட்கு என் உளம் நிறைந்த நன்றியினைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இத்தகைய நற்பணிகள் பல சிறப்பாக நடைபெற்று வருதல் பெரிதும் பாராட்டுக்குரியதாகும். உரிய அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தண். கி. வேங்கடாசலம்.

உள்ளுறை

முதற்பரிச்சேதம்

பொருள்		செய்யுள் எண்
1.	நிருபதுங்கன் புகழ்	1 - 2
2.	கலைமகள் புகழ்	3
3.	புலவர்கள் புகழ்	4 - 5
4.	புலமையில்லாதவன்	6
5.	உரைநடையின் சிறப்பு	7
6.	நூலறிவில்லாதார்	8
7.	கற்றலின் பயன்	9
8.	குருவின் துணை	10
9.	மொழித்திறம் உயர வழி	11
10.	அவையடக்கம்	12
11.	புலவர்களின் அன்பு	13
12.	சொல்லும் திறன்	14 - 16
13.	பாவலர் ஏறுகள்	17
14.	காவிய இலக்கணம்	18 - 23
15.	காவிய உடல்கள்	24
16.	பாநடை, உரைநடை	25
17.	காவிய இதயம்	26
18.	காவிய நடை	27
19.	காவியம் தருபொருள்	28
20.	உரைநடைப்புலவர்கள்	29
21.	பாநடைக்காவியங்கள்	30
22.	பாநடைப் புலவர்கள்	31
23.	ஆதி காவியங்கள்	32
24.	சத்தாணம், பெதண்டெ	33 - 35
25.	கன்னட நாடு	36 - 37
26.	கன்னட மக்கள்	38 - 42
27.	குற்றம் களைதல்	43 - 47
28.	பழங்கன்னடத்தின் உயர்வு	48 - 50
29.	வடமொழி – கன்னடக் கலப்பு	51 - 61
30.	நூல் வழுக்கள், நான்கு	62 - 68
31.	ஒன்பது குற்றங்கள்	69 - 104
32.	நூல், கலை, உலக, தேச வழுக்கள்	105 - 110
33.	குற்றங்கள் பல	111
34.	குற்றம் களைக	112
35.	காரகம் முதலிய எட்டு வழுக்கள்	113 - 142
36.	உவம வழு	143 - 146
37.	நிருபதுங்கன் நெறி	147 - 150

இரண்டாம் பரிச்சேதம்

பொருள்		செய்யுள் எண்
1.	காவிய அணிகள்	1 - 3
2.	சொல்லும் முறை	4 - 5
3.	சீர்கள் சேர்தல்	6 - 8
4.	சொற்கள் சேர்தல்	9 - 12
5.	சொற்கள் சில	13 - 14
6.	வேற்றுமை உருபுகள் நெடிலாதல்	15 - 24
7.	கூறியது கூறல்	25 - 26
8.	அடைமொழியமைத்தல்	27 - 30
9.	எதுகைகள்	31 - 45
10.	இலக்கண மரபுகள்	46 - 50
11.	வடநெறி, தென்நெறி	51 - 53
12.	பத்து நெறிகள்	54 - 97
13.	ஒன்பது சுவைகள்	98 - 100
14.	இருநெறிகள் பற்றி மேலும் சில	101 - 111
15.	சித்திர கவிகள்	112 - 113
16.	சுவை கெடுதல்	
17.	கூடசதுர்த்தம்	119 - 120
18.	ஒரெழுத்துப் பாடல்	121
19.	ஈரெழுத்துப் பாடல்	122
20.	அரிய சொற்கள்	123
21.	அதாலவ்யம்	124
22.	நிரோட்டகம்	125

23.	ஸர்வதோபத்ரம்	126
24.	நிர் உத்தரம்	127
25.	கோமுத்ரி	128
26.	யமகம்	129 - 138
27.	அர்த்தப்ரமணம்	139
28.	முரசபந்தம்	140
29.	க்ரியா கோபகம்	141
30.	சக்கர பந்தம்	142
31.	துஷ்கர காவியம்	143 - 144
32.	பாவெ	145
33.	நுஸுளு	146
34.	அஸ்பஷ்டதக்ஷரம்	147
35.	வர்ண வியத்யயம்	148
36.	பிந்துச் சுதகம்	149
37.	ஓர்நுடி	150
38.	வர்ணச் சுதகம்	151
39.	ஸமந்தகம்	152
40.	முடிவு	153 - 155

மூன்றாம் பரிச்சேதம்

பொருள்		செய்யுள் எண்
1.	பொருளணிகளின் பெயர்கள்	1 - 5
2.	சாதி	6 - 10
3.	உருவகம்	11 - 26
4.	வேற்றுமைப்பொருள் வைப்பு	27 - 37
5.	வேற்றுமை	38 - 48
6.	நிரல்நிறை	49 - 51
7.	தீவகம்	52 - 58
8.	உவமை	59 - 89
9.	அதிசயம்	90 - 94
10.	ஒப்புடைக்கூட்டம்	95 - 98
11.	ஆட்சேபம்	99 - 107
12.	சிலேடை	108 - 113
13.	தற்குறிப்பேற்றம்	114 - 116
14.	சூட்சமம்	117 - 119
15.	விசேடம்	120 - 122
16.	சமாயிதம்	123 - 125
17.	சமாசம்	126 - 130
18.	பரியாயம்	131 - 133
19.	விரோதம்	134 - 137
20.	அப்ரஸ்துதம்	138 - 140
21.	நிதர்சனம்	141 - 153
22.	ஸஹோக்தி	154 - 155

23.	சங்கீரணம்	159 - 157
24.	பரி விருத்தி	158 - 159
25.	வியாஜஸ்துதி	160 - 162
26.	ஏது	163 - 167
27.	விபாவனை	168 - 169
28.	லவம்	170 - 172
29.	உதாத்தம்	173 - 181
30.	அவநுதி	182 - 186
31.	சுவை	187 - 197
32.	ஊர்ஜிதம்	198 - 199
33.	வ்யாவிருத்தி	200 - 202
34.	ஆர்வமொழி	203 - 204
35.	வாழ்த்து	205 - 206
36.	பாவிகம்	207
37.	தொனி	208
38.	பெருங்காப்பிய இலக்கணம்	209 - 217
39.	நூலாசிரியன் புகழ்	218 - 231
40.	எதுகை (மிகைப்பாடல்கள்)	1 - 5

கவிராச மார்க்கம்
முதல் பரிச்சேதம்
நிருபதுங்கன் புகழ்

1. கவுத்துவ மணியொளி கான்றிட ஒண்துகில்
அசையும் மார்பினில் அன்புடன் அகலாத்
திருமகள் தரித்தவன், சிதைவிலா நீதியன்
நிருப துங்கனாம் நிகரிலா வள்ளலே.

2. செயற்கருஞ் செயலினன், செப்பருந் திறலினன்,
நயத்தகு விருப்பினன், வீர நாரணன்
வியத்தகு[1] அதிசய தவள விருதினன்
இயல்பினில் நமக்குயர் சிறப்பினை ஈகுவன்.

கலைமகள் புகழ்

3. வெள்ளை நிறத்தினள், விரும்பும்இன் குரலினள்,
ஒள்ளிய பாக்களை உவப்புற வழங்குவள்;
வெள்ளிய[2] அன்னத்தின் மிகுபுகழ் யான்பெற
உள்ளம் பொருந்துவள் உயர்புகழ்க் கலைமகள்.

புலவர்கள் புகழ்

4. சீருறும் அணிசெறி தீஞ்சுவைக் கவிதைகள்
நேருறும் அனைவர்தம் வாயெலாம் நிரம்புக!
பேருறு புலவர்கள் பெற்றியின் உதவுவர்
ஏருறு நூலிதை எளியனேன் இயற்றவே.

5. வியன்மிகு அதிசய தவள விருதினன்
நயன்மிகு அணியியல் நன்கறி நாவலன்
இயம்பரும் அவை திகழ் பாவலர் ஏறுகள்
'தயங்கிடேல்' என வெனைச் சால்புடன் தாங்குவர்

---

1. அதிசய தவளன் என்பது நிருபதுங்கனின் விருதுகளில் ஒன்
2. அன்னம் நீரினின்றும் பாலைப் பிரித்துப் பருகும் சிறப்பினையுடையது.

புலமையிலாதவன் புகுவனோ ?

6. இலக்கணம் காவியம் நாடகம் எனுமிவை
துலக்கிடும் அணிநயம் தோய்கி லாதவன்,
புலமைசால் தேவ குருநிகர் புரவலன்
நலமிகு துங்கனின் நகர்தனுள் புகுவனோ?

உரைநடைச் சிறப்பு

7. மான், பசு, புள்ளினம் இவற்றிடை வழங்கிடும்
பான்மை யுற்றிலா மொழிகள் பலவகை.
மேன்மை மேவிய விற்பனர் தம்மிடைத்
தான்மிக இயல்பினில் தழைக்கும் உரைநடை.

நூலறிவிலார் நல்லவை தீயவை அறியார்

8. புல், செடி, அறுகெனும் இவற்றிடைப் பொருந்திடும்
பல்வகை வேற்றுமை பசுவினம் உணருமோ?
நல்வகை நூலறி வெய்திடா நரர்களும்
நல்லவை தீயவை நன்கறி நலத்தரோ?

கற்றலின் பயன்

9. உத்தம நூல்களை ஓதி உணர்ந்திடல்
மெத்தவும் நலந்தரும்; தொன்மை மேவிய
வித்தக இலக்கியம் விருப்புடன் கற்றிடின்
புத்தி நுட்பமும் புலமையும் பொலியுமே.

குருவின் துணை

10. படிப்பினை நாடுவோர் பாங்குடன் குருவினைப்
பிடிப்புடன் நாடியே பேணிக் கற்றிடின்
எடுப்புடன் சொல்லும்நல் ஆற்றல் இயைந்திடும்.
மடுத்ததைக் கிள்ளையும் பூவையும் வழங்குமே.

மொழித்திறம் உயரும் வழி

11. ஒண்மையும், இயற்கை உணர்வும், உகந்திடும்
நுண்மைய புலவரை நோக்கிப் போற்றலும்,
திண்மைய நூல்பல தெளிந்து கற்றலும்
உண்மையில் மேவிடில் உயர்வுறும் மொழித்திறம்.

அவையடக்கம்

12. படர்ந்துசெல் உளத்தினைப் பணித்து நிறுத்திடத்
திடமிலேன் சிறியனேன்; செய்வதென்? செப்புமின்.
தடையிடை இன்றிநூல் படைத்தலும் சாலுமோ?
அடர்ந்தநூல் அறிவிலார் பிறருளம் கவர்வரோ?

புலவர் அன்பின் பயன்

13. வகைவகை நோக்கியே மாண்புறு புலவர்தம்
தொகையுடை அன்பினைத் துகளறப் பெற்றிடின்
தகையுறும் மார்பினில் தவழ்மணி மாலைபோல்
புகழுடை உரைநடை பொலிவுறும் எளிதினில்.

சொல்லும் திறன்

14. நினைந்து நினைந்து மற்றவர் சொற்களைத்
தனதுறு நூலினில் தான்பயன் படுத்திடின்
இனமலைக் குகைதரும் எதிரொலி நிகர்க்குமே
புனையும்நற் சொற்றிறம் பொருந்திடான் ஆவனே.

15. எண்ணிய பொருளினை இதமுறப் பற்பல
வண்ணமாய் மற்றவர்க் குணர்த்த வல்லவன்
திண்ணிய சொல்வலன்; சிறியதுட் பெரியது
நண்ணிட விளக்குவோன் நனிமிகச் சிறந்தவன்.

16. சொற்களை யாப்புறத் தொடுத்துச் சொல்பவன்
முற்பட மொழிந்தவன் தன்னினும் உயர்ந்தவன்;
பொற்புடன் சரளமாய்ப் புலமைசால் நூல்தரும்
விற்பனன் முன்னையர் அனைவரின் மேலவன்.

பாவலர் ஏறுகள் சிலரே

17. உலகினில் மாந்தர்தம் வாய்மொழி உணர்பவர்
சிலருளர்; அவரிடைச் சிற்சிலர் செந்நெறி
நலமுறக் கொண்டவர்; நயமிகு புலமையில்
இலகிடும் பாவலர் ஏறுகள் மிகச்சிலர்.

காவிய இலக்கணம்

18. பாவமும் அறங்களும் பகுத்துக் காட்டிடும்,
மேவிய நன்மையும் தீமையும் விளக்கிடும்,
நோவுறு துன்பமும் இன்பமும் நுவன்றிடும்
தாவறு புலமைசால் தலைவர்தம் காவியம்.

19. உலகியல், சமய நெறியறி வுறுத்தலும்
நிலவிய புகழ்நிலை இதுவென நேர்தலும்
புலனெறி வழக்குடைப் பொற்புறு நூல்களில்
நலனுறு புலவர்கள் நன்கு புணர்ப்பரே.

20. அறம்,பொருள் இன்பம்,வீடாகிய பேறுகள்
திறம்படு புலவர்தம் நூல்களின் செம்பொருள்.
முறையுற மொழிந்திடில் மொய்கடல் உலகெலாம்
பெறும்உயர் நலமெனப் பேசுவர் பெரியவர்.

21. ஓர்ந்துநற் காவியம் ஒளியுறப் புனைபவன்
ஆர்ந்தநற் கவிஞனாம் அறிகுவிர்; அன்னவன்
பேர்ந்திடும் ஊழிகள் பெயரினும் நிலைப்பவன்;
சார்ந்திடும் பகழெனும் கையலின் நாயகன்.

22. காவியம் என்பது கண்ணுற நோக்கிடில்
பாவமும் பல்வகை முறைகளும் பயில்வது;
நாவியல் மொழிவளம் நனிமிக வுடையது;
மேவிய அணிகளால் மிளிர்ந்து பொலிவது.

23. மண்மிசைத் திங்களாம் மன்னவன் வகுத்துள
திண்மை நெறிப்படிக் காவியச் செல்வனுக்கு
எண்ணுறும் அணிகளும் உடலும் இரண்டுமே
எண்ணிடின் வேறுவே றாதல் இயையுமே.

காவியத்தின் உடல்கள்

24. எழில்பெறு காவிய உடல்களில் இருவகை
வழுவறு பண்புடை வழக்குகள் உள; அவை
எழுதிடும் உரைநடை இசைத்திடும் பாநடை.
முழுதுணர் புலவர்கள் மொழிவர் இங்ஙனே.

பா நடை, உரை நடை

25. பாநடை என்பது யாப்பியல் பயில்வது.
தூநடை யாகிய உரைநடை சொல்லிடில்
மேல்நிலை அணி, வினை, பெயர்கள் விரவிட
நூல்நெறிப் பொருளினை நுவலும் என்பரே.

காவிய இதயம்

26. காவிய இதயமாம் தற்சமம் கருதிடின்
தாவிலா ஹர்ஷ சரிதம்,கா தம்பரி
மேவிய புகழுடை மேன்மை நெறியன.
பாவியல் அணிவகை பாவலர் அறிவரே.

காவிய நடை

27. பண்ணிய காவியம் உரைநடை பாநடை
என்னுமிவ் விரண்டையும் இயைத்துநன் கியற்றுவர்.
மன்னிய சிற்சிலர் வளமுறும் உரைநடை
தன்னில்நற் காவியம் தகவுறச் சமைப்பரே.

காவியம் தருபொருள்

28. காலங்கள், மொழிகள், கருதிடும் உலகியல்
சாலவும் போற்றிடும் சமயக் கூறெலாம்,
கோல,நல் வர்ணனை குலவிடு விழுப்பொருள்
ஞாலம் நயந்திட வகைவகை நல்குமே.

உரைநடைப் புலவர்கள்

29. விமலோ தயன், நா கார்ஜுனன், மிகுபுகழ்
அமை ஜய பந்து,துர் விநீதன் ஆதியோர்,
தமைநிலை நிறுத்திடும் தகவுடை உரைநடை
அமிழ்தினை வழங்கியே அரும்புகழ் அடைந்தனர்.

பா நடைக் காவியங்கள்

30. பாவகை யாவுமே பயில்பவர் உளங்கொளும்
மீவகை யாப்பியல் நெறியுற மிளிர்வன;
மேவிய கல்வியில் மிக்கவர் இயற்றிய
தாவிலா விருத்த இனங்களில் தழைப்பன.

பா நடைப புலவர்கள்

31. குணசூரி, நாரணன், பாரவி, குவலயம்
வணங்கிடு காளி தாசன், மாகனாம்
இணங்கிய புகழுடைப் பாவலர் ஏறுகள்
மணங்கமழ் காவிய வேட்கை வளர்த்தனர்.

ஆதி காவியங்கள்

32. ஸ்ரீவிஜயன், கவீஸ்வரன், பண்டித சந்திரன்,
லோக பாலன் முதலிய புலவர்கள்
பொருள் நலம் பொலிவுறப் புனைந்தன யாவும்
ஆதி காவிய உதாரணம் ஆகும்.

சத்தாணம்,பெதண்டெ

33. மற்றைய மொழிகளில் மன்னிடாச் சிறப்பினைப்
பெற்றகன் னடத்தின் பெரும்பழம் புலவர்கள்
சத்தாணம் பெதண்டெ என்னும் இருவகைக்
காவிய அமைப்பினை ஏற்றனர் கண்டீர்

பெதண்டெ

34. @கந்தமும் தூய விருத்தமும் கலந்து
வகைவகை யாகி நுட்பம் வயங்க
அழகு மிளிர அமைந்திடும் தன்மையில்
இயற்றுதல் பெதண்டெயின் இலக்கணம் என்க.

சத்தாணம்

35. கந்தம் பலவுடன் விருத்தமும் ஆங்காங்கு
வந்து பயில *அக்கரம், இசைப்பா
நாலடிப் பாடல், மூன்றடிப் பாடல்கள்
அணிபெற அமைப்பது சத்தாணம் ஆகும்.

கன்னட நாடு

36. காவிரி தொடங்கிக் கோதா வரிவரை
மேவிக் கிடப்பது கன்னட நாடு;
நிலவுல கதனில் நிலவிடும் நாடுகள்
எல்லா வற்றினும் ஏற்றமாம் நாடு.

+ கன்னட சத்துவம்

37. கிசுவொளலு, கொப்பண நகரம், புலிக்கரை
ஒக்குந்தம் எனும் நான் கெல்லையுள் உயர்ந்து
திகழும் கன்னட சத்துவம்; தெளிக.

@ கந்தம் என்பது ஒரு விருத்த வகை.

* அக்கரம் என்பது ஒருவகை விருத்தம்.

\+ கன்னடசத்துவம் – கன்னடப்பண்பு.

கன்னட மக்கள்

38. முறையுற மொழிதலும் மொழிந்ததை நுட்பமாய்
உணர்ந்து கேட்டலும் வல்லவர் கன்னடர்;
சதுரர்; தாமே கற்றிலர் எனினும்
காவியம் படைக்கும் கலைத்திறம் மிக்கவர்.

39. மக்களில் வளமுடை அறிஞரே யன்றியும்
மற்றுளோர் தாமும் மொழிநடை வல்லவர்;
சிறுவரும் ஊமையர் தாமும் சிறப்புடன்
திறமிகு சொற்களைச் செவ்விதின் விளக்குவர்.

40. நிபுணர் அல்லரும் திறமையில் நிகரிலர்;
கல்லா தாரும் கற்றவர் போன்று
குறைகளைத் தூக்கிக் குறைசிறிது காணினும்
முந்துற வந்து திறனாய்வு செய்வர்.

41. வடமொழி பிராகிருதம் என்று வழங்கும்
இருமொழி தாமும் நிலையாய் இருப்பன.
இருவகை மொழியிலும் அவரவர் இச்சையில்
இயற்றிய இலக்கிய இலக்கணம் உண்டே.

42. இயலா விடினும் இயல்வகை முயன்று
எவ்வா றேனும் இயம்புவன் என்பர்.
குருவினைப் போன்று குறையறக் கூறலர்;
கன்னட மக்களே கன்னடக் குருக்களாம்.

குற்றம் களைதல்

43. காவியம் தன்னில் சிறுகுறை காணினும்
காவியம் முழுதும் மாசுறும் கண்டீர்.
சுடரும் கண்களில் படிந்த தூசுபோல்
உறுத்தும் என்பதை உணர்ந்திடல் வேண்டும்.

44. எனவே, வள்ளல் நிருப துங்கன்
இயம்பிய வாறு மடிமை யின்றி
உயர்முறை ஓர்ந்து குற்றம் உறாவகை
ஆய்ந்துரைப் பதுவே காவியம் ஆகும்.

45. கண்கள், தமக்கிடும் மையினைக் காணுமோ?
அவரவர் குறையினை அவரவர் அறிவரோ?
புலமையோன் ஆயினும் வேறுநற் புலவர்பால்
கற்பன கற்றுக் காவியம் இயற்றுக.

46. நாட்டு வழக்கும் வட்டார வழக்கும்
பல்வேறு வகையின ஆதலின், தெளிவுறக்
கன்னட நடையில் வரும்குறை யாவையும்
திண்ணமாய்க் கூறிடச் *சேடனும் திகைப்பனே.

47. ஆகலின் தொன்மைப் புலவர்தம் நெறியில்
அறிந்த வரையில் ஆழ்ந்து நோக்கிக்
குறைகளைக் களைந்தென் குறுமதிக் கேற்பத்
தோன்றிய வற்றைப் புலவர்கட் குரைப்பேன்.

பழங்கன்னடத்தின் உயர்வு

48. நாட்டு வழக்கினை நன்கறி யாமையின்
காவியம், காவிய இலக்கணம் இரண்டுமே
நிலையென நினைந்து பழங்கன் னடத்தைப்
பழித்துரை பகர்வர் நூலறிவு குறைந்தோர்.

49. அரச குருவே ஆயினும் அவர்உரை
பொருந்தா தாயின் போற்றிட மாட்டோம்!
மணிமுடி யனைய பழங்கன் னடத்தைக்
கன்னட மக்களே காத்திடல் இயலும்.

---

* சேடன் – ஆதிசேடன்

குறை குறையே

50. நமக்குக் கிடைத்த பழங்கா வியங்களில்
குறைசில உள; அவை குணமாய்த் தோன்றும்.
முதியோள் புணர்ச்சி இன்பம் போலது
குறையே என்னக் கொள்ளுதல் வேண்டும்.

வடமொழி - கன்னடக் கலப்பு

51. தற்சமந் தன்னில் இணைந்து பிணைந்த
கன்னட நடையினைக் கண்டு கைக் கொள்க.
நூலறி புலவர் நுவன்ற நெறியிது!
வடமொழி கலந்து வழங்குதல் தகாது.

* அவ்யயங்கள்

52. அஹரஹ ருச்சைர் நீச்சை
ர்முஹுர் முஹு ரிதஸ்தத: புந: புநரந்த
ர்பஹி ராரித ப்ராது ரஹோ
ஸஹஸாதி களவ்யயங்கள ஸஹமாங்கள்.

(பொருள்: தினம் தினம், மேல் கீழ், மற்று மற்று, இங்கு அங்கு, மீண்டும் மீண்டும், உள்ளே வெளியே, ஆதி, இகம், காட்சி, வியப்பு, உடனே– முதலியன தவிர்க்க முடியாத அவ்யயங்கள்.)

வடமொழிக்கலப்பு

53. கன்னட மொழியில் வடமொழிக் கலப்பு
காவிய அழகினைச் சிதைத்திடும் கண்டீர்.
பின்வரும் பாடல் வடமொழி பிணைந்ததால்
பறையொலி போலக் கடூரம் பயக்கும்.

---

* அவ்யயங்கள் – பால், காலம் காட்டாதவை; இடைச் சொற்கள் போல்வன.

இன்னா ஓசைக்கு எடுத்துக்காட்டு

54. பஹிரந்த ருப வநங்களொ
ளஹுரஹமா பரப்ரு தங்களுலிவ ரவங்கள்
ஸஹஸா தளமள கொளுஸித
வஹோ மநங்கள நிதஸ்ததம் விரஹிகளா.

(பொருள்: சோலையின் உள்ளும் புறமும் தினமும் குயில்கள் கூவும் இசைகள் பிரிந்தோர் உளத்தை ஒருங்கே அலைக்கழிக்கும். இஃதென்ன வியப்பு?)

தற்சமக் கலப்பு

55. தற்சமச் சொற்கள் கன்னடம் தன்னில்
கலந்து வருதல் காதினுக்கு இன்பம்;
நலந்தரும் முழவு முதலிய கருவிகள்
நல்கும் இசைபோல் நன்கனம் இனிக்கும்.

இன்னோசைக்கு எடுத்துக்காட்டு

56. பஹி ருத்யாநா நதரதொள்
ஸஹஸோதித மத்த கோகி லோச்சைர் த்வாநம்
முஹுரா கர்ணிஸெ படெத
த்தஹர் நிஸம் பெர்சநந்தரங்கக் கெள்ளா.

(பொருள்: வெளியே உள்ள சோலையில் உடன் தோன்றிய மதக் குயிலின் உச்ச ஒலி மேலும் மேலும் கேட்பது என் மனத்திற்கு மிக்க இன்பம் தந்தது.)

ஆய்ந்து அமைக்க

57. எண்ணில் அடங்காப் பண்புகள் இயைந்த
வடமொழி மரபை ஆய்ந்துநன் குணர்ந்து
புகழ்மிகு கன்னட நடையில் புணர்த்திடின்
காவியம் ஒளிபெறும்; என்றும் கடிந்திடார்.

58. தெளிவுற இதனைத் தெரிந்துகொள் ளாமல்
கன்னட மொழியுடன் வடமொழி புணர்த்தித்
தொகைநிலை யாக்குதல் கொதிக்கும் பாலில்
மோர்த்துளி சேர்ப்பது போலக் குற்றமாம்.

தவறான கலப்புக்கு எடுத்துக்காட்டு

59. அரஸு குமாரந நாயத
தரகடெ கண்ணிந்தெ நோடி கௌதிஸமேதம்
பரிகத நகெயிந் திர்தெம்
குருநாண் பரதிந்த மெறகி முகதாவரெயம்.

அரஸு + குமார, ஆயததரெ + கடெகண், கௌதி + ஸமேதம்,
பரிகத + நகெ, குரு + நாண், முக + தாவரெ – இவை தவறான கலப்பு (அரி சமாசம்) ஆகும்.

(பொருள்: அரச குமாரனைப் பரந்த கடைக்கண்களால் பார்த்துத் தோழியருடன் நாண் உற்று, அதனால் முகத்தாமரை குனிந்து, சென்று தேய்ந்த சிரிப்பில் இருந்தேன்.)

சரியான கலப்புக்கு எடுத்துக்காட்டு

60. நரபதி தநயந நாயத
தராளா பாங்க தொளெ நோடி கௌதியரொடநாம்
பரிகத ஹாஸ்ய தொளிர்தெம்
குருலஜ்ஜா பரதினெறகி முகஸரஸிஜமம்.

(இதன் பொருள் 59–ன் பொருளே.)

அரஸு + குமார, ஆயததர + கடெகண், கௌதி + ஸமேதம்,
பரிகத + நகெ, குரு + நாண், முக + தாவரெ – இவை தவறான கலப்பு.
நரபதி + தநய, ஆயததராளாபாங்க, கௌதியரொட, பரிகத+ஹாஸ்ய, குரு+லஜ்ஜா, முக+ஸரஜிமம் இவை சரியான கலப்பு.

61. மேற்கண்ட நெறியில் தொகைநிலை மேவிடின்
வடமொழி கன்னட ஒலிகள் இயைந்து
பொன்னில் மணிகளைப் பதித்தது போன்று
காவியம் எல்லாம் கவினுறப் பொலியும்.

நூல் வழுக்கள்

62. ஸ்ருத துஷ்டம், அர்த்த துஷ்டம்
ஸ்ருதி கஷ்டம், கல்பனோக்தி கஷ்டம்
என்பவை நான்கும் நூல்வழு வெனவே
க்ருதக்ருத்ய மல்ல வல்லபன் கூறினன்.

(ஸ்ருத துஷ்டம்–ஒலிவழு; ஸ்ருதி கஷ்டம்–ஒலிக் கடூரம். க்ருதக்ருத்ய–வெற்றிமிக்க.)

1.ஸ்ருத துஷ்டம் (ஒலிவழு)

63. நில் தோளம் பர்புது ஸ
ய்தல்தூரும் (தூரமெ நெடெ துடகர்ப்பூரம்)
கல்துல் லிந் தோடுவ மெம்
பல்துண்ணிம் தந்த கூளநூா ஸங்கம தொள்.

(பொருள்: நில். நரி வருகிறது. சரியன்று ஊரும். வழியோ தூரம். கள்ளர் மிகப்பலர். கவனமாக இங்கு ஓடுவோம். கொண்டுவந்த உணவினை அந்த சங்கமத்தில் நன்கு உண்ணுக.)

2. அர்த்த துஷ்டம் (பொருள் வழு)

64. நொதூர்த்வ ரேத நொள் புரு
ஹிரண்ய ரேதாதி தீவ்ரநொள் முநிவரதொள்
பரம பகஸ ஹிதெ முததிரெ
பரிஸ்ரமக் கெந்ந நிர்விசேஷ நொளாகள்.

(பொருள்: எச்சிறப்பும் இல்லாத புரு, அக்கினி முதலானவர்களைவிடத் தீவிரனான, யோகியான, முனிவனான என்னிடம் சுந்தரி மகிழ்வுடன் இருப்பின் அது என் முயற்சியின் பயனாகும்.)

பாடல் 64–இல், 'ஊர்த்வரேத' என்பது யோகி என்றும், பெண்வீரிய வெளிப்பாடு என்றும் பொருள் மயக்கம் செய்யும். அவ்வாறே 'பரமபக' என்பது சுந்தரி என்றும், யோனி என்றும் பொருள் மயக்கம் விளைக்கும்.

3. ஸ்ருதி கஷ்டம் (ஒலிக்கடூரம்)

65. பரதர்கா பார்வர்கா
ய்தரஸர்கா கொடியரப்ப நால்வர்காகள்
ஸ்திர கோபாத்யாய க்ஷமா
பரி பால்ய க்ஷேத்ர கர்ஷணங்கள் க்ரியிகள்.

(பொருள்: வணிகர், அரசர், பார்ப்பனர். வேளாளர் எனும் நால்வகையினர்க்கும் பசுக்காத்தல், ஓதல், ஆட்சி, உழவு என்னும் பணிகள் உண்டு.)

4. கல்பனோக்தி கஷ்டம் (தெளிவின்மை)

66. மஸகி பெஸதிர்து விவரம
நஸியத றெடெ வொத்தி பொக்கு கெலநம் கொர்பு
த்தெஸது பிதிர்தா(ர்தே) ள்கே
ள்கெ ஸமஞ்ஜஸ நிக்கி மிக்கநர்! வாஹினியம்.

(பொருள்: சினமுற்று, ஆணையுடன் குகைபுகுந்து, சிலரைக் கொன்று வீழ்த்தி, முழங்கி, எழுஎழு வெனக் கூவிப் பகைப்படையை வென்றான்.) இங்கே, கொன்று வீழ்த்திய பின் எழுஎழுவெனக் கூவுதல் பொருந்தாமையும் தெளிவின்மையுமாம்.

வழு நீக்குக

67. முந்துறக் கிளந்த வழுநான்கும் அறிந்து
கயவர் நட்பைக் களைதல் போலக்
கல்லார் இழைத்த வழுக்களைக் களைதல்
தக்க முறையெனச் சாற்றுதல் தகுமே.

வழு அமைதி

68. எளிதில் கற்க இயலாக் கடுநடைக்
காவியங் களில் ஸ்ருதி கஷ்டம் வழுவிலை.
நாடகம் தன்னில் நகைச்சுவை நல்கலின்
மற்றை மூன்றும் வழுவெனல் இல்லை.

ஒன்பது குற்றங்கள்

69. யதி பங்கம், அர்த்த சூன்யம்
விருத்தார்த்தம் புனருக்தார்த்தம்
சுத யாதாஸங்கியம், வ்யவ ஹிதம்
அச்சந்தம், விஸந்திகம், நேயார்த்தம்
என்னும் ஒன்பது குற்றம் இயம்புவர்.

முரணுதல் தீது

70. சாத்திரம், சமயம், நியாயம் கலைகள்,
காலம், உலகம், தேசமொடு முரணின்
காவியம் என்னும் காரிகை உயிரை
அரவின் நஞ்சினால் அகற்றுதல் போலாம்.

1. யதிவழு

71. யதி எனும் நிறுத்தம் உயிர்ப்புநிலை யாகும்.
யாப்பிலக் கணத்தில் யாத்தது தெளிந்து
விருத்த இனத்தின் காவிய நெறியில்
பொருத்தமாய் இதனைப் போற்றிடல் வேண்டும்.

எடுத்துக்காட்டு

72. கேடடஸிதந்து *பகெ(யு)ம்
கூடது கூடிதுது மழிது விபரீதமுமம்
மாடுகு மதறிம் கர்ம
க் கோடி பர்தும் கல்க * மறிவரார் பூதளதொள்
*இக்குறியிட்ட இடங்களில் யதிவழு வந்துளது.

(பொருள்: துன்பம் வந்தபோது மனம் இயல்பு கெட்டு விபரீதம் விளைக்கும். அதனால் உலகில் வினைக்கு அஞ்சி ஓடி வாழ்தல் யாருக்கு இயலும்?)

வழு அமைதி

73. யதிகெட அமைத்தல் யதிவழு ஆகும்
தளர்ச்சி அலட்சியம் இரண்டும் இன்றிக்
கூறும் போது நிறுத்திக் கூறுதல்
இயலின் ஆங்கது வழுநிலை இல்லை.

எடுத்துக்காட்டு

74. கேடடஸி தொடம் பகெ(யு)ம்
கூடது கூடிதுது மழிது விபரிதமுமம்
மாடுகு மதறிம் கர்ம
க் கோடி பர்தும் கல்கெ கல்தரார் பின்னணமம்.
(இதன் பொருள் 72–ன் பொருளே.)

புறனடை

75. பழம்பெரும் கன்னடப் புலவர்கள் விருப்புடன்
குறைகளைக் குணமெனக் கொண்டன ராகி
நாட்டு வழக்கினை நன்கனம் நாட்டி
முதல் எது கையினை முதன்மையாக் கொண்டு
யதியை மீறினர் என்பதை அறிக.

76. பெருத்த அல்குலும் பெருத்த முலையும்
சுமந்து நடப்பவள் நடையழ கொப்ப
எதுகை கருதிப் புலவர்கள் ஏற்கும்
வழக்கது தானும் வனப்புமிகப் பெறுமே.

77. ஆரியம் மற்றும் கந்தப் பாக்களில்
யதியை எள்ளாது யாத்தல் வேண்டும்.
இரண்டாம் அடியின் இறுதி நிலையும்
நான்காம் அடியின் இறுதி நிலையும்
எதுகை பெறுதல் இன்றி யமையாது.

2. அர்த்த சூன்யவழு

78. முழுப்பொருள் நன்கு விளங்குமாறு முடிக்க,
பொருள்விளங் காவிடில் அர்த்த சூன்யம்
என்னும் வழுவது ஏற்படும்; எனவே
புலவர்தம் நெறியிற் புரைபடும்; வழுவாம்.

எடுத்துக்காட்டு

79. ஐம்புல வேட்கை அகற்றிய முனிவன்
சோலையுள் புகுந்து சுற்றித் திரிகிறான்;
உள்ளம் அஞ்சும்; இதனை யுணரான்.
முனிவற்கும் பகைவற்கும் தீச்செயல் தகாது.

அர்த்தசூன்யம் அகற்றுக

80. அர்த்த சூன்யம் அமைதல் வழுவாம்.
அர்த்த சூன்யம் அமைந்திடு மாயின்
பித்தனும் குடியனும் பேசுதல் போலாம்.
அறிவுடை ஒருவன் அங்ஙனம் கூறான்.

3. விருத்தார்த்த வழு

81. கூறிய பொருளைக் கூர்ந்து நோக்கின்
ஒன்றோ டொன்று முரண்பட உறுதல்
பெரும்பிழை; தொல்லை; பேசுங் காலை
விருத்த அர்த்தப் பிழைஎன விளம்புவர்.

எடுத்துக்காட்டு

82. மனிதருள் மேலோய்! மற்றவர் நலத்தினை
விழையும் பண்பினோய்! பகைப்படை வீழ்த்தி
வீரமும் திரமும் விளைத்துக் காட்டுக.
உண்மையில் உனக்குப் பகைவரும் உளரோ?

விருத்தார்த்தம் நீக்குக

83. விருத்த அர்த்தமாம் முரண்பொருள் வழுவது
முன்னைப் பாவில் முகிழ்த்தது காண்க.
காவிய வடிவ நெறிமுறை வழாமல்
உயிர்போற் காப்பவர் உயர்வுடைப் புலவோர்.

* 4. புனருக்தார்த்த வழு

84. புனருக்தம் எனபது புகன்றது புகலல்
காவிய நெறிக்கிது களங்கம் ஆகும்.
சொன்ன பொருளையே சுவையிலா வாறு
பன்னிக் கூறுதல் பழுதெனக் களைக.

எடுத்துக்காட்டு

85. உன்றன் பாதம் திருவடி இரண்டினை
அநுதினம் நாளும் மானிடன் மனிதன்
நினைந்திடில் கருதிடில் வானம் சுவர்க்கம்
வாழும் வாழ்வினில் மகிழ்வன் களிப்பன்—
இங்ஙனம் கூறுதல் புனருக்தம் என்க.

5. சுதயாதாஸங்கிய வழு

86. சொல்லும் பொருளும் தொடர்பு பிறழின்
சுதயாதா ஸங்கிய வழுவது தோன்றும்.
காவிய நெறிக்கிது கடியத் தகுவது.
அங்ஙனம் வழுவின் விருத்தார்த்தம் அமையும்.

87. சுதயாதா ஸங்கிய வழுவது தோன்றின்
நேர்ந்த குறைகளை நினைவுடன் நோக்கிப்
புலவர்கள் உணர்தல் பொருந்துவ தாகும்.
எடுத்துக் காட்டுகள் நூல்களில் இருக்கும்.

---

* இரண்டாம் பரிச்சேதம் பாடல் – 25 காண்க

எடுத்துக்காட்டு

88. அளகாநந நயநங்களொ
ளளி நளிநோத்பள விகாஷமம் கெல்துதறிம்
திளி கொள நம்போல் திர்தும்
திளியதி தேநெம் புதும் ததந்வய மதறொள்.

(பொருள்:கூந்தல்,முகம்,கண்களில் வண்டு,தாமரை,நீலங்களின் மலர்ச்சியை வெல்வதால் தெளிந்த குளம் போல் இருக்கும். இந்த அன்வயத்தில் எது குளம் என்பது விளங்குமாறில்லை.)

89. அளி நளிநோத்பள ருசிகள
நளகாநந நயந யுகளிதிம் கெல்திர்தும்
கொள தொளகே நம் நோழ்பக
விளாஸிநி நின்ன வோலதே நதிசயமோ?

(பொருள்: பெண்ணே! வண்டு, தாமரை, நீலங்களின் வனப்பை நின் குழல், முகம், கண்களினால் வெல்வதால் குளத்தில் எதனைப் பார்த்தாலும் உன் வடிவையே காட்டும். இஃதென்ன வியப்பு? இதில் அன்வயம் சரியாக உளது. நீ குளம் என்பது தெளிவாயுள்ளது.)

6. வ்யவஹித வழு

90. வ்யவஹித வழுவே விளக்குங் காலை
அணிநலம் இருப்பினும் பொருள்பொருந் தாமையாம்.
அன்வயம் மாறி வருதலும் அஃதே.
பின்வரும் பாவினைப் பெற்றியின் நோக்குக.

எடுத்துக்காட்டு

91. ஜினேஸ்வரா! உனது பாவத் தொகுதி
நினைத்தவர் தமையும் பண்புகள் தமையும்
அழித்திடும். முனிவர்கள் அணுகி உன்னைத்
துதிப்பதால் பண்பாடு அழிக்கத் தொடங்கினர்.

(நின்னை மனத்தில் நினைப்பவரின் பாவம் கெடும் என இருக்க வேண்டும். அவ்வாறு இன்மையின் வ்யவஹித வழுவாயிற்று.)

7. அச்சந்தவழு

92. காவியந் தன்னில் குரு, லகு அமைப்பில்
தவறு நிகழின் சந்தம் வழுவும்.
அச்சந்தம் என அதை அறைகுவர் மேலோர்.

எடுத்துக்காட்டு

93. வநருஹ தளநயநெ நி
ந்நநெ நெந நெநதிருளொ(ளகொ) றக்திரெ கடெகண்கள்
முநிஸ நபிநயிப வோல் கெ
ம்மநெ ரக்தாம் போஜருசிய நிழ்கொளி கொள்கும்.

(முதலடியில் 12-க்குப்பதில் 11-எழுத்துக்களும் இரண்டாம் அடியில் 20-க்குப்பதில் 21-எழுத்துக்களும் உள்ளன. இது அச்சந்த வழு.)

(பொருள்: தாமரைக் கண்ணீ! உன்னை நினைந்து நினைந்து இரவில் உறங்காததால் என் கடைக்கண்கள் கோபம் உணர்த்துவன போல் தோன்றிச் செந்தாமரையின் அழகைக் காட்டும்.)

விளக்கம்

94. முன்னைப் பாவில் முதலடி தன்னில்
எழுத்துக் குறைவும், இரண்டாம் அடியில்
எழுத்து மிகுதியும் இருத்தல் நோக்குக.
சந்தம் வழாது காத்தல் தகவே.

8. விஸந்தி வழு

95. சந்தக் குற்றம் தவிர்ப்பது கருதித்
தொடரும் எழுத்தைச் சந்தி பிரித்தால்
காவியந் தன்னில் கடிதற்குரிய
விஸந்தி என்னும் குற்றம் விளையும்.

எடுத்துக்காட்டு

96. ஜநபதிகெ *ஒஸகெயம் புர
ஜநமெல்லம் பீறுதிர் பராகள் தாமும்
மநதுத்ஸவதிம் குணிவெம்
தநிலாஹத கேத நாளி ஸொாகயினி தோர்கும்.

* கெ+ஒ-கொ எனச் சேர்ந்திருத்தல் வேண்டும்.

(பொருள்: குடிமக்கள் அரசனுக்கு நன்மையை விரும்புகின்றனர். காற்றில் ஆடும் கொடிகளும் தாமும் அவ்வாறே மகிழ்வுடன் கூத்தாடுவது போல் அழகாய்த் தோன்றுகின்றன.)

விளக்கம்

97. முன்னைப் பாடலில் முதலடி தானே
விஸந்திக் குற்றம் தனக்குறு காட்டாம்
அடுத்துள அடிகளில் சந்தி சரியாகக்
குற்றம் இன்றிக் குலவுதல் காண்க.

புறனடை

98. சந்தி சரியாய் இருப்பினும் ஒரோவழி,
பொருந்தா வகையில் புணர்த்திக் கூறுதல்
திங்களில் சேர்ந்துள முயற்கறை போன்று
களங்கம் தந்திடும் கவிதை தனக்கே.

எடுத்துக்காட்டு

99. *அரமரஸம் கிருத காத்ரியொ
ளரமரமநெ யொளகெ கந்துக க்ரீடைகளொள்
அரமுத் யாந வநங்களொ
ளரமந்த; புரதொளரம தெந்தும் நில்வம்.

*அரம்+அரஸம் எனப் பிரிந்து இருக்கவேண்டும். சேர்ந்திருப்பது வழு.

(பொருள்: அரசன் சிறிது நேரம் செய்குன்றிலும் சிறிது நேரம் அரண்மனையில் பந்தாட்டத்திலும் சிறிது நேரம் அந்தப்புரத்திலும் உள்ளான்.)

முடிவு

100. இத்தகைக் குற்றங்கள் சந்தியில் இருப்பின்
கற்றோர் அவையில் காவிய நங்கையை
எள்ளுவ தாகும்; எனவே யாண்டும்
மொழியறி புலவர் விடுகஇக் குறைகளை.

9. நேயார்த்த வழு

101. நேயார்த்தம் என்றொரு குற்றமும் உண்டு.
முன்னிய பொருள்தான் முழுமை யாக
விளங்கா நிலையில் வேறொரு பொருள்தரின்
நேயார்த்தக் குற்றம் நிகழ்ந்ததாய்க் கூறுவர்.

எடுத்துக்காட்டு

102. பரதிகெ +ராகம் தந்நொள்
நிரந்தரம் ககந விவர வொப்பித்தாதம்
வர பாரிஜாத குஸுமோ
த்கர ஸாந்த்ர பராக விஸர பிஞ்ஜரிதம் போல்.

(பொருள்: நல்ல பாரிசாத மலர்களின் செறிந்த தாது பரவிடத் தோன்றும் பொன்னிறம் போல, விண் எனும் குகை செந்நிறம் பரவலால் சிறந்த ஒளி பெற்றது.)

+ராகம்–செந்நிறம்,அன்பு, கோபம் என மூன்று பொருள் தருவதால், பொருள் மயங்கும்.

விளக்கம்

103. மாலைப் பொழுதில் செந்நிறம் பரவ
விண்குகை ஒளியுடன் மிளிர்ந்த தென்பதை
விளக்க நினைத்தும், மாலைப் பொழுதெனக்
கூறாது விட்டது நேயார்த்தக் குற்றமாம்.

104. நேயார்த்தக் குற்றம் நிகழாது கூறுதல்
நல்லா சிரியர் நயப்பது; மேலும்
இலக்கண நூலினுக்கு ஏற்புடைத் தாகும்.
மாறாக வருபவை வழுவெனத் தெளிக.

நூல்வழு

105. கபிலர் கூறிய அணுமுத லான
உலகியல் கூறும் நெறிமுறை யாவும்
நூலினுக்கு இசைவென நுவலல் வேண்டும்.
அந்நெறி பிறழுதல் நூல்வழு ஆமே.

106. மேலே கூறிய நெறியே நூல்நெறி.
ஏனைய யாவும் விதிகட்கு முரணாம்.
முன்னர் மொழிந்த குற்றம் எல்லாம்
நூல்களில் நுழைதல் பொருந்துவ தாமோ?

கலைவழு

107. ஆய கலைகள் அறுபத்து நான்காம்.
கலைகள் இன்றிக் காவியம் படைத்தல்
கலைவழு என்னும் குற்றம் கண்டீர்.
மேலோர் அதனை மேவார், எள்ளுவர்.

காலவழு

103. காலம் என்பது பகலும் இரவும்.
இவற்றிடை வேற்றுமை இருப்ப துணராது
பொருந்தா வகையில் புகல்வதைப் புலவோர்
கால வழுவெனக் களைந்திடக் கடவர்.

உலகவழு

109. மேல், இடை, கீழ் என உலகம் மூன்றாம்.
உலகமுறை வழுவ உரைத்திடில் அதுவே
உலக வழுவெனும் குற்றமென் றுரைப்பர்.
ஆகலின் அதனை அகற்றுதல் வேண்டும்.

தேசவழு

110. நாடும் ஊரும் தேசம்என நவில்வர்.
நாடும் ஊரும் நிரல்பட நவில்க.
மாறுபட வழங்கின் தேசவழு வாகும்.
சிறுமை சேரும்; காவியம் சிறக்காது.

குற்றங்கள் பல

111. குற்றங்கள் இங்ஙனம் மிகப்பல வாகும்.
எல்லையே இல்லை. இவ்வள வென்று
ஆய்ந்து கூறுதல் யாரால் ஆகும்?

குற்றம் களைக

112. சிறுகுறை யிருப்பினும் காவியச் செல்வியை
மாசு படுத்திடும்; மனங்கொள வேண்டும்.
தீயோர் சேர்க்கையால் குலமகள் கற்பைக்
குலைப்பது போலாம்! குற்றம் களைக.

மேலும் எட்டு வழுக்கள்

113. காரகம், வசனம், குரு, லகு, சமுச்சயம்,
விகல்பம், அவதா ரணம், வி ஸங்கா
என்னும் எட்டு வழுக்கள் தம்மையும்
தெள்ளிதின் அறிந்து தேறுக புலவோர்.

1. காரக வழு

114. செயப்படு பொருளும் கருவியும் முதலிய
வேற்றுமை ஆறாம்; எழுவாய் சேர்ப்பின்
ஏழென இயம்புவர் இலக்கணப் புலவர்.
ஒருமை, பன்மையென வசனவழு இரண்டாம்.
இவற்றின் இனம், வகை, குணம், குறை தம்மை
எடுத்துக் கூற எண்ணுவன் யானே.

(காரகம் – வேற்றுமை உருபேற்ற பெயர்)

காரகம் - எடுத்துக்காட்டு

115. அரசன் வந்தான்; அன்புடன் அரசனைக்
காணவேண்டும்; அவ் வரசனால் நிலமகள்
கணவனைப் பெற்றனள்; அரசற்குக் கப்பம்
அளித்த அரசனினின்று அகலும் தோல்வி;
அரசனது அருளே போதும்; அரசன் பால்
அருள் உண்டு – என்ன வேற்றுமை அனைத்தும்
முறைப்படி யறிதல் முறையெனக் கொள்க.

வழுநிலையும் வழாநிலையும் (116–117)

116. "தேவர்கள் நல்வரம் நமக்குத் தருக.
நல்ல பண்புடை உறவினர் சந்ததி
அருள்க." எனவரின் காரக வழுவாம்.
"தேவர்கள் நமக்கு வரத்தினைத் தருக.
உறவினர் மற்றும் சந்ததி கட்கு
அருள்க." எனவரின் காரக வழுவிலை.

117. நமக்கு வரம் கொடுக்க என்வினைச் சொல்லே
அடுத்து வந்திடின் காரக வழுவிலை.
வடமொழி சார்ந்து வேற்றுமை உருபுதொகின்
சரியெனக் கொள்வர் வினைச்சொல் உடன்வரின்.

2. வசனவழுவும் வழா நிலையும் (118–120)

118. 'அரச னுக்குக் காணிக்கை வந்தன ;
யானைகள் இங்கு நின்றது'. என்பது
ஒருமை பன்மை மயக்க வழுவாம்.
'காணிக்கை வந்தது; யானைகள் நின்றன.'
என்பது வழா நிலை என்றே உணர்க.

119. ஒன்றன் தொகுதி பன்மையா? ஒருமையா?
இருமையும் ஆகும்; எண்குறித் தியம்பின்
வழுவுறும்; அதுவே பொருந்தாமை ஆகும்;
ஒருமை பன்மை மயங்கும் வழுவாம்.

120. 'குதிரை துரத்தின; யானை மிதித்தன.'
என்று வருதல் இழுக்கிலை; ஏற்கலாம்.
'நூறு குதிரையோடு பத்து யானை
மோதின.' எனவரல் வழுவாய் முடியும்.
(நூறு குதிரைகள், பத்து யானைகள் என்பது சரி.)

121. சொற்றொடர் முதலில் உம்மைத்தொடர் வந்திடின்
வேற்றுமை உருபை விரித்துக் கூறுக.
'அரசனும் அரசியும் சேர்ந்து மகிழ்வுடன்
ஆடிச் சென்றனர்; அப்பரி வாரமும்
மகிழ்ச்சியில் இருந்தது' என்பது வழுவிலை.

(முதல் வேற்றுமையும், உம்மையும் சேர்ந்து அரசனும் அரசியும்' என வந்துள்ளமை நோக்குக.)

122. சொற்கள் தொடர்ந்து பயிலுங் காலை,
பெயரும் அடையும் பிறழ்ந்து தோன்றினும்
முறைமாறி யிருப்பினும் மற்றைச் சொற்களால்
தெளிவு பிறக்கும் நிலையும் உண்டே.
ஒருமை பன்மை வேறுபா டிருப்பினும்
கரு துதல் வேண்டா; கருத்திற் கொள்க.

123. பண்புகள் படைத்த, வீரம் மிகுந்த,
படைகளை யுடைய, பகைவர் தம்மால்
புகழப் பட்ட, புகழ்நிலை பெற்ற,
வரையறை யின்றி வழங்க வல்ல,
யாவ ராலும் விரும்பப்படு வோனைப்
பாராட் டாதார் யார்உளர் பகர்மின்.

124. பறந்து திரியும் முகில்கள் பலமாய்ப்
பெய்யும் பெருமழை, மயில்களின் அகவல்,
மின்னும் மின்னல்கள், மிகவும் உயர்ந்த
மலைச்சா ரல்களில் வழியும் வெள்ளம்
என்பன யாவும் பயணம் மேற்கொண்ட
மங்கையர் உளங்களை மருட்டுதல் போல
அறிவிலி தனக்குக் காட்சி யளித்தன.
இங்ஙனம் வருதல் ஏற்புடைத் தாகும்.

முடிவு

125. இங்ஙனம் இயம்பிய குற்றம் குணங்களைத்
தெளிவுற அறிதல் சாலவும் சிறப்பாம்.
கூறாது விட்ட பிறகுறை குணமெலாம்
ஐயம் இன்றி அறிக புலவோர்.

3. குரு வழு, 4. லகு வழு (126-127)

126. குரு லகு தம்மால் வரும் குறை வகைகளை
அறிஞர் யாரும் ஆய்ந்து நெறிப் படுத்திலர்.
காரணம் காட்டிக் கருத்துறும் முறையில்
காட்டுடன் கூறுவேன் கண்டுளங் கொள்க.
(குரு – நெடில்; லகு – குறில்)

127. 'குரு'க்கள் பொருந்தாமல் 'குரு'க்கள் அமைப்பது
குருவழு வென்று கூறப் படுமே.
'லகு'கள் பொருந்தாமல் 'லகு'கள் அமைப்பது
லகுவழு வென்று நவிலப் படுமே.

குருவழுவிற்கு எடுத்துக்காட்டு

128. நெரது பந்த பரவர் ஸாயலாபல மெல்லமெ
ழ்தரதெ கொந்த பநிவந்திர நீகளெ நிக்குவம்
பரிது பீழ்வ வோலிவந்திர பாடழி வந்தமம்
திர வே (ஜொ) ட்டழியதந்திர நம்மவரெல்லரும்.

(நான்காம் அடியில் மூன்றாம் எழுத்து – வே – என, குருவாக
வந்தது வழு; லகு அமைந்திருத்தல் வேண்டும்.)
(பொருள் : உடன் வந்தவர் அனைவரும் மடியும்படி உறுதியாகக்
கொல்ல வல்லவன் இவன். நாம் அனைவரும் மடியாவண்ணம், இவன்,
எதிர்த்து வரும் பகைவரை வீழ்த்திவிடுவான்.)

விளக்கம்

129. இங்ஙனம் வந்தது குருவழு என்க.
இங்ஙனம் வருவதை ஏலாது தவிர்க்க.
மேவிய இலக்கணம் விளங்கிக் கொண்டு,
லகுவழு நூலில் வருங்கால் நீக்குக.

லகு வழுவிற்கு எடுத்துக்காட்டு

130. ஸாது கெத்து பகெயாதவ நா நொட நட்டிதெ
நாத மாநு மழிமாந ஸநாகதெ மாள தொள்
மோத தாநுடுவ ஸிரெகமெந்ந நதிர்பிபா
ர. தெ போதெடயுளெ தடெதாந வநெந்தபம்.

(நான்காம் அடியின் முதலில் – ர– (லகு) வந்தது தவறு. குரு வந்திருக்க வேண்டும்.

(பொருள்: துறவி என உணர்ந்தும் நான் அவனைத் துரத்தினேன். அதிக அற்பத்தனம் காட்டாமல் வெட்ட வெளியில் ஆடையைப் பற்றி என்னை அச்சுறுத்தி, நான் வராமற் போகவே, வழியில் தடுத்து நிறுத்தி, "நான் அவனே!" என்கிறான்.)

விகல்பம், சந்தி

131. விகல்பமும் சந்தியும் விரித்திடில் பலவாம்.
நெறிமுறை யறிந்து நேர்ந்திடும் பாங்கில்
குற்றம் குணங்களைப் கூறிடப் புகுவேன்.
நெல்லில் பதரை நீக்குதல் போன்றே
குணம் கைக்கொண்டு குற்றம் களைக.

(சந்தி என்பது புணர்ச்சி ; விகல்பம் என்பது தனித்திருத்தல். இப்பாடலை மேல் வரும் 135–ஆம் பாடலுடன் இணைத்துப் பார்த்தல் நன்று.)

5. ஸமுச்சய வழு

132. 'தேவரும் குரவரும் முனிவரும் யாண்டும்
அரசனைக் குடிகளைப் படைகளைக் காப்பர்.'
செயப்படு பொருளை முன்னே செப்புக.
மாறுபடக் கூறுதல் ஸமுச்சய வழுவாம்.

(ஸமுச்சயம் என்பது உம்மை இடைச்சொல்.)

வழா நிலை

133. அரசன் தன்னையும், குடிகள் தம்மையும்,
படைகள் தம்மையும் பரிவு காட்டிக்
குரவரும் தேவரும் குணமிகு பெரியரும்
மகிழ்வித் திடுகென வழங்கல் வழாநிலை.

புறனடை

134. வேற்றுமை மயங்கி வேறா யிருப்பினும்
வேற்றுமை யடுத்து வினைச்சொல் மேவிடில்
வழுநிலை தானும் வழுவமைதி யாகிடும்.
'வேழப் படையினர் யாவர்க்கும் விளம்புக.
யானை தன்னை ஆயத்தம் செய்தால்
மன்னன் தானே யானையை ஏறுவன்.'
என்னும் வர்ணனை இழுக்கன் றென்க.

6. விகல்ப வழு

135. 'அன்பு காட்டுக; அல்லது வெகுள்க;
அல்லது அவர்கள் அடக்குக பகைவரை;
யாரும் உய்தல் கூடாது' என்று
ஐயம் இன்றி நம்புதல் வேண்டும்.
(இங்கே விகல்ப வழுவுளது. விகல்பம்– உறழ்ச்சி, ஐயம்.)

வழா நிலை

136. 'பழிக்க; அல்லது புகழ்க; அல்லது
கைமுறியும்படி அடக்குக; அல்லது
அவர்கள் அனைவரும் அவ்வா றாக
முடித்து யான் ஒருவனே உய்வேன்; அன்றேல்
எவ்வா றேனும் ஆகுக . என்று
தெளிவுறச் செப்பிடில் விகல்ப வழுவிலை
(135–ஆம் பாடலில் 'யாரும் உய்தல் கூடாது' என்ற விகல்பத்தை நீக்கி இப்பாடல் மிகத் தெளிவாக 'யான் ஒருவனே உய்வன்,' எனக் கூறப்பட்டுள்ளது காண்க.)

முடிவு

137. ஸமுச்சயம் விகல்பம் உணர்த்திய தன்மையில்
குற்றம், குணங்களைச் சுருக்கிக் கூறினேன்.
ஏனைய வற்றையும் இவ்வாறு நோக்கி
இயற்றுக காவியம் இயல்புடை யோரே.

7. அவதாரண வழு, 8. விஸங்கா வழு

138. தேற்றமாய்ச் செப்பிய அன்வயம், இனம், குணம்,
வினைகள் தமக்கு வேராய்த் திகழ்வது
அவதா ரணத்தின் இலக்கணம் ஆகும்.
மரபுவழிக் கற்பனை வழங்கும் போது
விஸங்கா தோஷ இலக்கணம் நோக்குக.

அவதாரணம்

139. 'குலமகன்,, பண்டிதன், குற்றமில் புகழினன்
இவன்'. எனத் தேற்றம் இல்லா தியம்பின்
அவதா ரணவழு; காவிய அழகிபால்
இவ்வழு நிகழா தியம்புக புலவோர்.
('இவனே' என ஏகாரம் இடாமற் கூறியதால் இது வழு.)

வழா நிலை

140. 'இவ்வுல கதனில் என்றென் றைக்கும்
இவனே வீரன், இவனே பண்டிதன்,
இவனே பால் போல் வெளுத்த புகழினன்
என்றே இசைத்தல் வழா நிலை என்க.

விஸங்கா வழு

141. 'துவிஜன் தானோ? அரவின் அரசனோ?
மனோபவன் தானோ? வனப்புறத் தோன்றுவன்
என்று கூறுதல் ஏற்புடைத் தன்று.
பொருந்தாமை களைந்து புனைக காவியம்.

(துவிசன் – தேவன், பிராமணன் எனவும் மனோபவன் – மன்மதன், மனத்தில் உள்ளவன் எனவும் இருபொருள் தந்து மயக்குதல் வழு. விண்ணவன் அரசனைக் குறிப்பிடாத போது அரவரசன் என்ற தொடரில் வரும் அரசனோ என ஒப்பிட்டு வினவியது பொருந்தாமை யாகும்.)

வழா நிலை

142. 'விண்ணவர் வேந்தனோ ? நாகர் அரசனோ ?
நிலைபெறும் நெடும்புகழ்க் காமன் தானோ ?
என இம் மன்னர் இயங்கு கின்றனர்.
மற்றை மாந்தர் இவ்வா றில்லை.'
என்று கூறலின் இது வழா நிலையே.

உவமை

143. காவிய அமைப்பில் களங்கமும் குணமும்
அளத்தற் கரியன; ஆகலின் ஆய்ந்தே
உயர்ந்த நெறியில் உவமைக் குரிய
குணம், குறை இரண்டும் கூறுவன யானே.

உவமை வழா நிலை

144. கொடிகள் மின்னும் மின்னல்கள் போல்உள;
களிறுகள் கார்முகிற் குலங்கள் போல்உள;
காலாட் படைகள் மழைத்தாரை போல்உள.
எனவே இப்போர் மழைக்காலம் ஒத்தது.

(உவம உருபுகள் விரிந்துள்ளது வழா நிலை.)

உவமை வழு

145. உவம உருபுகளை உணர்ந்து நோக்கி
உவகை யுறும்வகை உருபுகள் இடுதல்
தவறா திடுதல் சரியாம்; தவறிடின்
உவம உருபிலா வழுவென் றுரைப்பர்.

உவம உருபுகளைப் பெய்து வழங்குக.

146. உவமையும் பொருளும் உடன் வருங் காலை
உறுமிடம் எங்கும் உவம உருபுகள்
ஒருசீ ராகப் பொருந்துதல் உயர்வாம்.
இக்கா ரணத்தால் இது குணம் என்க.

நிருபதுங்கன் நெறி (147-150)

147. சிறப்புடை நிருப துங்க தேவனின்
நெறியினைப் போற்றுவோர் நிச்சய மாக
அரும் பெருங்காவியம் ஆக்க வல்லவர்;
இடர்ப்பா டவர்க்கிலை; இயற்றுவர் நன்கே.

148. வியத்தகும் அதிசய தவள விருதுடை
வேந்தன் விளம்பிய விழுத்தகு விதிமுறை
உணரும் ஒட்பம் உடையோர் கேள்வியாம்
செவிலியின் சேர்க்கையால் வெற்றியில் சிறப்பர்.

149. சொற்களைச் செவ்வனே தொடுத்திடல் வேண்டும்.
நாட்டு வழக்குறும் நற்கன் னடத்தில்
கடின ஒலிகளின் கலப்புறா வாறு
வடமொழி கலந்து மரபுவழு வாமல்
நெடிது நிற்கவே நிகழ்த்துக காவியம்.

150. இங்ஙனம் இசைத்த இலக்கணம் இணைத்துக்
கற்பனை பொலியக் காவியந் தன்னை
விதந்து விளம்பிய மேன்மைகள் விரவிட
இயற்றுக சால்புடைப் புலவர்கள் யாவரும்!
திருமிகு விஜயன் செப்பியநெறியெலாம்
கடைப்பிடித் துயர்க கவின்புகழ் மிகவே.

இது, மேன்மைமிகு திருவுடைய நிருபதுங்க தேவனுக்கு ஏற்புடைய கவிராச மார்க்கத்தில், குற்றங்களையும் குணங்களையும் தெளிவுற விளக்கும் முதல் பரிச்சேதம் ஆகும்.

இரண்டாம் பரிச்சேதம்

காவிய அணிகள்

1. சிறந்த காவியம் என்னும் செல்வியின்
உடல் அழ கூட்டும் அணிகலன் என்று
புராணப் புலவர்கள் புகன்றன யாவும்
அணியிலக் கணம் தரும் அணிகளே யாகும்.

2. உள்ளம் விரும்பும் உயர்பே ராளன்
நிருப துங்கனின் நெறிமுறை தன்னில்
பல்வகைப் பட்ட அணிகளைக் கூறும்
அணியிலக் கணத்தில் சொல்லணி பொருளணி
எனும் வகை இரண்டும் இயம்பிடப் பெறுமே.

3. எனவே யானும் அந்நெறிக் கிணங்கச்
சொல்லணி பொருளணி இரண்டையும் நன்கு
யானறி வகையில் இசைத்திடப் புகுவேன்.

சொல்லும் முறை

4. தக்கது தனையும் தகாதது தனையும்
செவ்வனே தேர்ந்து தெளிந்துளங் கொண்டு
இயம்பிட வேண்டும்; இன்றேல் அதுதான்
அரிசியைத் தின்று மோர் அருந்துதல் ஒக்கும்.
ஐயமும் தயக்கமும் சற்றும் இன்றி
மென்சொல் கூறுதல் வேண்டும் என்பேன்.

5. எண்ணிய பொருளை வரிசை பிறழாது
இணங்கும் சொற்களில் இயம்புக; இன்றேல்
முத்தும் மிளகும் தொடுத்த மாலையாம்.
பொருந்தாச் சொற்களைப் புகுத்தாது நீக்குக.
ஒளிதரும் வகையில் உயர்வுற இயற்றுக.

சீர்கள் சேர்தல்

6. சீரும் சீரும் சேருங் காலை
லகுபதம் என்னும் குறிலசை யோடு
உயிர்மெய் அல்லா ஒற்றினை இயைத்தல்
குழந்தை தலையில் பெருஞ்சுமை வைப்பதாம்.

வழுநிலை

7. பரிஸி க்ஷிதிபதியம் ஸ
ய்திரிஸி ப்ரிய குஸல வார்தெயம் பெஸ கொண்டு
ஸ்திரமிர்து ப்ரபு நுடியெ
ப்ரஙட முதநாத நாத நெம்புது தூஷ்யம்.

(இப்பாடலின் முதல் மூன்று அடிகளிலும், முதல், இரு சீர்களையும் காண்க. அவை ஸி+க், ஸி+ப், து+ப் எனக் கூடியுள்ளன. இது வழுவாகும்.)

வழா நிலை

8. க்ஷிதி பதியம் பரிஸி ஜக
ந்நுதநம் ஸந்தைஸி குஸல வார்தாந்தரமம்
மித வசநம் பெஸ கொண்டதி
விதீர்ண முதநாத நாத நெம்புது மார்கம்.

(7 – ஆம் பாடலில் உள்ள வழுவினை நீக்கித் திருத்தியமைக்கப் பெற்றது இப்பாடல்.)

(பொருள் : அரசனை வரவேற்று இன்மொழி கூறியதும் அரசன் உரையாட, அவன் மகிழ்வுற்றான்.)

சொற்கள் சேர்தல்

9. வினையெச் சங்களை ஒன்றோ டொன்று
இணைத்துக் கூறுதல் குற்றம் என்க.
இரண்டும் பசுக்களிடம் ஒருகன்று தன்னை
விட்டது போலது பொருந்தா தாகும்.

வழு நிலை

10. பரிவார வாரநிதா
பரிவ்ருத நரமநெயொள ரஸநம் பரதளதொள்
வர தாரா பரிகத ஸஸ
தரநந் தொப்பிரெ விநோத திந்து ருமுததிம்.

(இதன் ஈற்றடியில் 'விநோத' திந்தரு முததிம்' என இரு வினையெச்சங்கள் இணைந்தது வழு.)

வழா நிலை

11. ஒருபெய ரைக்கொளும் ஈரடை மொழிகள்
இணைந்து வருதல் ஏற்புடைத் தாகும்.
நித்ய மல்ல வல்லபவன் நிருப
துங்கன் துலக்கிடும் கருத்தும் இதுவே.

எடுத்துக்காட்டு

12. பரிவார வாரவநிதா
பரிவ்ருத நரமநெயொள ரஸநம் பாரதளதொள்
வர தாரா பரிகத ஸஸ
தரநந் தொப்பிரெ விநோததிம் ஜநிதமுதம்.

(இப்பாடலில், வினையெச்சங்கள் இணைந்திருந்தது, மாற்றப் பெற்றுப் பெயரெச்சமாக்கிக் கூறப்பட்டுள்ளது. இது வழா நிலை.

(பொருள் : வானத்தில் விண்மீன்களால் சூழப்பட்ட திங்களைப் போல் அரசன் தன் பரிவாரங்களுடனும் பரத்தையருடனும் கூடி நகையாடிக் கொண்டும் மகிழ்ந்து கொண்டும் பொலிவுடன் விளங்கினான்.)

இச்சொற்களைப் பொருந்தா இடங்களில் அமைக்க வேண்டா

13. இம், அந்தெ, மத்தெ, பழி, மிகெ,
மும், நிலெ, தாம், மேண், பெறம், கடம், களம், ஆதம்,
கெந்நம், நில் என்னும் இச்சொற்களைப்
பொருந்தா இடங்களில் பொருத்துதல் வேண்டா.

வழு நிலை

14. ந்ருப கந்யகா ஸ்வயம்வர
விபுள மஹோத்ஸவ விவாஹதொள் பந்திர்மு
ந்நபவாத வாது தெநகேம்
சபலாத்வ ஜநோக்தி யிந்த மிம் பாரதிரிம்.

('இம்' இருமுறை வருதல் வேண்டா.)

(பொருள் : அரச குமாரியின் திருமணத்துக்கு நீங்கள் வந்தது முதற்குற்றம். எனக்கென்ன? தீயோர் சொற்கேட்டு இனி இங்கு வராதீர்.)

வேற்றுமை உருபுகள் நெடிலாதல்

15. இரண்டாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை
இரண்டிலும் குரு, லகு பேதங்கள் உளவாம்;
அறிஞர்கள் அவற்றை வழங்கிடும் முறையைச்
செவ்வனே தெரிந்து வழங்கிட வேண்டும்

(குரு – நெடில் (ஆ); லகு – குறில் (அ))

16. அடியின் இறுதியில் இரண்டன் உருபுறின்
உயிர் முதற் பதம்வர உருபுநெடில் ஆகும்.
இவ்வழி யன்றி ஏனை இடங்களில்
விரும்பிய வண்ணம் குறில் நெடில் மேவலாம்.

வழுநிலை

17. ந்ருபந நபிமாநத நநந
நுபமந நதிஸய விஸால கீர்த்தித்வஜநா
நுபசித குணநா நுசிதந
நபேத தோஷ நநுதார சரிதோதயநம்.

(முதலடியிலும் இரண்டாமடியிலும் உருபுகள் குறிலாயிருப்பது வழு.)

வழா நிலை

18. ந்ருபநா நபிநுத மந்நா
நுபமேதரநா நபார கீர்த்தித்வஜநம்
விபுல குணஜ்ஞந நுசிதந
நபகத தோஷந நுதார சரிதோதயநம்.

(17 - ஆம் பாடலிலுள்ள வழு நீக்கித் திருத்தியமைக்கப்பட்டது இப்பாடல்.)

(பொருள் : மானம் மிக்க, உவமையற்ற, புகழ்மிக்க, உத்தமனான, தகுதிமிக்க, பண்பு வாய்ந்த வள்ளலான அரசனை (வாழ்த்தினான்).)

விளக்கம்

19. இங்ஙனம் இயம்பிய இலக்கணம் கொண்டு
தக்க வகையில் உருபுகள் இடுக.
தகாத வற்றைக் காவியந் தன்னில்
ஐயங் கொளாமல் அகற்றுக துணிந்தே.

ஆறன் உருபு

20. பல்வகைப் பதங்கள் இருப்பினும் சரியாய்
ஐயம் இன்றிக் கூறும் இடங்களில்
அடியிறுதி யில்வரும் ஆறன் உருபு
நெடிலே யாகும்; பிறவழி உறழும்.

வழா நிலை

21. ந்ருபநா ந்ருபந நதநநா
ந்ருப வதுவர் நெரது ஸுகதொளிரெ கைகொண்ட
த்தபரிமித ராக மெர்தயம்
ந்ருப பாந்தவரா ஸுமித்ரரா பரிஜநதா.

பிறவழி உறழ்ச்சி

22. ந்ருபந நரபால தநயந
ந்ருப வதுவர் நெரது ஸுகதிநிரெ கைகொண்ட
த்தபரிமித ராக மெர்தயம்
ந்ருபதி ஸநாதிகள பந்து ஜநதா கெளெயா.

(பொருள் : அரசன், மற்றும் அரசகுமாரனின் தேவியர் நலமுற இருத்தல் கண்டு அரசனின் சுற்றத்தார்க்கும், தோழர்கட்கும், பரிவாரங்கட்கும் மகிழ்ச்சி உண்டாயிற்று.)

விளிவேற்றுமை

23. விளிவேற் றுமையிலும் நெடில்வரல் உண்டு.
ஆயினும் அதனை அடுத்த டுத்துப்
பன்முறை வழங்கிடில் சுவைகெடும்; அதுதான்
துயர்மிகு குரலால் கூவுதல் போலாம்.

வழு நிலை

24. ந்ருபதீ, பரோபகாரீ,
விபுளகுணீ, விஸத ஸஸதராயத கீர்த்தீ,
வ்யாபகதபயா, தயாலூ,
ரிபுவர்க மநலெது கெல்வெயா காஹவதொள்.

(பொருள்: மன்னனே, பரோபகாரியே, பண்புள்ளவனே, களங்கமற்ற திங்கள் போன்ற புகழ் படைத்தவனே, அச்சமற்றவனே, அருளாளனே நீ எப்போதும் போரில் பகைப்படைகளை வெல்க!)

**கூறியது கூறல்வழு*

25. அழிபிதவரும் விபீதரு
மழல்தரும் ஸலெவியோகதிம் நிஜ ஜநதிம்
கழியெ பரார்த்திகளும் பா
யழி தூண் திந்திதநெயுக்த புநருக்திகமம்.

(அழுதனர், அரற்றினர் என இருவேறு சொற்களும் ஒரே பொருளைத் தந்தது கூறியது கூறல் ஆயிற்று)

(பொருள்: அன்புடையோர்களும், அஞ்சினோர்களும், துயருற்றோர்களும் சுற்றத்தினரின் பிரிவினால் அழுதனர். பரோபகாரிகள் வாய் விட்டரற்றினர்.)

---

* முதல் பரிச்சேதம் பாடல்கள் 84–85 காண்க.

அடுக்குத்தொடர் வழுவன்று

26. புலிபுலி பரிபரி போ போ
கெலெயெலெ பெரபிங்குபிங்கு நில் நில் பாபா
பலிமநமநஞ்ச தஞ்சதெ
தொலதொலகீ மெளெகெ புலியதெம்புது மார்க்கம்.

பொருள் : 'புலி புலி; வருகிறது வருகிறது; எலே எலே! பின் செல் செல்; வா வா; மனவுறுதிகொள்; போ போ; இப்புதரில் புலியுளது' – இது சரியே.)

உருவகம், வர்ணனைகளில் அடைமொழி

27. உருவகம், வர்ணனை வரும்வழி ஒழியப்
பிறவாம் இடங்களில் திடநிலை பிறழ்ந்தே
அடுத்தடுத் துறும்படி அடைமொழி தொடுத்தல்
விலக்கிட வேண்டும்; இன்றேல் சுவைகெடும்.

வர்ணனையில் அடுக்கு

28. வீரர்கள், புலவர்கள், மிகுபுகழ் வேந்தர்கள்,
அழகுறும் ஆடவர், அரும்புக ழாளர்கள்,
குணம்உடை யவர்கள், தன்மதிப் பாளர்கள்,
திடமனம் பெற்றவர், உயர்மனம் உடையவர்,
ஞானிக ளாக உளர் அந் நாட்டவர்.

விருதுகள், பட்டங்களில் அடுக்கு

29. விருதுகள், பட்டங்கள் விரவுங் காலை
அடைமொழி அடுக்குதல் அமைவே; ஆனால்
பிறவழி அவற்றை அடுக்குதல் பிழையே
மிகுபுகழ் அதிசய தவளன் விழைவிது.

எதுகை

30. கன்னட நூல்களில் கமழ்ந்திடும் உயர்ந்த
சொல்லணி களில் தனிச் சிறப்புடைத்து எதுகை.
நிருப துங்கன் நெறிவழி நோக்கில்
எதுகை வகைகள் இவை ஆறு ஆகும்.

அறுவகை எதுகைகள்

31. விநுத எதுகை, ஸாந்த எதுகை,
வர்க்க எதுகை, ஸமீப எதுகை,
அநுகத எதுகை, அடியீற் றெதுகை
எனஅறு வகைப்படும் எதுகை தானே.

1. விநுத எதுகை

32. ஒவ்வோ ரடியிலும் இரண்டாம் எழுத்து
ஒன்றி வருதல் விநுத எதுகை.

எடுத்துக்காட்டு

33. மநெகிந்து பர்குமெந்தா
நநேக தரவஸ்து வாஹநாதிய நொஸெதிம்
பநெபஸாிஸி குடலிர்தெம்
ஜநேஸ நிந்தேகெ கழிது போதநொ பேழிம்.

(பொருள்: இன்று அரசன் நம் இல்லத்துக்கு வருகின்றான் என்று பல பொருள்களைச் சித்தப்படுத்தி வழங்க விழைந்தேன். . அரசன் ஏன் வராது சென்றனனோ? சொல்.)

எதுகையில் மாத்திரை

34. எதுகை எழுத்துக்கள் மாத்திரை சமமாய்
விரவி வருதல் மிக்குயர் சிறப்பின்
காவியங் கட்குக் கவின்தரும் கண்டீர்.

2. ஸாந்த எதுகை

35. ஈரொற்று இணைந்து வேறுவேறு உயிருடன்
சார்ந்து வருதல் ஸாந்த எதுகை.

எடுத்துக்காட்டு

36. பத்தீம் ப்ரமாத பலகம்
நத்யுக்ர க்ரஹ நிவஹா சங்க்ஷோ பிதநொள்
மத்தீ ரத்நா கரநொள்
புத்ரி கெயநெ பழ்தளிந்து பாழ்வுதெ சோத்யம்.

(பொருள்: பாய் மரத்தைப் பற்றிக்கொண்டு, அஞ்சத்தக்க முதலைகள் நிறைந்த கடலில், குழந்தை போல் பிழைத்திருந்தானே! இது வியப்பு!)

3. வர்க்க எதுகை

37. இதுவே ஸாந்த எதுகை யாகும்.
வர்க்க மெய்கள் ஒன்றற் கொன்று
எதுகை யாதல் வர்க்க எதுகை.

எடுத்துக்காட்டு

38. ஸkaல ஜநவிநுத நம்ஸத
மkha ஸத்ருஷ விஸாலவிவித விபவோதயநம்
ப்ரgaத குண குணந நரிபல
விghaடநநம் கண்டநனுவநா ராகவநம்.

(பொருள்: யாவராலும் புகழப்படும் இந்திரனைப் போல் மிக்க செல்வம் படைந்த, உன்னதமான, பண்புள்ள, பகைப்படையை அச்சுறுத்துகிற அந்த இராமனை அநுமன் கண்டான்.)

4. ஸமீப எதுகை

39. இதுவே வர்க்க எதுகை எனப்படும்.
ஶ,ஷ,ஸ என்ற எழுத்துக்கள் தமக்குள்
எதுகையாய் வருதல் ஸமீப எதுகை.

எடுத்துக்காட்டு

40. ஶுதர பிம்பா நநயம்
க்ஷ ஷ கேதநாப தநு தநுவம் தாம்
பி ஸ விஶுத வர்ணெயம் கண்
டொஸ தெம் பந தொளகெ ஜநக தநயளநனுவம்.

(பொருள்: திங்கள் போன்ற முகமும், காமனின் மகரக்கொடியொத்த அழகிய உடலும், தாமரை போன்ற ஒளியும் கொண்ட, சனகன் மகளான சீதையை அநுமன் வனத்தில் கண்டு மகிழ்ந்தான்.)

5. அநுகத எதுகை

41. இதுவே ஸமீப எதுகை இலக்கணம்
வந்த எழுத்தே மற்றும் வந்தே
இயைவது அநுகத எதுகை எனப்படும்.

எடுத்துக்காட்டு

42. ஜநவிந தநந கந நுபம
நநு நய பரநர ஸநி நிஸுநெநெ நெநெதுமநோ
ஜநிதமு தநநிஸ தநயந
நநந்ருத வசநப்ரபஞ்ச நிந்திரெ நுடிதம்.

(பொருள்: மக்களால் புகழப்பட்ட, புண்ணிய சீலனான, இணையற்ற, விநயம் மிக்க மன்னனை எண்ணி எண்ணி மனமகிழ்வுற்ற உண்மையாளனாகிய அநுமன் இவ்வாறு கூறினான்.)

'ந' தொடர்ந்து எதுகையாய் வந்துளது.

6. இறுதி எதுகை

43. இதனை அநுகத எதுகை என்பர்.
முதலடி இறுதியின் முடிந்த எழுத்தே
தொடர்ந்துவரும் அடிகளின் இறுதியில் தொடுத்தல்
இறுதி எதுகை என்னப் படுமே.

எடுத்துக்காட்டு

44. அதிவிஸத யஸோவ் ருத்தம்
நதஸகளா ராதிஜ நவிதாநம் மத்தம்
விதத ஸ்ரீ ஸம் பத்தம்
ஸதமக ஸத்ருஸா நுபாவநொல விம்பெத்தம்

(பொருள்:களங்கமற்ற புகழ்ப் படைத்தவனும், பகைப்படையை வென்றவனும், எல்லாச் செல்வங்களையும் உடையவனுமான இந்திரன்போல் எல்லா இன்பங்களையும் இனிது பெற்றான்.)

சிறப்பும் சிறப்பின்மையும்

45. விருத, அநுகத, இறுதி என்னும்
எதுகைகள் மூன்றும் ஏற்றம் உடையன.
ஏனைய மூன்றும் சிறப்பில எனினும்
நிருப துங்கன் நெறிப்படி எதுகையே.

இலக்கண மரபுகள்

46. காவிய இலக்கணம் கண்டு தெளிதல்
முற்ற முடிய இயலாது யார்க்கும்.
பண்டை இலக்கண மரபுகள் பலவும்
கன்னட மொழியில் கவினுறக் கூறுவேன்.

47. கை,கால் மெய்,தலை வயிறு, முகம் இவை
ஒவ்வொரு மனிதன் உருவிலும் தத்தம்
இடத்தில் இருப்பினும் எல்லா மனிதரும்
ஒருவர்போல் மற்றவர் உருவம் பெற்றிலர்.

48. சொல்லணி வகைகளைச் சொல்லுங் காலை
ஒன்றுபோல் ஒன்று தோன்றினும் அவற்றிடை
வேறு பாடுகள் மிகுந்துள தன்மையைப்
புகழ்மிகு புலவர்தம் வழக்கினிற் காணலாம்.

49. கவிஞர்கள் காலப் பழமை கனிந்தவர்.
கணக்கில் அடங்காக் காவிய உத்திகள்
வெவ்வே றாகும்; மிகப்பல நெறிகள்
எல்லாம் உடையது இலக்கணந் தானே.

50. இலக்கண நெறிகள் இயல்புகள் வகைகள்
சொல்மனம் கடந்தவை; தொகையும் பெரிது.
தெளிவிலா அறிவினர் செந்நெறி யாவும்
திறம்படச் செப்புதல் அரிதே; தெரிமின்.

வடநெறி, தென் நெறி

51. வடநெறி தென்நெறி எனும்இரு மரபுள.
தொன்மைப் புலவோர் சொன்னஇவ் விரண்டிடை
வேற்றுமை உண்டு; விளக்கிட முயல்வேன்,
என்சிற் றறிவினுக் கெட்டிய வகையே.

52. பழங்கா வியங்கள் பகர்பொருள் தன்னைக்
குறிப்பு, வெளிப்படை எனும் இரு கொள்கையால்
அணியுறக் கூறும் அமைதியை உடையன.

53. தென்நெறி பொதுவாய்ச் செப்புங் காலை
வெளிப்படை யுக்தியை மிகுதியாக் கொண்டது.
வடநெறி எனினோ வகைவகை யான
குறிப்பெனும் உத்தியைக் கொண்ட தென்க.

தென் நெறிகள் - பத்து

54. தென்நெறி அணிகள் செப்பிடக் கேளீர்.
ஸமமே, மதுரம், நிபிடம், காந்தம்
ஸுகுமாரம் ஸுஸமா ஹிதம், ப்ரஸந்நம்,
உதாரம், கிராமியம், ஓஜஸ்வீ – பத்தாம்.

அவை வடநெறியில் விரவுதல்

55. அவற்றின் வகைகள் பற்பல வாறு
வடநெறி தனிலும் மல்கிக் கிடக்கும்.
மிகுபுகழ் நிருப துங்கன் விளம்பிய
வகையில் அவற்றின் சிறப்பியல் வகுப்பேன்.

1. ஸமம்

56. கரடு முரடாம் ஓசை கலவாது
சொற்களைப் புணர்த்தல் ஸமமெனச் சொல்வர்.
ஸமமது தானும் மென்மை, வன்மை
எனுமிரு வகைப்படும் எண்ணுங் காலை

57. மென்மை ஒலியுடை எழுத்துக்கள் மேவ
அமைத்தல் தானே மென்மை ஆகும்;
வன்மை ஒலிகள் வந்திடு மாறு
சொற்களைப் புணர்த்திச் சொல்லுதல் வன்மையாம்.
(மென்மை—மிருது; வன்மை—ஸ்புடம்.)

எடுத்துக்காட்டு

58. தொரெ கொளெ நோடித நாயத
கருணா பாங்க தொள லோல லோசனயுகெயம்,
குரு ஜகந பயோதர யுக
பரவிதுரய நா தராதிபதி விது முகியம்.
(இப்பாடலின் முதலீரடிகள் மென்மை; அடுத்த ஈரடிகள் வன்மை.)
(பொருள்: தாமரைக் கண்களும், மதிமுகமும், பருத்த நகில்களும் உடையவளைக் கண்டனன்.)

விஷம பந்தம்

59. ஸமபந் தத்தின் இருவகை இவையே.
விஷம பந்தம் மேலே வருவது:
"சிந்தை கஸுகா க்ராந்தர்
ஸந்துஷ்டை காக்ர சித்த ராதர் தம்மொள்."
(பொருள்: தம் துன்பங்களையே இன்பமாகக் கொண்டோர் எப்போதும் மகிழ்வுடன் ஒரேநிலையில் இருப்பர்.)

2. மதுரம்

60. இன்சுவைச் சாற்றினைச் சுவைத்தது போலச்
செவிகளுக் கின்பம் செறிந்திடச் செப்புதல்
மதுரம் என்பதன் இலக்கண மாகும்.
அடைமொழி அடைகொளி அமைவதில் காண்க.

தென்நெறி-எடுத்துக்காட்டு

61. தெஸெகள் விஸால மாதுவு
கெஸறிம் பிங்கித் துதரணி திளிதுவு கொளகள்
ஸ்வஸந பதமமள மாய்திம்
தொஸெகெ களம் பீறுவந்தெ ஸரதாகமதொள்.

(பொருள்: கூதிர் வரவால் திங்கள் இன்பம் தருவதுபோல் திசைகள் பரந்தன. நிலம் சேறு நீங்கியது. குளங்கள் தெளிவுற்றன. காற்று நன்கு வீசியது.)

வடநெறி மதுரம்

62. தென்நெறி முறைக்குக் காட்டிது தெளிக;
மதுரச் சுவைவல கவிஞர்கள் மகிழ்வது.
சிறப்புடை வடநெறி செறிந்த மதுர
வகைக்குக் காட்டாம் செய்யுள் வரும் மேல்.

வடநெறி - எடுத்துக்காட்டு

63. தவள ஜலதர குளாகுள
மவிகள மம்பரதளம் விநீளச் சாயம்
குவளய கீர்த்திகெ ஸாரத
மவதாரித மாய்த தெம்புதுத்தர மார்க்கம்.

(பொருள்: கூதிர் காலத்தில் வெண்மேகங்களால் வானம் தெளிவுற்றது நிழல் நீண்டது; நிலத்தின் புகழும் எங்கும் மிகுந்தது.)

3. நிபிடம், சிதிலம்

64. எழுத்துக்கள் செறிவுடன் இணைவது நிபிடம்;
வல்லினம் பொருந்த வருதல் சிதிலம்;
மகா ப்ராணம் வந்திடல் நிபிடம்;
மகா ப்ராணம் வராதது சிதிலம்;

எடுத்துக்காட்டு

65. அரவிந் தோத்பல புஷ்போ
க்கரங்களொள் பாய்து முதுப்ரமத் ப்ரமரங்கள்.
விரத முதவாது வுரு மத
விராம வநகரி கபோல பலக தொளாகள்.

(இப்பாடலில் முதலிரண்டடிகள் நிபிடம் எனவும் அடுத்த இரண்டடிகள் சிதிலம் எனவும் கொள்க.)

(பொருள்: தாமரை, குவளை மலர்களில் படிந்து திரிந்த வண்டுகள், மதவெறியில் ஓய்ந்து கிடக்கும் யானைகளின் கபோலங்களில் மகிழ்ச்சியற்றுக் கிடந்தன.)

4. காந்தம்

66. மேலே கூறிய நிபிடம் தனக்கும்
சிதிலம் தனக்கும் காட்டிது தெளிக.
காந்தம் என்பது காண்போர் உளங்கவர்
பண்பு சிறக்கப் பகர்தல் ஆகும்.

தென்நெறி-எடுத்துக்காட்டு

67. திநகர கரநி கரங்கள்
கநவிவரப்ர ஸரமாகியும் தம்மம் கண்
டநித மறாளெ தெரள தெந்நா
மநோகதத்வாந்த பந்த மளறித்தெல்லம்.

(பொருள்: கதிரவன் ஒளி எங்கும் பரவியுள்ளதைக் கண்டதும் என் மன இருள் முழுதும் மறைந்தது.)

வடநெறிக் காந்தம்

68. இதுவே தென்நெறிக் காந்தம் இயைந்த பா.
வடநெறி மரபின் காந்தம் கடினமாம்.
புலவர்கள் அறிந்து போற்றுதல் செய்வர்.
இதோ! அப் பாடல் இனிது காண்க.

வடநெறி-எடுத்துக்காட்டு

69. விலஸித பவதப் யாகம
ஜல தாரெகளேறு முழிய தந்து மதந்த
ர்மலமும் கர்ச்சி தொடாநீ
நெலகெல்லம் பாவநீய சரிதநெ நாதெம்.

(பொருள்: சிறந்த நின் வருகையாகிய வெள்ளம் என் மனத்துயரை முற்றிலும் கழுவிவிட்டதால் நான் இவ்வுலகில் தூய்மையுடையவன் ஆனேன்.)

5.ஸுகுமாரம்

70. மெல்லோசை யுடைய எழுத்துக்கள் மேவும்
சொற்களின் சேர்க்கையால் துகளறச் சொல்லல்
ஸுகுமார மாகும்; தோற்றம் காண்மின்.
அடுத்த பாட்டே அதற்குறு காட்டாம்.

தென்நெறி - எடுத்துக்காட்டு

71. தொள பௌ வெறெயம் மொரெவளி
குளங்களும் மெல்லநெ ஸபமளயா நிளநும்
முளிஸம் கழல்சி களெதுவு
கனிகாங்குர சூத ததிகளும் காமிகளா.

(பொருள்: பிறைமதி, வண்டு, தென்றல், மாந்தளிர் ஆகியவற்றைக் கண்டு காதலர் துன்பம் நீங்கினர்.)

வடநெறி - ஸுகுமாரம்

72. இதன்கண் பல்வகை எழுத்துக்கள் இணையின்
வடநெறி யாமென மனங்கொளத் தகுமே.

எடுத்துக்காட்டு

த்ரித ஸாதீஸ்வர பூத்ய
த்யுதார விவிதார்த்த விபவி நீ பூபேந்த்ரம்.

(திரும்பத் திரும்ப ஒரேயொலி வருதல் குறைந்துளது.)
(பொருள்: மூவுலகத்தலைவனான இந்திரனைவிட இவ்வரசன் செல்வம் மிக்கவன்.)

6. ஸமாஹிதம்

73. ஒன்றற் குரியதை ஒப்புடைப் பொருள்மேல்
ஏற்றிக் கூறுதல் ஸமாஹிதம் எனப்படும்.
அடுத்த பாடலில் அதனைக் காணலாம்.

எடுத்துக்காட்டு

74. விநி மீளித குமுத வநம்
ஜநிதோள் நீலாரவிந்த வரலக்ஷ்மீஸம்
திநகர நுதயம் கெய்தம்
விநிஹித திமிரம் விஸிஷ்ட ஸந்த்யாஸ்லேஷம்.

(பொருள்: அல்லி மலர்கள் கண்மூடவும் தாமரை மலர்கள் கண் திறக்கவும் கதிரவன் எழுந்தான். காரிருள் கலைந்தது. காலைப் பொழுது ஒளிபெற்றுச் சிறந்தது.)

விளக்கம்

75. கண்மூ டுதலும் கண்திறப் பதுவும்
மலர்களுக் குரிய வாக வைத்தது
சாற்றுங் காலை ஸமாஹிதம் ஆகும்.

மற்றோர் எடுத்துக்காட்டு

76. பகைவர் படைகள் பலவும் சாய்த்துக்
களிப்புடன் வந்துதன் மலர்ந்த கண்களால்
கண்இமை குவிந்த காதலி தன்னைக்
கண்டுதன் இருபுயம் களிப்புற அணைத்தனன்.

(கண் மலர்ந்தது, கண்இமை குவிந்தது எனக் கூறியது ஸமாஹிதம்.)

7. ப்ரஸந்நம்

77. இத்தகு பண்புடன் இயலும் பல்வகை
ஸமாஹிதந் தன்னைத் தரணி புகழும்.
எழிலும் நுட்பமும் இன்பமும் இணைந்த
சொல்லமைப் பதுவே துலங்கும் ப்ரஸந்தம்.

எடுத்துக்காட்டு

78. ஸரத மலாம்பர தொள் ஹிம
கரநெஸெ தத்தெம்புதா ப்ரஸந்த மிதக்கும்
கரமொப் பித்து ஷ்ணே தா
கிரணம் வர்ஷாந்த ஸமய ஜளதர பததொள்.

(பொருள்: கூதிர் காலத்தின் களங்கமற்ற வானத்தில் திங்கள் நிலவொளி வீசுகிறான். இம் முதலிரண்டடிகள் எளிதான தென்நெறி.)
வெம்மையற்ற ஒளி (திங்கள்) மேகங்கள் செல்லும் வீதியில் (வானில்) கார்கால இறுதி (கூதிர்) அழகாகக் காணப்பட்டது. (இவ்விறுதி இரண்டடிகள் கடினமான வடநெறி)

8. உதாரம்

79. சொல்லும் பொருளைத் துகளற ஆய்ந்தே
இயற்புற இசைத்தல் உதாரம் என்பது;
காவிய உயர்வினைக் காட்டிட அதுவே
மூலம் என்பர் மொழிநடை வல்லுநர்.

தென்நெறி - எடுத்துக்காட்டு

80. உன்னை யொத்த உத்தம வள்ளல்,
பகைவர் படையை வீழ்த்திய மறவர்,
அரம்பையர் இன்பம் ஆர்ந்து மகிழ்ந்தவர்,
ஆடவர் தலைவர் அவனியில் யாவர்?

வடநெறி-எடுத்துக்காட்டு

81. இதுதென் நெறிக்குறும் எடுத்துக காட்டாம்.
வடநெறி தன்னில் அடைபல வந்திடும்.
அதற்குறு சான்று பின்வறு பாறு:
'செம்பொன் வளையுடன் சித்திரத தாமரை
கொண்ட இவ் வோவியம் செ... ... அழகு!

9. கிராமியம்

82. கோபாள பாள லலநா சாபள வாசாள.
கிதவ, பாஹ்லீக ஆதி யான
சொற்கள் வருவது கிராமியம்; கூட்டிய
இருநெறி கட்கும் ஏலாது; தவிர்க்க.

(கோபாள முதலிய சொற்களில் லகரத்துக்குப் பதில் ளகரம் வந்தது கிராமியம்.)

(கோபாள பாளன்–இடைச்சிறுவன், லலநாசாபள–பெண்களிடம் சபலமுற்றவன், வாசாளன்–வாயாடி, கிதவன்–வஞ்சகன், பாஹ்லீக–குடிமக்கள்)

மிகவும் வெளிப்படையாகக் கூறுதல் சிறப்பில்லை

83. இரவும் பகலும் உனையே எண்ணி
ஆசை மிகுதியால் அல்லலுற் றழுவேன்;
சற்றும் தாங்கிட இயலேன்; நீயோ
கருணையே இல்லா மரச்சிலை கண்டாய்!

மாற்றிக் கூறுவது சிறப்பு

84 இங்ஙனம் கூறுதல் கிராமிய இயல்பாம்;
மாற்றிக் கூறுதல் மாண்புடைத் தாகும்.
'காமன் என்னைக் கடிது தாக்குவன்;
நின்பால் சினமிலன்', என்பது நெறியே.'

10. ஓஜஸ்வி

85. தொகைநிலைத் தொடர்கள் பலவரும் வண்ணம்
ஆய்ந்து கூறுதல் ஓஜஸ்வி ஆகும்.
ஓஜஸ்வி தானே ஒளிபெற மிளிர்வது;
உரைநடை தனக்கிது நல்கிடும் ஒளியே.

86. பாடற் பண்பைப் பாங்குடன் நிறைத்துப்
பெருமை தரும் உயர் வழக்கினைப் பேணிப்
புகழ்மிகப் பெற்ற புலமையின் நோக்கி
ஓஜஸ்வி யமைத்தல் உரவோர் கடனாம்.

87. வேற்றுமை வகைகளும் வினையின் வகைகளும்
தெளிவுற உணர்ந்து சிறப்புறும் வகையில்
ஒன்றற் கொன்றுள தொடர்பும் உணர்த்தித்
தனிச்சொல், தொகைநிலை தகவுறச் சாற்றுக.

88. தொகைநிலை முதலில் தொடங்கிப் பின்னர்த்
தொகாநிலை அமைத்தல் சுவைக்குறை வாகும்.
வேரி லிருந்து நுனிநோக்கி மெல்லும்
கரும்புபோல் சுவைகெடும் கழறினேன் உண்மை.

வழுநிலை

89. பரமாநு பாவ பாஸுர
ஸுரராஜோபமிதவிவித விப வோதயநம்
நரபதியம் கபிப்ருத நா
பரிவ் ருதநம் ஜலதி தடதொ ளணுவம் கண்டம்.

(இப்பாடல் தொகை நிலைக்குப்பின் தொகா நிலை அமைந்து ஓஜஸ்விப் பண்பை இழந்துளது.)

மேலும் விளக்கம்

90. ஓதிய நெறியில் ஓஜஸ்வி யமைக்க.
இன்றேல் காவியம் எழிலுறல் இல்லை.
நயத்தகு சொற்களை தகுமிடம் நாடி
வகையுற அமைத்தல் மாண்பின தாகும்.

வழா நிலை

91. **நரபதியம் கபிப் ருதநா**
பரிவ்ருதநம் ஜலதி தடதொள் அனுவம் கண்டம்
பரமாநு பாவ பாஸுர
ஸுரராஜோபமித விவித விபவோதயநம்.

(89–ஆம் பாடல் இங்ஙனம் மாற்றியமைக்கப்பெற்று ஓஜஸ்விப் பண்பு பெற்றுள்ளது.)

(பொருள்: சிறந்த அநுபவங்களால் அழகு பெற்ற, இந்திரனுக்கு இணையான, செல்வச் சிறப்புடைய, வானரப் படை சூழப்பெற்ற மன்னனைக் கடற்கரையில் அநுமன் கண்டனன்.)

மேலும் விளக்கம்

92. **தொகைநிலைத் தொடர்பல தொடுக்குங் காலை**
அடைகள் பற்பல அடுத்திடு மாயின்,
காவியம் அழகு செறியாது கழியும்.,
தனித்தனி யாக அமைப்பது தகவே.

எடுத்துக்காட்டு

93. **பரிதெய்தி தாகிதம் பா**
ஸுரதர ரகுகுலலாம லக்ஷ்மீதரநொள்
பரிகோப வித்ருத விஸ்புர
துருரக்த கடோர நயநயுத தஸவதநம்.

(லக்ஷ்மீதரன் இலக்குவன் என்ற பொருளில் வந்துளது; தெளிவாக இல்லை. 3–4 அடிகளில் இராவணன் வர்ணனை கடினமாக உள்ளது. 96–காண்க.)

மேலும விளக்கம்

94. **இங்ஙனம் செறிவுடன் இயங்கும் வர்ணனை**
எப்போதும் உளதாம்; யாவரும் விரும்புவர்.
எனினும் இங்கே தொகைநிலை அமைப்பு
பொருந்துமா றில்லை; புலவர் அறிகுவர்.

95. அவாய்நிலை யான தொகைநிலை அணுகிடின்
பொருளைப் பொலிவுற விளக்குதல் வேண்டும்.
புலவர் ஏறுகள் பூரண மாகக்
கண்டு தெளிந்து கவினுறப் புனைக.

எடுத்துக்காட்டு

96. பரிதெய்தி தாகிதம் பா
ஸுரதர ரகுகுலலாம லக்ஷ்மணநொள்
பரிகோப வஸப்ரமணோ
த்துர ரக்த கடோர லோசநம் தஸவதநம்.

(இப்பாடலில் 'இலக்குவன்'–'லக்ஷ்மணன்' எனத் தெளிவாக உள்ளது. இராவணன் வர்ணனையும் எளிதாக்கப்பட்டுள்ளது.)

(பொருள்: சினம் நிறைந்த, மின்னல் ஒத்த, மிகச் சிவந்த கடும்பார்வையுடைய கண்களைக் கொண்ட இராவணன், ரகுகுல திலகனான இலக்குவனை அணுகி அவனுடன் போரிட்டான்.)

முடிவு

97. இருநெறி தம்மையும், இத்தகு முறையில்
வேற்றுமை காட்டி விளக்கிக் கூறினேன்.
பாலின் சுவையும் பாகின் சுவையும்
வேறுபட் டிருத்தலை விளம்பி முடிப்பேன்.

சுவைகள் ஒன்பது

98. நலமிகு புலவர்கள் நன்கனம் ஆய்ந்து
இருவகை நெறிகளின் இலக்கணம் கண்டு
படைத்திடும் நூல்களில் பொலிவுறும் பான்மையில்
ஒன்பான் சுவைகளும் ஒளிர்ந்திடச் செய்க.

99. கடினச் சொற்களால் வீரம் கழறுக.
மென்மைச் சொற்களால் கருணை விளம்புக.
செறிவுடைச் சொற்களால் அற்புதம் செப்புக.
வனப்புறு சொற்களால் காதல் வழங்குக.
இன்புறு சொற்களால் சாந்தம் இயம்புக.

100. கனிவுடைச் சொற்களால் நகைச்சுவை காட்டுக
அடர்ந்த நடையால் இளிவரல் அமைக்க.
சிதறிய சொற்களால் செப்புக அச்சம்
ஒஜஸ்வி நடையால் உணர்த்துக வெகுளி.

இருநெறிகளும் சிறப்பே

101. எல்லாச் சொற்களும் இருநெறி களிலும்
இலக்கண மரபில் இணையுங் காலைக்
கன்னட மொழியில் கவினுறும் கண்டீர்.
தெளிவுறு புலவர் திறம்படப் புனைக.

இருநெறியிடை வேறுபாடுகள்

102. நோடுவெநா மஹீபதியநர்த்தி கணார்த்தித கல்பவிருக்ஷணம்
பேடுவெநர்த்த ஸஞ்சயமநெம் புதிதுத் தரமார்க்க வாசகம்.
நீடுமுதர்த்த சாருகுண ...ம் மநதொள் நெறநோழ்
பெநழ்தியொள்
கூடிரவேழ்பே நெம்புதிறு தக்ஷிணமார்க்க விசக்ஷணோதிதம்.
(நோடுவெ என்பது வடநெறி; நோழ்பெம் என்பது தென்நெறி.
பேடுவெ என்பது வடநெறி; பேழ்பெம் என்பது தென் நெறி.)
(பொருள்: கற்பகத் தருவாம் மன்னனைக் காண்பேன். பொற்புறு செல்வக்குவியல் வேண்டுவேன் – வடநெறி. ஏற்றமும் அழகும் இணைந்த நல் வேந்தனை அன்பொடு கண்டு அவனுடன் இருப்பேன் – தென் நெறி.)

பொருந்தாதன

103. சூடுவெம் என்பதைச் சூழ்பெம் என்பதும்
கூடுவெம் என்பதைக் கூழ்பெம் என்பதும்
காடுவெம் என்பதைக் காழ்பெம் என்பதும்
தோடுவெம் என்பதைத் தோழ்பெம் என்பதும்
பொருந்தா என்பதைப் புலவோர் அறிவர்.

தென்நெறி

104. பரிஸுவெநிந்து நந்தன வநாந்தர தல்லிகெ
காந்தநம் ஸமம்
திரிஸுவெநந்த நங்க ஸுகஸங்கதி மங்கள
காரணங்களம்
தரிஸுவெநாம் மநோநயந வல்லப நொள்
மநநொந்தலம்பிநிம்
நெரெவெந யோக மெம்புதிது தக்ஷிண மார்க்க
விசேஷ பாஷிதம்.

வடநெறி

105. பரிபெநெ மோக மிந்துபவ நாந்தர தல்லிகெ நல்லநம் தகு
ள்திரிபெந நாரதம் ஸுரதராக நிருபண காரணங்களம்
தரிபெந நாகுளம் மநதலம்பி நொளா மதநோப மாந நொள்
நெரெவெந பங்க தெம்ப வசனங்களி வுத்தரமார்க்க
வர்த்திகள்

மிகு வடநெறி

106. அநுபமநம் பரிப்பெ நநு ராகத நல்லந நிந்து மிக்கநம்
தநவநதல்லி கல்லிகெ தரிப்பெந நங்க ஸுகோசி தங்களா
நநுநய திந்திரிப்பெ நிநிதும் ஸுரதாஸவ ஸேவநா ஸநா
தநஸுக திந்ரிப்பெ நநுராகதி நெம்புதிதுத்த ரோத்தரம்

(தென்நெறி	வடநெறி	மிகு வடநெறி
பரிஸு	பரிபெ	பரிப்பெ
திரிஸு	திரிபெ	திரிப்பெ
தரிஸு	தரிபெ	தரிப்பெ)

(பொருள்: 104-105-106. இன்று காதலனைச் சோலைக்கு வரவழைப்பேன். காமனின் இனிய செயல் எலாம் நிலைப்படுத்துவேன். தலைவனை என் மனக்கண்ணுக்கு மகிழ்வூட்டச் செய்வேன்; அவனைக் கூடுவேன்.)

பொருந்தாதன

107. பரஸுவெம் பரபெம் என்று வராது.
பெரஸுவெம் பெரபெம் என்று வராது.
இருநெறி களிலும் இவைவழு என்க.
இருப துங்கள் நெறியிது நினைக.

இருநெறிகட்கும் எடுத்துக்காட்டு - (1)

108. “மநதொள காகளும் நிறிஸதா முளிஸம் கதராகமோஹநொ ய்யநெ முநிநாதன்” – (இது தென்நெறி; கத ராக மோஹ என

(இது தென்நெறி; கத ராக மோஹ என உம்மைத்தொகை வந்தது.)

“மநதொள காகளும் நிறிஸ தொய்யநெ
மோஹம நந்தெ ராகமம் முநிஸுமநொல்லதம்
முநிபம்” – (இது வடநெறி; மோஹமம், ராகமம் முநிஸும எனப்

(இது வடநெறி; மோஹமம், ராகமம் முநிஸும எனப் பிரிந்து வந்தது.)

(பொருள்: மனத்தில் சினமின்றி, அன்பு, ஆசைகளைத் துறந்தவன் முனிவர் தலைவனென்பது தென்நெறி–(முதற்பாதி.) எப்போதும் மனத்தில் ஆசை, அன்பு, சினம் இல்லாதவன் என்பது வடநெறி–(பிற்பாதி.)

இருநெறிகட்கும் எடுத்துக்காட்டு -(2)

109. "த்ரிதஸ கணேஸ மௌளி பீட நிஷேவிகளொள்
முநீந்த்ர நா பதயுகளங்களொள் முததெ பாகுவென்"

(இது தென்நெறி; எளியது.)

"விதித ஸுராதிராஜ மகுடாக்ரஸமர்ப்பிததொள்
முநீந்த்ரநா பதயுகதொள் மநோ முததெ பாகுவம்."

(இது வடநெறி; கடினமானது)

(பொருள்: முதலிரண்டடிகள்: இந்திரனின் மகுடம் படியும் முனிவனின் திருவடிகளை நானும் மகிழ்வுடன் வணங்குவேன். இறுதி இரண்டடிகட்கும் இதுவே பொருள்.)

இருநெறிகட்கும் எடுத்துக்காட்டு -(3)

110. "விளஸித ஸஸ்ய ஸம்பதபிராம குணோதயெ தாள்திதள்தரா
ளளநெ விஸால லக்ஷ்மி யந நா ரதம்" – தென்நெறி

"ஜலநிதி மேகலாவலயி தாங்கி கரம் ஸொகயிப்பு தாய்து பூ
ளளநெ விஸால லக்ஷ்மியந நாகுளம்" – வடநெறி.

(பொருள்: தென் நெறி : உளங்கவரும் செடி கொடிகளால் அழகாகத்தோன்றும் இயல்புள்ள நில மகள் பெருஞ் செல்வமுடையள். வடநெறி : கடலை மேகலையாகக் கொண்ட நிலமகள் எப்போதும் மிக்க செல்வம் உடையவளாய் அழகுறத் தோன்றலாயினள்.)

முடிவு

111. இருநெறி களிலும் ஏற்புடை யாவும்
தெளிவுறும் வண்ணம் தெரிந்து கூறினேன்.
புலவர்கள் தாமும் பொருந்திய முறையில்
காவியப் பண்பினை அழியாது காக்க.

கோமூத்ரி முதலிய அணிகள்

112. கோமூத்ரி, யமகம், கோபித க்ரியையொடு
அர்த்தப் பிரமம், சக்கர பந்தம்,
முரச பந்தம் என்பன மொழிவேன்.

113. இவ்வகை யமைவன எளியவை ஆகா.
விளக்கம், உதாரணம் விளம்புவன் மேலே.

சுவை கெடுதல்

114. சொற்கள், அடிகள், பாக்கள், அரையடி
இவற்றின் அமைப்பால் சுவைக்கேடு ஏற்படும்.
செய்யுளின் முதலில் சிறப்புடை அணிகளைச்
செறிப்பதும் சுவையைச் சிதைக்கக் கூடும்.

சொல்லால் சுவைகெடுதல்

115. முந்நம் தந்நம் தாநெ தாநேகெந்நம் கெந்நம் நிரந்தரம்
பிந்நம் பந்திப்பநம் திந்நும் தந்நம் தநக மேவளோ.

(பொருள்: முதலில் தன்னைத்தானே தான் ஏன் என்று சிறப்பாக எப்போதும் தனியாகவே தெளிந்து கொண்டிருக்க இன்னும் தன க்கு யார் கிடைப்பாளோ? (சொற்கள் பொருந்தாமையால் தெளிவில்லை. சுவை கெட்டது.))

அடியால் சுவைகெடுதல்

116. பீநம் காடு மதக்கேம் கேளந மாநஸிகம் மதா
தாநிம் தளிஜநம் கநா....... நதெஸநெ தேநநா.

(பொருள்: மிக்க துயர் கொடு. அகந்தைக்கு என்ன? தீச்செயல் வேண்டா. நான் தீயவன் ஆகிறேன். என்னவென்று சொல்ல?)

பாடலால் சுவைகெடுதல்

117. நாத பேதந நாதாநா நாதாநாமத நோதநா
நாத நோதமநாதாநா நாதா நாநத பேதநா.

(பொருள்: நாதத்தை நன்குணர்ந்தவனாக, கர்வமற்றவரைப் பாராட்டுவோனாக, காப்பவனாக, தானம் பெறாதவனாக உள்ளவன் நதியில் நீராடுபவன் ஆவான்.)

அரையடியால் சுவைகெடுதல்

118. நாநமாந மஸேநாஸே ஸேநா ஸேமந (மாநநா)
தீநயாந மநா நாதீ தீநா நாமந மாநதீ.

(பொருள் : நான் சிறப்பில்லாதவன்: படையிழந்தவன்; படை நாடுபவன்; பணிவுடையவன்; மானமுள்ளவன்; அநாதி முதல் எளியரிடம் ஈடுபாடு உடையவனாயுள்ளேன்.)

குறிப்பு : இப்பாடலில் ஒவ்வோரடியிலுமுள்ள பிற்பாதியையும் பின் முன்னாகப் படித்தால் முற்பாதிபோன்றே இருக்குமாறு, அரையடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இது மாலை மாற்று எனப்படும். (தண்டி-சொல்லணியியல் நூற்பா –97.)

கூடசதுர்த்தம்

119. இங்ஙனம் நால்வகை அமைப்புக்கள் இயலும்.
கூட சதுர்த்த உதாரணம் கூறுவேன்.

எடுத்துக்காட்டு

120. கநஸ்த நிதமும் கேகிஸ்வநமும் நீர தாரெயும்
மநம் பெர்சிர்க்குமிம் தெத்தம் சநமிம்து கநஸ்தநி

(பொருள்: இடியொலி, மயிற்குரல், இன்னருவி ஓசை இவையெலாம் அச்சம் எப்போதும் விளைக்கும்.)

(கூடம–இரகசியம். என்னைக் கூடுக என்பது கூடமாக உணர்த்திய பொருள்.)

ஓரெழுத்துப்பாடல்

121. நிந்நி0 நிந்ந நெநெ0 நிநா நாநா நநந0நநந0
நீநேநெ0 நந்ந0 நநாநா நி0நெநெநநா நந0

(பொருள்: நீயாகவே, என்போல் பல பண்புகள் உள்ளவனை, ஊனம் இல்லாதவனை என்னவென்றறிவாய்?)

ஈரெழுத்துப்பாடல்

122. மாநிநி முந்நமா0 நீநெநீநா நிந்நநு மாநமே0
மாந மாநாநெமு0 ந0 நை மாநமா நநமு0 நிப்நா

(பொருள்: நங்காய்! தொடக்கத்திலிருந்தே நம்மிடை வேறுபாடில்லை. ஐயம் என்ன? முதலில் நன்றாயிருந்த நின் முகம் இப்போது ஏன் இவ்வாறு ஆயிற்று?)

பொருள் அறிதற்கரிய சொற்கள்

123. கிடிபம் பாரகே மெய்யம் கிடிபம் கிடிபந்தெமும்
கிடிபம் போகுமே தாமும் கிடிஸல் ஸுடிஸோலமே.

(பொருள்: படைகளை அழிப்போம்; உடலை வீழ்த்துவோம். அங்ஙனம் கெடுத்தால் தோல்வி நீங்குமா?)

அதாலவ்யம்

124. மாருதீ பரமோதார தாரநொள் கூடு நல்லநொள்
ஸார காதம்பிநீ நாதநாரூட குண தாமநொள்.

(நாவிளிம்பு உறாத எழுத்து அதாலவ்யம் எனப்படும்.)

(பொருள்: மாருதீ! பெருவள்ளலானை, இந்திரனைவிட உயர்ந்த பண்புகளுடைய இறைவனை அடைவாய்.)

நிரோட்டகம்

125. நர நாயகநo நிoதா நிரதீகளெ காந்தநo
நெரதே நதறிம் தில்லா நெரெதிர்தா கெநா கெநெ

(இதழ்கள் சேராத எழுத்து நிரோட்டகம் எனப்படும்.)

(பொருள்: மன்னனான தலைவனை நான் இப்போதே கூடியுள்ளேன். அதனால் என்ன? கூடினால் குற்றமா?)

ஸர்வதோபத்ரம்

126. தீநா தீநா நாதி நாதீ நாநிம் நாநெநெ நாநிநா
தீநா தாநி நிதா நாதீ நாநெநிம் நநிம் நநா.

(பொருள்: இப்பாடலின் பொருள் விளங்கவில்லை. கன்னட மூல நூலிலும் இதன் பொருள் இல்லை.)

நிர் உத்தரம்

127. பெற(நா)வம் தரா சக்ரக் கெறயம் கெளெயப்பவம்
நெறெயாரெநெ யெம்பந்நம் குறிதப்திகெ பந்நமம்

(பொருள்: கடலுக்கே அழிவு உண்டாக்கியவன் நிலமண்டலத்திற்குத் தலைவன், எல்லோருக்கும் நண்பன் வேறு யார் உளன்? இவனுக்கு இணை யார்?)

(இல்லை என்பதே விடை.)

கோமூத்ரி

128. ஜலதாக மதிம் சித்தஸ்கலிதம் கேகி நர்த்தநம்
ஜலதாக மதிம் சித்தஸ்கலிதம் கேளநல்லநம்.

(பொருள்: கார்முகில் கண்டு களிப்புடன் மயில் நடம் செய்யும். கார்முகில் கண்டு மனம் நடுங்கும் ஏன்? காதலனைக் கேள்.)

யமகம்

129. அடியே, அரையடி, பாடல், முதல், ஈறு,
இடையென அறுவகை யமகம் இயலும்.

அடியமகம்

130. தாரா ஜாநகியம் போகி தாரா தரள நேத்ரெயம்
தாரா திபதி தேஜஸ்வி தாரா திவஜயோதய
(பொருள்: விண்மீன்களின் ஒளியை வென்ற திங்களின் எழிலை யுடையவனே! சுழலும் விழிகளையுடைய சானகியை அழைத்து வா.)

அரையடி யமகம்

131. கழிபம் தந்து நிந்(நமிக்க) ழிபம் க(ழி)வப்ச(ஏம்)
கழிபம் சஞ்ச நேத்ரெயம் கழிபம் பழி காதநு .
(பொருள்: தோல்வி கொடுத்து ஆசையை ஒழிப்போம. அடத்தினை (சலம்) அகற்றுவோம். கமலக் கண்ணியை அனுப்புவோம். பின் அவனை அனுப்புவோம்.)

முழுப்பாடல் யமகம்

132. தாரு தாருணநம் தாநவாரி வாரி த லோகரம்
பார பாரணமம் நோடா ஸாரா ஸாராம் பு தாபமம்.
(பொருள்: அச்சம் விளைவிக்கும் தேவர்களை வென்ற ஆற்றல் படைத்தவனே! மேகம் போல் இருண்டுள்ள போர்க்களத்தைப் பார். வா.)

முதல் யமகம்

133. ஸார ஸாரஸநாதா ஸார ஸாரா நிதம் பெ
தாரா தாரா தரம் காபா காரதா ரமணீயெய.
(பொருள்: அழகிய தாமரையின் அழகினையுடைய, உளங்கவரும் விண்மீன்களின் ஒளி படைத்த சுந்தரியை அழைத்து வா.)

இறுதி யமகம்

134. அஜேயம் போல்குமா மத்தகஜம் வாரிஜநாபநம்
த்ரிஜக(ந்மு)தநம் மத்தம் நிஜ நீள கநாபநம்

(பொருள்: வெல்லற்கரிய மதயானை, பத்மநாபனான மூவுலகிற்கும் மகிழ்வூட்டும் கார்முகில் வண்ணனை, திருமாலை ஒக்கும்.)

135. லோக வைதிக ஸாமைக லோகநா தார காரகா
நாகி நூதபத வ்யக்தி ஸ்ரீகாந்தா மமதா மதா.

(பொருள்: எல்லா உலகங்களாலும் மறைகளாலும் நூல்களாலும் புகழப்பட்ட, தேவர்கள் தொழும் திருவடிகளையுடைய திருமகள் என் ஆசைகளை நிறைவேற்றுவாள்.)

இடையமகம்

136. வாரி வாரி யொளா தாநம் வாரி வாரி விதர்கமம்
வாரி வாரி ஜவோதாநம் வாரி வாரி ஜநாபநொள்.

(பொருள்: திருமாலைப்பற்றி எண்ணும் போது மேலும் மேலும் ஒப்புதலும், மேலும் மேலும் ஐயமும், மேலும் மேலும் சிந்தனைகளும் தோன்றும்.)

சர்வயமகம்

137. வாவார நாரியொள் நெரெதெ வாநெல்லி நெ(ரெ)தெ
பாவார நாரியொள் நெரெதெநா நெல்லிநீம்
பரத(ரம்) தரிஸுவரிந்தரிய நெல்லம்
புரிது மாறதெ காணதம் திரிஸங்கடியொள்.

(பொருள்: உயர்ந்த பரத்தையைக் கூடினோம். நான் எங்கே கூடினேன்? நீ தான் கூடினாய். வணிகர்கள் பொருள்களை மறைத்து வைப்பர். நீ அதனைக் கற்றுக்கொள். அவர்கள் பொருள்களைத் தயாரித்துக் கடைகளில் மறைவாக ஒளித்து வைக்கிறார்கள்.)

138. திளிகொளநம் பூகொளநநதம் நெகளெ
முளிது கொள்வ பளஸெ நாநதம் நெ
தளெதா நெடமநங்க ஜநெ தப்பலா
களெநம்பவந தொப்புவம் வநேசரமதா.

(பொருள்: புகழ்தற்குரிய பூக்கள் நிறைந்த இந்தக் குளத்தில் நான் இறங்கேன். யானையைப் பற்றிப் பிடிக்கவல்ல முதலை, வேடனுக்கு இணையாக உள்ளது.)

அர்த்தப்ரமணம்

139. நரதாந பரு நிந்நெ நரதா கெநராகமா
அரிதை தந்தாதரிக்கும் பரிதாந பராதியெ?

(பொருள்: இப்பாடலின் பொருள் விளங்கவில்லை. கன்னட மூல நூலிலும் இதன் பொருள் இல்லை.)

முரச பந்தம்

140. வரதாத பராதந்யம் பரதாந பராதமம்
நெரதா வதிரா ஜந்யம் பரிஜந பராதமம்.

(உயர்ந்த கொடைகளை வழங்குவோனைவிட, உதவி நாடுபவர்களுக்குக் கொடுப்பவனே உயர்ந்தவன் ஆவான். மன்னர்களுள் தத்தம் சுற்றங்களைக் காப்பவர்களே மிகுதியாக உள்ளனர்.)

க்ரியாகோபகம்

141. அரஸிய திவ்ய ஸேவாதர திரதீகடெநி
ந்நரஸிய நெய்துவிநம் பரிஜநமம் களிபிம்.

[க்ரியா கோபகம்-வினைச்சொல் மாறுபாடு]

(களிபிம் → களிபு – திரிபு)

(பொருள்: அரச குலத்தின் மதிப்புக்குரிய நற்பண்புகள் மிக்க பரிவாரங்களை இப்போதே நின் அரசியின் பின் செல்லுமாறு அனுப்பு.)

சக்கரபந்தம்

142. ஸந்தம் பாழ்வுது நரபதொள் ஸௌஜந்ய லக்ஷ்மீ மதாம்
தம்தந் நிஸ்சய மெச்சிநீம் பரகுணௌ தார்யாபிமாநங்களிம்
பிந்தம் நோடதெ பாழிகெட்டளி பிநிம் பாழ்வந்தெ
பாழ்தய்யநா
ஸந்தம்தாம் பஸதம் தநழ்தி பெறுகும் தாநங்களம் பூபநா.

(பொருள்: நற்பண்புடைய நீ பிறரின் நற்பண்புகளை மதித்து, அவ்வரசனுடன் அமைதியாக வாழ்வதே உயர்வு. பழம் பகை பாராட்டாமல், பகையுடன் வாழ்ந்துவரும் நின் தந்தையின் பழைய நிலையை எண்ணாமல் அமைதியாக வாழ். அப்படியிருப்பின் வள்ளலான மன்னனின் அன்பு உன் மேல் பொழியும்.)

துஷ்கர காவியம்

143. முன்னைப் புலவோர் முன்னிய வாறு
இவ்வள வுரைத்தேன்; இதற்கு மேலே
கடினப் பாடல் வகைகளைக் கணித்துச்
சுருக்க மாகச் சொல்லப் புகுவேன்.

(துஷ்கர காவியம் – பொருள் கடினமான பாடல்)

அவைகளின் வகைகள் எட்டு

144. பாவெ, நுஸுளு, அஸ்பஷ் டாக்ஷரம்,
வர்ண வயத்யயம், பிந்துச் சுதகம்
ஒர்நுடி, வர்ணச் சுதகம், ஸமந்தகம்
என அவை எட்டென இயம்புவர் புலவோர்.

1. பாவெ

145. ஸவிஹிதமப்ப கர்ண பூரோத்பளமம்
தவளவிலோசநெய குணஸுந்தரமம்
கிவிவரம் நீள்த நயநயுக தொளொ
ப்புவவளா நவயவதேகெ களெயவேழ்தம் ப்ரியெயம்.

(பொருள்: அழகிய காதணியாகவுள்ள வெண்டாமரை போல் மலர்ந்த, காதுவரை நீண்ட கண்களையுடைய அவளை, ஏன் விட்டு வருமாறு கூறினன்?)
(பாவெ–சிறந்த முறையில் பெண்ணை வர்ணித்தல்)

2. நுஸுளு

146. உலகை வலம்வரும் கதிரவ னின்றும்
நீக்கலா காதது; எல்லா இடத்திலும்
ஒருசிறி தேனும் உள்ளது; மாய்ந்த
ஆளிடம் அதுதான் இருக்கா தாகும்.

('அது என்ன? காற்று' என்று முடிவது. நுஸுளு என்பது விடுகதை போன்றது.)

3. அஸ்பஷ்டாக்ஷரம்

147. நெட்டநெ தாம் ஸவியொ ளொந்திரெ போஜநமா
நட்டு படிஸு நாமறிய தெநஸும் ஸவியம்
புட்டி தாரு மறியததற பெஸரொ
ளட்டுதம் பேளெ கேள்தெநெந்தறியம்.

(பொருள்: நாம் சிறிதும் அறியாத சுவையுள்ள உணவைத் தயாரித்து விரைந்து வழங்கு. அப்பெயரால் தயாரித்த உணவை இதுவரை நான் கேள்விப்பட்டதில்லை.)
(மூன்றாம் அடியில் 'ஆரு' என்பதில் 'ஆறு' என்ற ஐயம் தோன்றலின் 'ரு' என்பது தெளிவற்ற அஸ்பஷ்டாக்ஷரம் ஆயிற்று.)

4. வர்ணவியத்யயம்

148. அவநா மகத்வ க்ஷுசயம்
த்ரவ நொசரா மயதஷ்ட பாயதெ களொள்
ஸெவிஸெ வமல ஹைவஸு முக்தி மஹா
தெவ நிந்நந்ந நப்பொ நஸஹாய குணம்.

(முதலடியில் 'சக்ஷு' என்பது 'க்ஷுச' எனவும் இரண்டாம் அடியில் 'வக்ர' என்பது 'க்ரவ' எனவும் எழுத்துக்கள் இடம் மாறியமைந்திருப்பது வர்ணவியத்யயம்.)

(பொருள்: இப்பாடலின் பொருள் விளங்கவில்லை. கன்னட மூல நூலிலும் இதன் பொருள் இல்லை.)

5.பிந்துச்சுதகம்

149. ஸொகயிஸுகு மிந்த்ர நீலமணி ஸந்நிபதொள்
மிகெ ஜளநிதி யொள குதித திந்திரத வொல்
நெகெ ததி தவள மூர்த்திகெ கநவளய *ஸதக்த
ககந தொளுளிதுளிது* விஸாளி தாஸா வளயம்.

(* இவ்விடங்களில் ஒற்று (பிந்து) மறைந்து உள்ளது)

(பொருள்: வானத்தின் கோடியில் திசைமண்டலம் நீலமணி போலவும், குளத்தில் மலர்ந்த தாமரை போலவும், சூரியனைச் சூழ்ந்து மேகத்திரள்களுடன் கூடி அழகாகத் தோன்றுகிறது.)

6. ஓர் நுடி

150. ஆவுது பாகிதுது மதிகம் பஸநம்
கேவளமாகெ நெகவுது சிதாவயவம்
தீவதிம் நிந்து ஸிதகநம் நுடிவுது
பாவிஸி பகெகொள் வொ<u>டார</u> கொர் நதியம்.

(ஓர் நுடி – சிலேடை போன்றது. 'ஆர' என்பது மாலை, தலை குனிதல், கவர்ச்சி என்ற பல பொருள் தருவதாயுள்ளது.)

(பொருள் :- மாலை கழுத்தில் வளைந்து சூழ்ந்துள்ளது. மனிதன் சலிப்புடன் அதனை நீக்கினால் தொடர்புடைய உறுப்பு துள்ளுகிறது. அது விளக்குடன் இணைந்த சுடராகிக் காமுகனை வெளிப்படுத்தும். இம்மாலையைச் சரியாக ஆய்ந்து பார்த்தால் நதியாகத் தோன்றும்.)

7. வர்ணச் சுதகம்

151. தளமள(கோ)த்தும் ஜநித நிஜ பீதி மநம்

கொளெகள வளிஸி சலித நிலலண்மதெ(மொ)

க்கள(மொ) ளகெ ஸூழி தாரஸம் மநதொள்

முளி தஸியநெ நோ(டெ) பரிவாரதவா.

(வர்ணச் சுதகம் – எழுத்து மறைவு. இதில் 'மொ' மறைந்துள்ளது.)

(பொருள்: பகைவரைக் கண்டு அஞ்சிய பரிவாரங்கள், அரசன் தன் வாளினை நோக்கக் கண்டு அச்சம் தவிர்ந்தன.)

8. ஸமந்தகம்

152. விகளித ராகநா வொம் நிந்நாவுதற

ஸொகயிஸுகும் கடகத்வமம் ஸமர்த்த பலம்

பகெ தெந கொய்ய நெஸகெயிது வொதா

லக லலாடி ஸுகுமதெ பேழ்தெம் பநதொள்.

(ஸமந்தகம் என்பது கடினமான பொருள் உடையவை பலவும் வருதல்.

1. 'விகளித ராக நாவும்' என்பது நிர் உத்தரம்.
2. 'கடகத்வமம்' என்பது தலைநகர், யானைப்படை எனப்பொருள் தருதல் ஓர்நுடி.
3. 'நெஸகெயிது ...... பநதொள்' என்பதில் எஸ–எஸஸ என்பது அஸ்பஷ்டாக்ஷரம்.
4. ஆலக' என்பது 'ஆகல' என வந்தது வர்ண வியதயயம்.
5. 'ராகம்' – 'அன்பு' என்றும் காமம் குரோதம முதலியன என்றும் பொருள் தருவது ஓர்நுடி.)

(பொருள்:நின்போல் காமம் முதலியவற்றைத் துறந்தவன் யார்? ஆற்றல் மிக்க, மதம் அகன்ற யானைபோல் காட்டில் தங்கி இன்பமாக இருப்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.)

முடிவு

153. அதிசய தவளன் அருளிய முறையில்
உயர்ந்த தன்மையில் ஒளிரும் அணிகளை
நூல்வல புலவர் நோக்கிற் கிணங்கக்
கல்விப் பண்புடன் காட்டுதல் ஆமோ?

154. புலவர்தம் புலமை கடந்த பொற்புடை
அணியிலக் கணமெனும் ஆழியின் அலைபோல்
அணிகள் பற்பல அசைவுகள் உடையன;
சொல்லின் வேந்தன் நிருப துங்கனின்
சொற்களில் தூய்மையும் ஆழமும் உடையன.

155. சொல் வகை யுணர்ந்து, பல்வேறு மொழிகளின்
பண்பையும் ஆய்ந்து, பழம்பெரும் புலவர்தம்
வழக்கும் நலனும் மாண்புறத் தேர்ந்து,
ஸ்ரீவிஜயன் அருளிய செய்யுள் இன்பத்தைத்
தனதாக் கொண்டனன் கவீஸ்வரன் தானே.

இது ஸ்ரீ நிருபதுங்க தேவனுக்கு விருப்பமான கவிராச மார்க்கத்தில், சொல்லணி இலக்கணம் என்னும் இரண்டாம் பரிச்சேதமாகும்.

மூன்றாம் பரிச்சேதம்

* பொருள் அணிகள்

1. மாமன்னன் அமோக வர்ஷன் வளர்புகழ்
நிருப துங்கன் நெறியை ஓர்ந்து
பொருளணி யனைத்தின் புகலருஞ் சிறப்பெலாம்
உணர்ந்து கூறுவன் உளங்கொளு மாறே.

அணிகளின் பெயர்கள்

2. சாதி, உருவகம், வேற்றுப்பொருள் வைப்பே
வேற்றுமை, நிரல்நிறை, தீவகம், உவமை,
அதிசயம், ஒப்புமைக் கூட்டம், ஆட்சேபம்,

3. சிலேடை, தற்குறிப்பேற்றம், சூட்சுமம்,
விசேடம், சமாயிதம், சமாசம், பரியாயம்,
விரோதம், அப்ரஸ்துதம், நி தர்சனம்
ஸஹோக்தி, சங்கீ ரணம், பரி விருத்தி

4. வியாஜஸ் துதி, ஏது, விபாவனை, லவமே,
உதாத்தம், அவநுதி, சுவையே, ஊர்ஜிதம்,
வ்யாவி ருத்தி, ஆர்வ மொழி, வாழ்த்தொடு
மொழிந்திடும் அணிகள் முப்பத்து நான்காம்.

5. பழம்பெரும் நூல்களில் பகரப் பட்ட
புகழ்மிகு பொருளணி இலக்கணம் யாவும்
காட்டும் விளக்கமும் கவின்பெற வழங்கி
ஒவ்வொன் றாக உரைக்கப் புகுவேன்.

---

* இவை தமிழ் தண்டியலங்காரம் கூறும் பொருளணிகளோடு பெரிதும் ஒப்புமையுடையவை.

1. சாதியணி+

6. பொருள்கள் யாவும் வஸ்து சாதி
தொழிலின் சாதி குணத்தின் சாதி
திரவிய சாதி எனநால் வகையாம்.
இவற்றின் இயல்பை இயம்புதல் சாதி.

(அ) வஸ்து சாதி

7. வெள்ளைக் கடைக்கண் பார்வை மேவிய
மயிலின் குரல்ஒலி வான்எதிர் முழங்கப்
பசுந்தளிர்ப் படுக்கையில் அமர்ந்த மயிலே
கார்வரக் கண்டு களிப்புடன் ஆடும்.

(மயில் தன் இனம் முழுதையும் சுட்டியது.)

(ஆ) தொழில் சாதி

8. கண்பாதி மூடிக் காடுறை களிறு
பசுங்கொடித் தளிர்களைப் பறித்துண் ணாமல்
காம வயப்பட்டுத் தனது காதலிக்குத்
துதிக்கை கொண்டு தன் கருத்தைச் சொல்லும்.

(மூடி, தின்னாமல், தன் கருத்தறிவித்தது என வந்தது தொழில் சாதி.)

(இ) குண சாதி

9. கண்கள் குவிதல், உள்ளக் களிப்பே,
உடலில் புளகம், உண்ட மதுவினால்
உரைதடு மாற்றம்–உற்ற காதலியின்
குணங்களின் சாதி என்றே கொள்க.

+ இது தன்மையணியை ஒருபுடை ஒக்கும்.

(ஈ) திரவிய சாதி

10. மெல்லிடை, அகல்விழி, வீங்குநகில் உடையாள்,
செய்நைத் துடிப்புறும் செவ்விய மேனியாள்.
பெரிதாம் அல்குலாள், பெட்புறு நங்கையைப்
பிரிந்தேன் ஆகலின் பெரிதும் வாடினேன்.

(இடை, விழி, மேனி, அல்குல் என்பன திரவிய சாதி.)

2. உருவக அணி

11. வியன்மிகும் அதிசய தவளன் விளம்பிய
சாதி யணியைத் தகவுடைப் புலவர்கள்
இங்ஙனம் தெளிக. இதனைத் தொடர்ந்துயான்
இனிய எழிலுறும் உருவகம் இசைப்பேன்.

12. விளம்பற் கினிய உருவகம் வினவின்
உவமையே பொருளாய் ஒன்றிடப் புனைதல்.
தோட்கொடி, அடிமலர், முகமதி, கண்வண்டு
இவையெலாம் உருவக எடுத்துக் காட்டாம்.

(1) சம்ஸ்த உருவகம் (தொகையுருவகம்)

13. நகை மலர், இதழ்த்தளிர், கண்வண்டு, தோட்கிளை,
பெண்கொடி எனவரும் பெட்புறு தொடர்கள்
பண்புருபு தொக்கு நின்ற பான்மை யால்
தொகையுரு வகமெனச் சொல்லப் படுமே.

(2) வியஸ்த உருவகம் (விரியுருவகம்)

14. பூ நகை யாக, வண்டுகண் ணாக,
தளிர் இத ழாக, கிளைதோள் ஆக,
கொடி பெண் ணாக என விரித்துக் கூறின்
விரியுரு வகம் என விளம்பப் படுமே.

(3) அவயவ உருவகம்

15. செவ்வாய் இதழ்த் தளிர் சிறப்புறு கண்மலர்
அசையும் தோட்கிளை உடைய அணங்கென
அவயவம் தம்மை உருவகம் ஆக்கலின்
அவயவ உருவகம் ஆகிய தறிக.

(4) அவயவி உருவகம்

16. பிறழும் கண்களும் பெருகிய காதலும்
தன்பாற் கொண்ட நின்முகத் தாமரை
தந்திடும் இன்பம் சாற்றொணா வனப்பால்,
அவயவி ஆம்முகம் உருவகம் பெற்றது.

(5) விஷம உருவகம் (மாறுபாடு உருவகம்)

17. மென்மை மேவிய கன்னப் பலகையும்
நிமிர்ந்த புருவ வில்லும் கொண்ட உன்
முகத்தா மரைதான் மூட்டும் மகிழ்ச்சி.
கன்னமோ மென்மை; பலகையோ வன்மை
புருவமோ நிமிர்ந்தது; வில்லோ வளைந்தது.
இங்ஙனம் மாறுபடல் விஷம உருவகம்.

(6) விசேடண உருவகம் (அடைமொழி உருவகம்)

18. அருகன் திருவடி நகக்கண்ணாடியொடு
தோல்விகொள் இந்திரன் முகமதி தனக்கே
இணையாய் இலங்கும் நீ என் உளத் தென்றும்
நிலைப்பாய் என்பது விசேடண உருவகம்.

(7) விருத்த உருவகம்

19. வாவியில் முழுகுதல், சக்கர வாகம்
துன்புறச் செய்தல் இரண்டும் செய்யாது
நின்முக மதியே; எனினும் நின்முகம்
திங்களே என்பது விருத்த உருவகம்.

(8) ஏது உருவகம்

20. உயர்வால் குலகிரி; பொறுமையால் பூமி;
அமைதியால் திங்கள்; பெருமிதம் தன்னால்
கடல் நீ என்னக் காரணம் காட்டிடல்
ஏது உருவகம் என்னப் படுமே.

(9) சிலேடை உருவகம்

21. குமுதா நந்தந கரவதி
கமலாகர ராக ஹரமுதாரம் நிந்நா
விமள யசோவிது – என்பது
சிலேடை உருவகம் என்னத் தெளிக.

('குமுத' என்பது குமுத மலரையும், கு+முத எனப் பிரிந்து பூமியை மகிழ்விக்கும் என்ற பொருளையும் குறிக்கும். 'கர' என்பது கிரணம், கை இரண்டையும் குறிக்கும். 'கமலாகர' என்பது குளத்தையும் பொக்கிஷத்தையும் குறிக்கும். யசோவிது – புகழாகிய திங்கள்.)
(பொருள் : 'தாமரைகளுக்கு மகிழ்ச்சி தருவதும், பொய்கையின் வனப்பைக் கவர்வதுமான உனது களங்கமற்ற புகழ் என்னும் திங்கள்' என உருவகம் அமையும்.)

(10) விபிந்ந உருவகம் (வேறுபடு உருவகம்)

22. வீரம் மிக்க காலைக் கதிரவன்
நிலவிடும் வானம் நெருங்கிய சுற்றத்தின்
அன்பாம் பயிர்க்குப் பொழியும் நீர்; அதுவே
பகைவராம் மரங்கட்குப் பற்றிடும் தீயாம்.

('வானம் பயிர்க்கு நீர்; மரங்கட்குத் தீ' என இருவேறு உருவகம் ஆகி நின்றது.)

(11) உருவக உருவகம்

23. முகத்தா மரையரங் கதனில் ஏறி
நிமிர்ந்த புருவக் கொடிப் பெண் நின்று
சிறந்த கூத்தினைச் செய்தனள் என்பது
உருவக உருவகம் ஆதல் உணர்க.

(முகமாகிய தாமரையாகிய அரங்கு எனவும்
புருவமாகிய கொடியாகிய பெண் எனவும்
விரித்துக் காண்க.)

(12) அவநுதி உருவகம்

24. முகமன்று தாமரை; கண் அன்று வண்டே;
நகையன்று மலர்ச்சியே என்று மறுத்து
உருவகம் செய்தல் அவநுதி உருவகம்
என்பது தெளிக இயல்புணர்ந் தோரே.

(13) யுக்த உருவகம் (இயைபு உருவகம்)

25. முகத்தா மரையில் நகையெனும் அரும்புகள்
எழிலுற விளங்கும்; இருகண் என்னும்
வண்டுகள் மகிழ்வுடன் வலம்வரும் என்றல்
இயைபுரு வகம் என இயம்பப் படுமே.

(14) வியாஜ உருவகம்

26. நகைத்தலால் விளக்கே; நல்ல திங்கள்
முகம் எனப் படுதலால் முயல்உருக் களங்கம்
கண்ணே; ஆகலின் கருதிடும் இவையெலாம்
கவினுறக் காணும் என்பது வியாஜம்.

3. வேற்றுப் பொருள்வைப்பணி

27. இங்ஙனம் யானும் உருவக வகைகளைச்
சுருக்கிச் சொன்னேன்; சொல்லாதவற்றை
இலக்கியம் கண்டு தெளிதல் ஏற்கும்.
விளக்குவன் இனியான் வேற்றுப்பொருள் வைப்பே.

28. ஒருபொருள் தன்னை விளக்குதல் உன்னித்
தொடர்புறு மற்றொரு பொருளைத் தொடுத்து
முடித்து மொழிதல் வேற்றுப்பொருள் வைப்பாம்.
அதன்வகை யாவும் அமைவுறக் கூறுவேன்.

வகைகள் எட்டு

29. முழுவதும் சேறல், ஒருவழிச் சேறல்,
கூடா இயற்கை, இருமை இயற்கை,
சிலேடை, முரணே, விபரீதம் மற்றும்
கூடும் இயற்கையோடு எட்டெனக் கூறுப.

(1) முழுவதும் சேறல்

30. உதிக்கும் கதிரவன், ஒளியும் வேகமும்
உடையவன்; மாலையில் ஒளிந்து மறைந்தான்
இயற்கையை மீறுதல் யாராலும் இயலாது!
முழுவதும் சேறல் இதுவென மொழிவர்.

(2) ஒருவழிச் சேறல்

31. தாமரையின் காதலன் தான் மறைந் ததனால்
தாமரைக் குலம் எலாம் தாங்கொணாத் துயரால்
குவிந்து கொள்ளும்; தலைவன் பிரிவால்
சுற்றம் முழுதும் துயர்மிகக் கொள்ளும்.

(3) கூடா இயற்கை (யுக்த காரி)

32. திங்களும் தென்றலும் சந்தனம் தானும்
இன்னல் விளைக்கும் பிரிந்தோர் இடையில்.
காதலர் துன்பம் தீவினைப் பயனே.
இங்ஙனம் வருவது கூடா இயற்கை.

(4) இருமை இயற்கை (யுக்தாயுக்தம்)

33. * 'முயற்கறைத் திங்கள் ஒளிவிடும் போது
மலர்ந்த மாமரம் மகிழ்ச்சி கொள்ளும்.
மலர்கள் மணக்கும் இரவின் மன்னன்
மகிழ்வன்' என்பது இருமை இயற்கை.

(5) சிலேடையின் முடிதல்

34. செவ்வானம் என்னும் செல்வியைச் சேர்ந்தே
இராகம் உற்றனன் எழிலுறு கதிரவன்.
வாருணி தன்னை வெளவினன் கதிரவன்.
இராகம் மிகுவதற் கிதுவே ஏது.

(இராகம் – செந்நிறம், அன்பு எனவும் வாருணி – மேல்வானம், வருணன் மனைவி எனவும் சிலேடைப் பொருள் தந்தன.)

(6) முரணித் தோன்றல் (விருத்தாத் மகம்)

35. நதிகளின் நாயகன் ஆன கடலைக்
கறையுறு திங்கள் பொங்கிடச் செய்வான்.
கலையொளிர் அறிஞன் கனமிகு புகழினைப்
பிறர்கட்கு நல்காது தான்மட்டும் பெறுவான்.

(7) விபரீதம்

36. வசந்த கால வான்மதி எனக்கு
மிகுந்த துன்பம் விளைவிக்கிறான்; அவனும்
துன்பம் கொள்கிறான் என்று சொல்வது
விபரீதம் என்று விளம்பப் பெறுமே.

---

* 33, 34, 36, 37 ஆகிய பாடல்களில் வேற்றுப் பொருள்வைப்பு நன்கு புலப்படவில்லை.

(8) கூடும் இயற்கை (யுக்தார்த்தம்)

37. அசோகின் செந்தளிர் அமளி என் மெய்யை
வெம்மையின் சுட்டிடும்; செவ்வொளி நெருப்பும்
அக்குணம் உடையது. ஆய்ந்திதை நோக்கின்
கூடும் இயற்கையாம் யுக்தார்த்தம் ஆகும்.

4. வேற்றுமை அணி

38. இலக்கிய வல்லுநர் இங்ஙனம் ஓர்ந்து
வேற்றுப் பொருள் வைப்பில் மேவும் வகையெலாம்
செவ்வனே தெளிக. இனியான் தேர்ந்து
வேற்றுமை அணியை விளக்குவன் கேட்க.

39. ஒப்புமை யுடைய இருவேறு பொருள்களைக்
குறிப்பிலும் வெளிப்படைக் கூற்றிலும் சுட்டி
வேறுபடக் கூறுதல் வேற்றுமை அணி எனக்
குணோதய நிருப துங்கன் கூறினன்.

(1) ஒருபொருள் வேற்றுமை

40. திருமகள் உடைமை சீரழ குடைமை
பெருமிதம் உடைமை என்னும் பெற்றியால்
ஆழியை அனையை ஆயினும் உன்றன்
அழகிய வடிவம் தனிச் சிறப் பாகும்.

(2) இருபொருள் வேற்றுமை

41. தாமரை யுகக்கும் தகவிலும் சாற்றும்
தோற்றப் பொலிவிலும் சுடர்க்கதிர் அனையை
கட்டுப்பா டின்றித் திரிகுவன் கதிரவன்.
காவலன் நீயோ கட்டுப்பா டுடையை.

42. வேந்தே நீயும் வெண்மதிச் செல்வனும்
நற்பண் புறுவீர்; நங்கையர்ச் சூழ்வீர்;
இன்பம் உடையீர் எனினும் வெண்மதி
இரவினன்; நீயோ ஈகை உடையை.

43. தோள்வலி யுடைமையும் துளக்கம் இன்மையும்
தோற்றத் துயர்வும் கொண்டு தோன்றினும்
மேரு மலையோ கடினம் மிக்கது.
வேந்தே! நீயோ மிகும்எழில் உடைய்ய.

44. வேந்தே! நின்போல் நிலத்தொடு மேவி
வேண்டுவ நல்கும் மேன்மைய தாயினும்
கற்பகம் தனக்குக் கல்வி யறிவிலை.
மன்னவ! நீயோ மதிமாண் புடையை.

45. களிக்கும் வண்டின் கணமும், மென்மையும்,
வனப்பும், மதுவும், பொகுட்டும் தாமரை
பெற்றது; நின்முகம் பெரிதும் உலவும்
கண்களும் செவ்விதழ்க் கவினும் உடையது.

46. கூதிர் வானமும் இந்தக் குளமும்
ஒளியும் வெண்மைப் பரப்பும் உடையன.
வானம் தனக்கு மதியொளி வனப்பு
குளமோ அரச அன்னங்கள் கொண்டது.

47. மதர்த்தெறி விழிகளும் கொடிகளின் வனப்புறும்
புருவமும் உடைய நின் பொற்புறு முகத்தை,
எத்தனைப் பண்புகள் இருப்பினும் தாமரை
ஒவ்வா தென்பதும் உண்மை உண்மை.

48. நெருப்பு மிகவும் ஆற்றல் நிறைந்தது;
களங்கம் அற்றது கரிந்த துகள்களைக்
காற்றால் நீரில் கழுவுதல் தவிர்க்க.
காரணம் இன்றிக் கலககிடும் கொடிய
பாவமாம் மாசு படைக்கும் பழியினை
அறிவு முற்றிய ஆன்றோர் அகற்றுக.

(இப்பாடலின் பொருள் தெளிவாக விளங்கவில்லை.)

5. நிரல் நிறையணி

49. வேற்றுமை யணியின் விசுற்பம் யாவும்
விளங்கிக் கொள்க மேன்மைப் புலவோர்.
நேரே நிறுத்துதல் மொழிமாற்றி நிறுத்துதல்
எனுமிரு வகைப்படும் நிரல்நிறை இயம்புவேன்.

(1) நேர் நிரல் நிறை

50. அன்ன நடையாய்! அழகுறும் உன்றன்
குழல், முகம், கண்கள் மூன்றும் கொண்டு
வண்டு, தாமரை, குவளை மூன்றையும்
வென்றதால் குளத்தை ஒப்பாய் என்பது
நேரே நிறுத்திய நேர் நிரல் நிறையாம்.

(2) மொழி மாறியுள்ள நிரல் நிறை

51. தாமரை, குவளை, வண்டுகள் தம்மைக்
குழல், கண், முகங்களால் கொள்ளை கொள்வதால்
வாவியை ஒப்பாய். ஏன் அதை உணர்கிலாய்?
என்பது மொழிமாற்று நிரல் நிறை எனப்படும்.

6. தீவக அணி

52. நேரே நிறுத்துதல் மொழிமாற்றி நிறுத்துதல்
எனும் நிரல் நிறைக்கிவை ஏற்ற காட்டாம்.
தீவக அணியின் வகைகளைச் செவ்விதின்
இலக்கண இலக்கியம் காட்டி இயம்புவேன்.

53. சாதி, தொழில், குணம், பொருள் எனச் சாற்றும்
நால்வகைச் சொல்லும் ஓரிடம் நண்ணி
வாக்கியம் முற்றும் வந்து பொருந்துதல்
தீபம் அனைய தீவகம் ஆகும்.

(1) முதல் நிலைச் சாதித் தீவகம்.

54. பொதிகைத் தென்றல், மரங்களிற் பொருந்திய
பழுப்பிலை யனைத்தையும் பையவே உதிர்க்கும்;
இடையிடை எழிலார் அரும்புகள் இணைந்த
தளிர்கள் தம்மைத் தழைக்கச் செய்யும்.

(2) முதல் நிலைத் தொழில் தீவகம்

55. திரியும் தெளிந்த ஆழ்கடல் சூழ்ந்த
நிலமும்; வேகமாய் நிறைநீர் ஏரியின்
பள்ளத் தாக்கும் பாங்குறத் தோன்றி
வனப்பின் இருப்பென வயங்கக் காட்டி.

(3) முதல் நிலைக் குணத் தீவகம்

56. நன்கு விளங்கும் உன் வடிவம் நல்ல
சிறப்புடை அணிகலன் சேர்ந்த தன்மையால்,
திங்கள் ஒளியால், செறிந்தநின் புகழால்
திசைகள் எங்கும் தெள்ளத் தெளிவாய்.

(4) முதல் நிலைப் பொருள் தீவகம்

57. கதிரவன் கவினுறும் உதய கிரிமுடி
அணியாய் இருந்தான்; அடர்ந்த இருளை
அகற்றினான்; விண்மீன் அனைத்தின் ஒளியையும்
மங்கச் செய்து மாய்த்திட் டனனே.

முடிவு

58. சாதி முதலாச் சாற்றிய தீவகம்
முதல்நிலை இடைநிலை கடைநிலை யாகிப்
பல்வகை யாகப் படர்ந்திடும் பாங்கினைக்
காட்டுக்கள் கண்டு கற்றோர் தெளிக.

7. உவமையணி

59. இயல்புகள் வேறுபடும் பொருள்கள் இடையே
ஒன்றோ பலவோ ஒப்புமை யுணர்த்தி
உவமிப் பதுதான் உவமை யணியாம்.
திகழும் இவ் வணியின் திறங்களைச் செப்புவேன்.

(1) பொருள் உவமை

60. தாமரை யன்ன முகமெனச் சாற்றலும்
குவளை யன்ன விழியெனக் கூறலும்
ஒண்டளிர் அன்ன அங்கையென் றுரைத்தலும்
பொருளுவமை என்னப் புகலப் படுமே.

(2) பண்புவமை (தர்மோபமம்)

61. தளிர்போல் மென்மை சார்ந்திடும் அங்கை
தும்பிபோல் கருமை தோற்றும் கூந்தல்
என்று விளக்கும் இவ்வகை உவமையைப்
பண்புவ மையெனப் பாவலர் தெளிக.

(3) விபரீத உவமை

62. வதனம் போல மலர்ந்தது தாமரை;
அங்கைபோற் சிவப்பினை அடைந்தன தளிர்களென
உவமேயந் தன்னை உவமையாய் உரைத்தல்
மேலோர் போற்றும் விபரீத உவமையாம்.

(4) இதர இதர உவமை (பரஸ்பர உவமை)

63. பொற்புறு தாமரை நின்முகம் போலும்;
நின்முகம் தாமரை நிகர்க்கும் என்று
பொருத்திக் கூறும் புகழ்மிகும் உவமையை
இதர இதரம் என்பர் புலவர்.

(5) நியம உவமை

64. நேரிழை நின்முகம் தாமரை நிகர்க்கும்;
உறுபொருள் பிறிதெதும் ஒப்பா காது.
என இவ் வாறு நியமித் திசைத்தல்
நியம உவமையென நிகழ்த்தப் படுமே.

(6) அநியம உவமை

65. நின்முகம் தானும் தாமரை நிகர்க்கும்;
வேறு பொருளொடும் ஒப்புமை மேவும்
என்று வரையறை இன்றி இயம்புதல்
அநியம உவமை ஆகுமென் றறிக.

(7) அதிசய உவமை

66. காரிகை முகம் என் கண்களுக் கின்பம்.
தாமரை தானும் வண்டுகட் கின்பம்.
இங்ஙனம் இசைத்தல் யாவரும் போற்றும்
அதிசய உவமை என் றறையப் பெறுமே.

(8) தற்குறிப்பேற்ற உவமை

67. பாவை இவள்முகம் பல்வேறு பொருள்களை
ஒக்கும் என்பதால் ஒண்டா மரைக்கும்
வான்மதி தனக்கும் ஆர்வம் வளரும்
என்பது தற்குறிப் பேற்ற உவமை.

(9) அற்புத உவமை

68. வனப்புறு புருவத்தின் மயக்கும் தன்மையும்
பரந்து சுழலும் விழிகளின் பாங்கும்
உன்முகம் உடைமையின் உன்முகம் தனக்குத்
தாமரை ஒப்பெனச் சாற்றுதல் அற்புதம்.

(10) மோக உவமை

69. வனச மலர்மேல் மயக்கம் கொண்ட
வண்டுகள் உன்றன் வதனம் தன்னை
வனசம் என்றே மயங்கி ஆர்வமாய்
முகத்தில் மொய்க்கும் என்பது மோகம்.
(மோகம் – மயக்கம்)

(11) ஐய உவமை

70. தாமரை மலரோ? முகமோ தானோ?
தும்பிகள் தாமோ? சுழலும் விழிகளோ?
என்றென் உளத்தில் இடம் பெறும் ஐயம்.
எனவரல் ஐய உவமை எனப்படும்.

(12) ஊர்ஜித உவமை

71. மங்கையுன் வதனம் தாமரை, மதிகளின்
அழகுகள் தோற்கும் அழகினது; அதுவே
மதியை வெல்லும் வனப்பின் ஆதாரம்.
இங்ஙனம் இசைத்தல் ஊர்ஜிதம் எனப்படும்.

(13) சிலேடை உவமை

72. உயர்திரு வுகக்கும் உறைவிடம் ஆவதும்
நிலவினை விஞ்சும் மேன்மை நிறைந்ததும்
ஆன நின்முகம் கமலம் அனையதாம்.
சிலேடை உவமை இதுவெனத் தெளிக.

(14) நிந்தை உவமை

73. தாமரை தன்பால் தாதினைக் கொண்டது;
மதியோ தன்பால் மறுவினைக் கொண்டது.
உன்றன் வதனம் அவற்றை ஒக்குமெனல்
நிந்தனை உணர்த்தும் நிந்தை உவமையாம்.

(15) புகழ் உவமை

74. திங்கள் தண்ணிய கதிர்கள் செறிந்தது.
தாமரை தூய தனியழ குடையது.
உன்றன் வதனம் அவற்றை ஒக்குமெனல்
புகழ் உவ மையெனப் புகலப் படுமே.

(16) விரோத உவமை

75. கூதிர்க் குளிர்மதி, குளத்துறு தாமரை
இரண்டும் பகைமைகொள் இருபொருள் ஆயினும்
உன்றன் முகத்தினுக் குவமை உறுமெனல்
விரோத உவமைஎன விளம்பப் பெறுமே.

(17) உண்மை உவமை (தத்வாக்யான உவமை)

76. வண்டுக ளேயிவை, மைவிழி யல்ல
வாச மலரே, வதனம் அன்று.
என்ன இசைத்தல் ஒத்துதற் குரிய
உண்மை உவமையென் றோதப் பெறுமே.

(18) பொது நீங்குவமை (அசாதாரண உவமை)

77. மதியும் வனசமும் மங்கைநின் முகத்திற்கு
உவமை யாகா; உன்முகம் தானே
உவமை யற்றது; உன்முகம் தனக்குன்
முகமே உவமை என்று மொழிதல்
பொது நீங் குவமை புலவர் தெளிக.

(19) இல்பொருள் உவமை (அபூத உவமை)

78. உயர்ந்த மதியின் ஒளிக்கதிர் திரட்டி
உருவாக்கி யதுபோல் உன்முகம் உளதே.
அதிசயம் இதுவென அறைதல் தானே
இல்பொருள் உவமை என்னப் படுமே.

(20) கூடா உமை (அசம்பவ உவமை)

79. திங்களில் நஞ்சும் சந்தனத்தில் தீயும்
இயைந்தன என்னஉன் எழில்வாய் அதனில்
வன்சொல் வந்ததே என்று வழங்குதல்
கூடா உவமையெனக் கூறப்படுமே.

(21) பல்பொருள் உவமை (பஹு உவமை)

80. நங்கையை அணைத்தல் நளிர்மிகு சந்தனம்,
மதியம், ஆலங் கட்டி, மதிக்கல்
தண்புனல் போன்றே இன்பம் தருமெனல்
பல்பொருள் உவமையெனப் பகரப் படுமே.

(மதிக்கல் – சந்திரகாந்தக்கல்)

(22) மாலை உவமை

81. வீரம், மானம், மேன்மை, வண்மை
என்னும் இணையிலாப் பண்புகள் தம்மால்
மால் போல் உயர்ந்தவன் என்றே வழங்குதல்
மாலை யுவமை என வழங்கப் படுமே.

(23) வாக்கிய உவமை (எடுத்துக் காட்டுவமை)

82. மங்கையுன் வதனம் மயல்விழி விளைக்கும்
காதல் தன்னால் கவின்மிகக் கொண்டது.
தாமரை மலரது தன்பால் விளைந்த
மலர்ச்சி தன்னால் வனப்பினைக் கொண்டது.

(24) சந்தான உவமை

83. புள்ளினம் இழந்த மரக்கூட்டம் போலவும்
எருவினை இழந்த தூயமண் போலவும்
காதலை இழந்த கன்னி போலவும்
சினம்உறு நின்உரு இயற்கைத் திருவினை
இழந்தது என்றல் சந்தான உவமை.

(25) மறுபொருள் உவமை

84. வேந்தே! நின்போல் மிகுபுகழ் விளைத்தவன்
உளனோ? அதுபோல் உயர்மதி, செங்கதிர்
ஒளியை ஒக்கும் ஒளிவே றுண்டோ?
இங்ஙனம் இயம்பல் மறுபொருள் உவமை.

(26) ஏது உவமை

85. ஆற்றலால் மேரு அனையை; அவிர்ஒளி
அதனால் ஞாயிறு அனையை; அழகால்
விண்மதி அனையை என்று விளக்குதல்
ஏது உவமை என்னப் படுமே.

உவமையில் குணம், குறைகள்

86. உயர்த்திப் புகழ்தல் உயர்வின்றிப் பழித்தல்
பால், எண் இரண்டும் மாறுகொளப் பகர்தல்
எனும் குணம் குறைகள் இயையும் உவமையில்.
தக்க எடுத்துக் காட்டுகள் தம்மால்
ஐயம் இன்றி அறிந்து தெளிக.

(1) உயர்த்திப் புகழ்தல்

87. இந்திரன் நின்போல் எல்லையில் செல்வன்.
பெருங்கடல் நின்போல் பெருமிதம் பெற்றது.
என்று புகழ்தல் ஏற்றம் ஆகும்.
குறையிது என்னாது குணம் எனக் கொள்வர்.

(2) உயர்வின்றிப் பழித்தல்

88. வாவிபோல் வானம் தெளிவாய் வயங்கும்
நாய்போல் இவன்தன் நாயகன் மீது
அன்பினன் என்பதை ஆயுங் காலை
இழிவுமிகத் தோன்றலின் வழுவே என்க.

(3) பால், எண் மாறுபடுதல்

89. ஆடவன் போல் இவள் ஆண்மை படைத்தவள்
என்பது பால்மாறு பாடெனு இயம்புவர்.
உயிர்கள் போல் வேந்தன்நம் ஆசைக் குரியவன்
என்று கூறுதல் எண்மாறு பாடே.

8. அதிசய அணி.

90. வகைபல வான உவமை வகையெலாம்
நூலறி புலவர் நுணுகித் தெளிக.
அடுத்தினி யானும் அதிசய அணியை
இலக்கிய இலக்கணம் காட்டி இயம்புவன்.

91. ஒன்றன் சிறப்பை உணர்த்துங் காலை
வரம்பு கடந்து வர்ணனை செய்தல்
அதிசய அணியென அறையப் படுமே.
அதற்குறு காட்டே அமையுமிவ் வாறே.

எடுத்துக்காட்டு - 1

92. சிந்துரம் திகழும் சென்னி யுடனே
செந்தாது படிந்த செழுமதக் களிற்றினை
அந்திச் செவ்வொளி அதுவே என்றே
அதனைத் தொட்டேன் அறியாது யானும்.

எடுத்துக் காட்டு - 2.

93. வெண்சாந்து பூசி வெள்ளணி பூண்டு
வெண்பட் டுடுத்த மேனி நல்லாள்
மிக அரு கிருந்தும் வெண்மதி ஒளியால்
அறிந்து கொள்ளல் ஆற்றேன் யானே.

எடுத்துக் காட்டு - 3

94. திசையெலாம் சூழ்ந்து திகழும் வான்வெளி
எத்துணைப் பரப்பின் ஏற்றம் கொண்டது!
அதுபோல் நின்புகழ்ப் பரப்பும் அகன்றது!
வெண்மதி யனைய வெள்ளொளி மிக்கது!

9. ஒப்புமைக் கூட்ட அணி

(ஸத்ருஸயோகித அணி)

95. உயர்வோ தாழ்வோ உறுதியாய் உடைய
பொருளொடு வேறோர் பொருளினை இணைத்தல்
உயர்ந்தோர் போற்றும் ஒப்புமைக் கூட்ட
அணியாம்; காட்டே அமையுமிவ் வாறே.

(1) உயர்ச்சி ஒப்புமைக் கூட்டம்

96. இந்திரன், அக்கினி, இயமன், நிருதி,
வருணன், வாயு, குபேரன், ஈசானன்
எண்டிசைப் பாலகர்க் கிணையாம் உன்னை
ஒன்பதாம் பாலகனாய் உரைப்பது சாலும்.

(2) தாழ்ச்சி ஒப்புமைக் கூட்டம்

97. விண்முகில் நிழலும் படர்ச்சியும் எழிலும்
ஒளியும் யாவும் நிலையல; உண்மை!
நங்கையர் காதலும் நட்பும் நாடின்
நிலையல வாகும் நினைவில் நிறுத்துக.

முடிவு

98. ஒப்புமை கூறும் உவமை யணியின்
பல்வகை யான பாங்குகள் பயிலும்
இவ்வணி வழக்கினை இயைபுற நோக்கி
நிருப துங்கன் நெறியில் தெளிக.

10. ஆட்சேப அணி (விலக்கணி)

99. தெரிந்த பொருளைச் சீரிய முறையில்
ஆய்ந்து விலக்குதல் ஆட்சேப அணியே.
அவ்வணி வகைகளை அறிதற் கான
காட்டும் விளக்கமும் காட்டுவன் காண்க.

(1) விருத்த ஆட்சேபம்

100. காமன் கணைகள் காதலர் உளத்தில்
மென்மையிற் புகுந்து வேட்கை விளைக்கும்.
காதலர் கலங்க நெஞ்சைப் பிளப்பதால்
மலரின் மென்மை வாய்க்கப் பெற்றில.

(விருத்தம் – வரலாறு)

(2) அநுசய ஆட்சேபம்

101. செல்வம் ஈட்டாது, கல்வி சேர்க்காது,
தவநலம் சாராது மானுடம் தானும்
வெற்றி பெற்றில தென்று விளம்புதல்
அநுசய ஆட்சேப அணிக்குறு காட்டாம்.

(அநுசயம் – நெருக்கமான தொடர்பு)

(3) சிலேடை ஆட்சேபம்

102. கமலப் பகையாய்க் காந்தியின் ஊற்றாய்
அமுத மயமாய் அமைந்தது நின்முகம்.
ஆகலின் அத்தகைத் திங்களும் எதற்கு?
எனவரல் சிலேடை ஆட்சேபம் என்க.

(4) உவமை ஆட்சேபம்

103. ஆங்கே காண்பன அன்னங்கள் ஆகும்;
வெள்ளிய மேகங்கள் அல்ல. ஏனெனில்
சிலம்பின் ஒலிபோல் சீரொலி திகழும்.
இதுவே உவமை ஆட்சேபம் என்க.

(5) ஐய ஆட்சேபம்

104. மதம் பொழி களிறோ? மாரி முகிலோ?
வேம்பின் மணமதில் மேவி விளங்கலின்
மேகம் அன்று; வெம்மதக் களிறே.
ஐய ஆட்சேபம் இதுவாம் அறிக.

(6) ஏது ஆட்சேபம்

105. ஏ! ஏ! மனிதா! புகழ் உனக் கேனோ?
வள்ளல் உன் செல்வமோ வறியோர் கையது.
எங்ஙனம் வள்ளல் நீ என்பது பொருந்தும் ?
ஏதுவாம் ஆட்சேபம் இங்ஙனம் வருமே.

முடிவு

106. அதிசய தவள அரசன் அருளிய
மெய்நெறி கொண்டு வேற்றுமை யணியையும்
ஆட்சேப அணியையும் ஆய்ந்து நோக்கி
நூலறி புலவோர் நுணுகி யுணர்க.

107. சொல்லால் பொருளால் சொல்லும் முறையால்
வகைவகை யாக ஆட்சேபம் வருமே.
நிருப துங்கன் நெறியில் நின்று
வியப்புறும் ஆட்சேபம் விளங்கிக் கொள்க.

11. சிலேடை அணி

108. ஒருசொல் தானே பல்பொருள் உணர்த்துதல்
சிலேடை அணியெனச் செப்பப் பெறுமே.
போற்றுமிவ் வணியில் பொருந்திய வகைகளும்,
காட்டும் இவ்வா றுள்ளன காண்க.

(1) மன்னனுக்கும் விண்மதிக்கும் சிலேடை

109. ஒண்புகழ் வேந்தன் உதயா ரூடன்
ஒளியின் ஊற்று காதல் மண்டலன்
குமுதக் கரத்தினன் குலவுமென் கரங்களால்
உலகிற் கெல்லாம் உவகை யூட்டுவன்.

(மண்டலன் – மண்டலம் உடையவன், மண் தலம் உடையவன்.)

(2) மன்னனுக்கும் மேருமலைக்கும் சிலேடை

110. மாபெருங் கடகம் மதம்பொழி களிறு
அரியொடு மகிஷி அடர்ந்த ஸ்ரீபலம்
புகழுற மேவும் பூப்ருந் நாதம்.

(கடகம் – தலைநகர், மலைச்சாரல்; மகிஷி – அரசி, எருமை; அரி – குதிரை, சிங்கம்; ஸ்ரீபலம் – செல்வம், வில்வக்கனி; பூப்ருந்நாதம் – அரசன், மேருமலை.)

(3) வேள்விக்கும் போருக்கும் சிலேடை

111. நெரெத விஸம்வாதம் பஞ்
ஜரஸுகததியொள் குலால கேஹங்களொளம்
பரசக்ர ப்ராந்திகள
த்வரதொளெ நெகழ்கும் மஹாஹவத்வ நிதி நியதம்.

(விஸம் வாதம் – பறவை ஒலி, வையும் ஒலி. பரசக்ர – குயவன் சக்கரம், பகைவர் படை.)

(பொருள் : கூட்டில் வாழும் கிளிகளின் ஒலியும் குயவர் சக்கரங்களின் ஒலியும் வேள்விச் சாலையிலும்; வையும் ஒலியும், பகைவர் படை ஒலியும் போர்க்களத்திலும் மிகுதியாய் எழுந்தன.)

(4) மன்னனுக்கும் இந்திரன், திங்கள், சிவனுக்கும் சிலேடை

112. அரிகோத்ர விபுதே
ஸ்வர நல்லம் த்ருதகளா களாபம் தோஷா
கர நல்லம் விதி தோமா
வர் நாத்த புஜங்க நல்லநே பூபாளம்.

(அரி – மலை, பகைவர்;; கலை – சந்திர கலை, கலையறிவு; உமை – பார்வதி, நிருபதுங்கன்தேவி.)
(பொருள் : இம்மன்னன் அரியழித்தவன்;; ஆனால் இந்திரன் அல்லன். கலை மிக உடையவன்;; ஆனால் திங்கள் அல்லன் . உமையுடையவன்; ஆனால் சிவன் அல்லன்.)

முடிவு

113. உயர்வுறும் உருவகம் முதலிய அணிகளின்
விளக்கம் சிற்சில விளம்பினன்; இங்ஙனம்
நிரந்தரம், விருத்தம், நியமிதம் முதலிய
சிலேடை வகைகளைத் தேர்ந்து தெளிக.

12. தற்குறிப்பேற்ற அணி

114. ஒருபொருட் குரிய உண்மைத் தன்மையை
மறுத்து மற்றொரு காரணம் வகுத்தல்
தற்குறிப் பேற்றம் என்னச் சாற்றுவர்.
அவ்வணி அமைவை அடுத்துக் காணலாம்.

எடுத்துக் காட்டு - 1

115. நடுப்பகல் வெயில்சுட நலிவுறு களிறு
தாமரை நாயகன் பகலவன் தன்மேல்
சினமுற்றதுபோல் செந்தா மரையைச்
சிதைப்பதற் காகக் குளத்துட் செல்லும்.

எடுத்துக்காட்டு - 2

116. பூவையே ! உன்றன் செவியில் பூண்ட
நீல மலர்கள் 'எம்பார்வை நிழலால்
ஒளியுற் றன' என உள்ளம் கொண்டு
நின்சுழல் விழிகள் நெருங்கித் தாக்கும்.

13. சூட்சும அணி (நுட்ப அணி)

117. மறைந்து கிடக்கும் மறைபொருள் தன்னைக்
குறிப்பினும் தொழிலினும் வடிவினும் கூர்ந்து
நுட்பமாய் நுவலுதல் சூட்சும அணியாம்.
அதற்குறு காட்டுகள் இங்ஙனம் அமையும்.

எடுத்துக்காட்டு - 1

118. ஊடல் உணர்த்தக் காதலன் அவளடி
பற்றினன் ; கைகள் பட்டதும் அவளடி
புளகம் உற்றிடப் புலவி அகன்றதைக்
கண்டனன், முகம் ஒளி காட்டா தாயினும்.

எடுத்துக்காட்டு - 2.

119. கடுஞ்சொல் கூறினும் கறுத்து நோக்கினும்
உலவும் விழிகள் உறுபகை காட்டினும்
முகத்தின் கடுமையை முற்றும் மாற்றிய
உளத்துறு காதலை முறுவலே உணர்த்தும்.

14. விசேட அணி

120. விளக்கப் படுபொருள், விரவிய குணம் இனம்
காணுங் காலை குறைகண் ணுறினும்
குறையினைச் சுட்டாது சிறப்பினைக் கூறி
விளக்குதல் தானே விசேட அணியாம்.

எடுத்துக்காட்டு - 1

121. மலர்க்கணை, கரும்பு வில், மற்றும் மெல்லிய
தாமரைத் தண்டு நாண் தாங்கிய காமன்
பிரிந்தவர் மேல்மலர் அம்புகள் பெய்தே
உலகம் மூன்றையும் ஒருங்ககப் படுத்துவன்.

எடுத்துக்காட்டு - 2

122. செவ்விதழ் துடித்தில ; கண்களும் சிவந்தில;
முகத்துள புருவமும் முரிவினைக் காட்டல.
எனினும் தன்னை எதிர்த்த படைகளை
வீழ்த்தி வென்றனன் வேந்தன் தானே.

15. சமாயித அணி

123. ஒருவன் முயலும் செயலின் உறுபயன்
எதிர்பா ராத நிலையில் எளிதாய்
வேறொரு செயலால் விளைந்த தென்று
சாற்றுதல் தானே சமாயித அணியாம்.

எடுத்துக்காட்டு - 1

124. புலவியிற் சினந்த பூவை தன்னை
இணங்க வைக்க ஏகிய எனக்கு
வழிகாட் டியது வசந்த வான்பிறை ;
ஒளியினை உமிழ்ந்தே உறுதுணை யானது.

எடுத்துக்காட்டு - 2

125. தயங்கித் தயங்கித் தலைவனைச் சார
மாரி இரவில் வழிதெரி யாது
மயங்கிய எனக்கு வானிடை மின்னல்
உறும்வழி காட்டி உதவிய தன்றே.

16. *சமாச அணி* (ஒட்டணி)

126. ஒருபொருள் தன்னை உளத்தில் கொண்டு
அதனை யுணர்த்த அதற்கிணை யான
வேறொன்று கூறி விளக்குதல் தானே
சமாச அணியாம்; சான்றுகள் தருவேன்.

எடுத்துக்காட்டு - 1

127. மலர்ந்த தாமரை மலரை நண்ணி
நறுமணம் தன்னை நன்கு நுகர்ந்து பின்
இன்னுமோர் அரும்பின் இனிய தாதினை
உண்பதற் காக உலவுமோர் வண்டே.

விளக்கம்

128. வயது முதிர்ந்த பரத்தையை மருவி,
மேலும் காம வேட்கை மிக்குற
இளையள் ஒருத்தியைக் கூடி இன்புறும்
இயல்பினை வண்டால் இயம்பிய திதுவே.

எடுத்துக்காட்டு - 2

129. வேட்டுவன் விளைத்த பெருங்குழி வீழ்ந்து
சிறையுண்டு, மதம்பொழி செருக்கு மிகுந்து
மூங்கிற் புதரிடை முற்படத் தோன்றும்
களிறு தன்னைக் கண்டனன் ஒருவன்.

விளக்கம்

130. ஈகை முதலாய் ஏத்திடும் பண்புகள்
சார்ந்த வேந்தனைத் தந்திரம் ஒன்றால்
சிறைப்படுத் திட்ட செய்தியை இங்ஙனம்
களிற்றின் நிலையால் காட்டிய திதுவே.

17. பரியாய அணி

131. குறித்த பொருளை வெளிப்படக் கூறாது
பிறிதொரு வகையால் பெட்புற உணர்த்தல்
பரியாய அணியென பகரப் படுமே.
அதற்குறு காட்டே ஆகுமிவ் வாறே.

எடுத்துக்காட்டு

132. நீவிர் இருவரும் நெஞ்சுற நேர்ந்து
மகிழ்ந்துரை யாடி வைகுமின் சற்றே.
நறுமணம் கமழும் நன்மர மலர்சில.
பறித்து வருவேன் பாங்குடன் இங்கே.

விளக்கம்

133. தலைவனும் தலைவியும் சார்ந்திடச் சேர்த்துத்
தனிமை வாய்ப்பினைப் பெற்றிடத் தந்து
தான்செல் வதற்குத் தனியொரு காரணம்
தோழி கற்பித்துச் சொல்லிய திதுவே.

18. விரோத அணி

134. ஒரேசம யத்தில் ஒன்றற் கொன்று
மாறுபடு பொருள்களின் மாறுபடு தன்மையை
வேற்றுமை விளங்க ஐயம் விலக
விளக்குதல் தானே விரோத அணியாம்.

எடுத்துக்காட்டு -1

135. கூதிர் வரவால் அன்னக் குரலது
செவிக்கினி தாகி இன்பம் சேர்த்தது.
மகிழ்வு நல்கா மயிலின் வன்குரல்
அருகி மாய்ந்தே அடங்கிய தம்மா!

எடுத்துக்காட்டு - 2

136. தென்றலின் செய்கையால் உதிர்ந்து சிதறிய
பூக்களின் தாதுகள் புறமெலாம் படிந்தன.
பிரிந்துள காதலர் பிரிவுத் துயரால்
கலுழ்ந்த கண்ணீர் தரையுறக் காலும்.

முடிவு

137. விரோத அணியின் வெவ்வேறு வகைகளைச்
சற்றே தெளிவுறச் சாற்றினேன்; மேலும்
அமைந்திடும் வகைகளை ஆய்ந்து நாடிக்
காட்டுக்கள் தம்மால் கண்டு தெளிக.

19. *அப்ரஸ்துத அணி* (மாறுபடு புகழ்நிலை)

138. தகுதி யில்லாத் தன்மையை நன்றென
விளக்கிடும் அணியின் பெயரை மேலோர்
அப்ரஸ் துதமென அறைகுவர்; அதற்குறு
காட்டுச் செய்யுள் காண்க மேலே.

எடுத்துக்காட்டு

139. செல்வச் செருக்கால் தீய மனமுடைக்
கயவர் தம்முகம் காணாது, கவின்மிகு
புல்மிகச் செழித்த புனத்திடை வாழும்
விலங்கின் வாழ்க்கை மிகமிக இனிதே!

விளக்கம்

140. உதவும் உணர்வும் கவலையும் நிறைந்த
உளமுடை யொருவன் தனக்குத் தானே
அமைவு கொண்டிட அடவி விலங்கின்
வாழ்வினைப் போற்றி மனமகிழ் வுற்றனன்.

20. நிதர்சன அணி *(காட்சியணி)*

141. ஒருவர்தம் குணம்,குறை உணர்ந்திடற் குரிய
நிகழ்ச்சியை விளக்கிட நிகர்க்கும் ஒன்றைக்
காட்சி யாகக் காட்டும் வகையில்
விளக்குதல் நிதர்சன அணியெனல் மேவும்.

எடுத்துக்காட்டுகள் (142-152)

142. அழகிய கண்ணாடி அதன் எதிர்ப் பட்ட
பொருளின் வடிவைப் பொலிவுறக் காட்டும்.
உறுதியாய் நிலைத்த உயர்பண் பினர்தம்
கோதிலா ஒளியால் குணம்மிகத் தோன்றும்.

143. மற்றோர் அறியுமுன் வருபொருள் அறிதல்
அமைச்சர் சிறப்பென அறையப் படுமே.
மக்கள் அறிந்தபின் மந்திரி யுணர்தல்
மந்திரிக் கழகல; மலை எதிர் ஒலியாம்.

144. 'சுமையைத் தலைமீது தூக்கிக்கொண் டதன்பின்
கூலி பேசுவோன் அறிவுமிகக் குறைந்தவன்;
தலையை மழித்தபின் தக்கநாள் பார்ப்பவன்
போன்றோன்'. என்று புகலுவர் உணர்ந்தோர்.

145. அறிவும் ஆற்றலும் அளவில ஆயினும்
ஊழ்வினை இலையேல் உறுபயன் கிட்டாது.
செத்தவர்க் கிழைத்த உதவிபோல் சிதைவுறும்.
வீண்துயர் களைப்பு மிகவும் மேவும்.

146. உதித்தலும் வளர்த்தலும் உடையன் ஆயினும்
கதிரவன் அல்லன் இக் காவலன்; உத்தமன்.
நீதி நெறிமுறை பிறழாது நின்றவன்
காலம் உணர்ந்து கடிதிற் செய்க.

147. இராக்கத இயல்புடை இராகு, திங்களை
மறைத்தல் தன்னை மன்னவன் காண்க.
மெலிந்த பகைவர் மேலுறா வகையில்
வீழ்த்தி வெல்வான் வீறுடை வேந்தன்.

148. கருமுகிற் கூட்டம் கதிரவன் தன்னை
மறைத்ததைக் காட்டும் மன்னவன் செயலே.
நண்ணார் மெலிவும் காலமும் நாடாது
வாய்ப்பினைக் கொண்டு வளைக்க பகைவரை.

149. வடவைக் கனலது வார்கடல் நடுவில்
அசையா திருந்தும் ஆழ்கடல் பொங்காது.
உறுபொருள் மிகவும் இருப்பினும் உட்பகை
கொண்டோர் அதனைக் கொடுத்திட வொட்டார்.

150. ஒன்னார் இடைப்பட் டுழலும் கொற்றவன்
தக்கதோர் வழியில் தப்பிச் செல்க.
புனலில் கலந்த புழுதித் தொகுதி
சேறா காமல் இருக்குமோ? செப்பீர்.

151. காவலன் விருப்பைக் கருத்திற் கொள்ளாது
தன்னுளம் கருதிய தன்மையில் பணிசெய்வோன்
நோய்நிலை நோக்காது மருந்து கொடுக்கும்
மருத்துவன் போல்வான்; வருபயன் காணான்.

152. சுவைமாறு பட்டுச் சுவையற்ற உணவை
உகந்து போற்றுவோர் ஒருவரும் இல்லை.
இறுதியில் இன்பம் இழைக்கும் சொல்லினை
உவந்து போற்றார் யாரே உரைமின்.

முடிவு

153. இங்ஙனம் இயலும் நிதர்சன அணியின்
வகைகளை எல்லாம் வயங்க நாடிப்
புகழ்மிகு கன்னடப் புலமை வல்லோர்
பொருந்தக் காட்டிப் புரையறப் புகல்க.

21. ஸஹோக்தி அணி *(புணர்நிலை அணி)*

154. குணம் , இனம் முதலிய ஒப்புமை கொண்ட
உவமை யுடனதன் பொருளை உளங்கொளச்
சார்த்தி யுரைத்தல் ஸஹோக்தி அணியாம்.
இதற்கொரு காட்டினை இயம்புவேன்; தெளிக.

எடுத்துக்காட்டு

155. செல்வ வேந்தனின் குணத்தின் திரட்சியோடு
திசை யெலாம் பரவிய சீர்த்தியும் வெளுத்தது.
*அரசனை யடைந்த ஆற்ற லோடு
பெருகிய தவனது பெரும்பொருட் செல்வம்.

---

* இங்கு, 'அதுபோல்' என்பதைச் சேர்த்துக் கொள்க.

22. சங்கீரண அணி

156. மேலே கூறிய அணிபல விரவி
ஒருங்கோர் செய்யுளில் உறும்வகை உரைத்தல்
சங்கீ ரணமெனச் சாற்றப் படுமே.
புலவர் ஏறுகள் புரையறப் போற்றுக.

எடுத்துக்காட்டு

157. அரசர் ஏறு, அபராக னான
துறவிபோல் சுடுவன் பகைக்கா டதனை;
புகழ்த்திரு வதனைப் போற்றி விழைகுவன்;
குணங்க ளிடையே குறையும் கொண்டவன்.

(அபராகன் – ஆசையற்றவன், களங்கமற்றவன்.)

(இப்பாடலில் உவமை, உருவகம், சிலேடை, லவம் முதலிய பல அணிகள் உள்ளன.)

23. பரிவிருத்தி அணி *(பரிவர்த்தனை அணி)*

158. ஒன்றனைக் கொடுத்து மற்றொன்று பெறுவதாம்
பண்ட மாற்று நிகழ்ந்ததைப் பாங்குடன்
விளக்குதல் நற்பரி விருத்தி யாகும்.
அவ்வணி வடிவை இங்ஙனம் அறிக.

எடுத்துக்காட்டு

159. அச்சம் விளைக்கும் அமர்க்களம் அதனில்
அஞ்சாது சென்று பகைவர் அணியை
வீழ்த்தி வெற்றிகைக் கொண்டுமாற் றார்க்கு
வான மகளின் இன்பம் வழங்கினன்.

24. வியாஜஸ்துதி அணி *(புகழாப் புகழ்ச்சி அணி)*

160. பெருஞ்சிறப் புள்ளதைப் பெருங்குறை யாக்கிப்
பழிபடப் பகர்தல் புகழாப் புகழ்ச்சி.
அன்னதன் காட்டுகள் அடுத்துள காண்க.

எடுத்துக்காட்டு-1

161. கடலில் தோன்றிக் கவின்மிகப் பெற்று
மாலவன் குணநலம் மகிழ்வுடன் விழையும்
இலக்குமி தேவியை மார்பினில் ஏற்றவன்
எங்ஙனம் பிறரால் ஏத்திடற் குரியவன்?

எடுத்துக்காட்டு-2

162. நின்திரு மனைவியாம் நீள்நில மடந்தை
ஆதி சேடனின் அணிமுடி மீது
எல்லாக் காலமும் இருப்பவ ளாயின்
அன்னவள் கற்புடை மனைவி ஆவளோ?

25. ஏது அணி

163. உலகியல் நிகழ்ச்சிக் குற்றகா ரணத்தை
எடுத்துக் கூறுதல் ஏதுஎனும் அணியாம்.
ஞாபக ஏது முதலிய பெயர் பெறும்
அதற்குக் காட்டுகள் அடுத்துள காண்க.

எடுத்துக்காட்டுகள் (164-167)

164. அம்புலி யமிழ்தால், சந்தனக் குழம்பால்,
தண்புனல் தன்னால் உன்துயர்த் தணல்தான்
ஆறிட வில்லை; அதனால் யானும்
உணர்ந்தேன் நின்உடல் உற்ற காமத்தை.

165. அறிவுளோர் தம்மை அணுகா திருப்பதால்
அறியா தவரை அண்டிடும் தன்மையால்
ஐம்பொறி அடக்கும் ஆற்றல் அற்றதால்
மக்கள் மிக்க கவலையில் மாழ்குவர்

166. விளைந்து சாய்ந்த நெற்பயிர்த் தொகுதியும்
தெண்ணீர்க் கயத்தில் திகழ்தா மரைகளும்
மென்மை மேவிய அன்னப் பேடைக்கு
மகிழ்ச்சி யதனை வாரி வழங்கும்.

167. தெண்ணீர்க் குளமும் தெளிவுடை வானும்
வெண்முகிற் குலங்கள் விரவிய பாதையும்
நிலவுமிழ் திங்களும் நேர்ந்த காதலர்
உளத்துறும் ஊடலை ஒட்டித் துரத்தும்.

26. விபாவனை அணி

168. காரணம் தன்னைக் காட்டாது மறைத்து
இயல்பாய்க் காரியம் நிகழ்ந்த தென்று
விளக்குதல் தானே விபாவனை அணியாம்.
அதற்குறு காட்டே அமையுமிவ் வாறே.

எடுத்துக்காட்டு

169. சுடர்முகம் தன்னில் வேற்றுமை தோன்றாது!
ஒப்பனை யின்றியும் ஒளிரும் வனப்பு!
காரணம் இன்றியே காட்டிடும் முறுவல்!
பீடுறும் மென்னடை! பெருமகிழ் வூட்டும்.

27. லவ அணி

70. குணத்திடைச் சிறிது குறையினைக் காட்டியும்
குறையிடைச் சிறிது குணத்தினைக் காட்டியும்
இயம்புதல் லவ அணி என்னப் படுமே.
அதற்குறு காட்டே அமையுமிவ் வாறே.

குணத்திடைக் குறை

171. மானம் உடையவன், வண்மை வாய்ந்தவன்,
பகைவர் வந்து பணிந்திடக் காண்பவன்,
எண்ணிய நெறியில் இயங்கும் இயல்பினன்,
மற்றவர் தம்மை இகழ்வது மாசு.

குறையிடைக்குணம்

172. குலப்பிறப் பில்லான் குலவிடும் சுற்றத்
துணையும் இல்லான், தூற்றப் படுவான்,
எங்கும் எவரொடும் இணைந்திடான் எனினும்
கொண்டது விடாமை எனும் குணம் கொண்டவன்.

28. உதாத்த அணி *வீறுகோள் அணி)*

173. மனத்தின் பெருமையும் மற்றுள வளமையும்
உயர்வு தோன்ற உயர்த்திக் கூறுதல்
உதாத்த அணியென ஊதிடப் பெறுமே.
அதற்குறு காட்டுகள் அடுத்து வருமாறு.

எடுத்துக்காட்டுகள் (174-181)

174. பிடிவாதம் தன்னால் சிறியதும் பெரிதாம்.
ஆர்வம் மிகுங்கால் அவனியும் சிறிதாம்.
கொள்வது கொடுப்பதில் விருப்புவெறுப் பிலானின்
சீர்த்தி தனக்குச் சிறிதெது? பெரிதெது?

175. அழிந்தனன், அழித்தனன், அருகுள யாவும்
விட்டிலன், பழிப்பவர் தம்மையும் விட்டிடான்,
பிறரைப் பழித்தான் பெண்டினைப் பிரிந்தான்,
இவன்போல் செல்வம் இகழ்ந்தவர் யாருளர்?

176. மறுமை வாழ்வுச் சிந்தனை, தருமம்
இரண்டையும் மேவுதல் இலங்குபொன் நிகர்க்கும்.
குப்பையும் பொன்னும் கூர்ந்தறி யாதோர்
எல்லோர் தமக்கும் இன்னல் இயற்றுவர்.

177. நெறிப்படி நிற்றலும் நீள்புகழ் பெறுதலும்
உண்மை வாழ்வென ஓதப் பெறுமே.
நல்லோர் வாடவும் நாடெலாம் இகழவும்
வாழ்தல் மதி, மீன் உளவரை வைகுமோ?

178. தீதும் நன்றும் பிறர்தமைச் சேரா
தமக்கும் பிறர்க்கும் தகுபயன் இன்றிக்
காய்தலும் உவத்தலும் கருத்திற் கொண்டு
இகழ்தலும் ஏத்தலும் செய்குவர் மாந்தர்.

179. இகழ்ச்சியும் புகழ்ச்சியும் இம்மியும் நோக்காது
இருமை உலகிற்கும் ஏற்ற நல் வினைகளை
ஆற்றிப் பெரும்புகழ் ஆக்கிக் கொள்ளின்
இகழ்ச்சியும் புகழ்ச்சியும் என்செயும் அவனை?

180. வந்தடி பணியும் மாற்றலர் மணிமுடி
சிந்திய மணிகள் சிதறிக் கிடக்கும்,
வீர நாரணன் மேவும் பேரவை
விண்மீன் விளங்கும் விண்வெளி நிகர்க்கும்.

181. பகைவர் பணிவுடன் திறையென நல்கிய
வேழங்கள் பொழியும் மதநீர் வெள்ளம்
வேந்தன் அரண்மனை எங்கும் மிகுந்து
நீங்காச் சேறாய் நிறையுமெக் காலும்.

29. அவநுதி அணி

182. உயர்ந்ததோர் பொருளின் உயர்வினைச் சுட்டாது
மறுத்துப் பிறிதொரு வகையால் வழங்குதல்
அவநுதி யென்னும் அணியா கும்மே.
அதற்குறு காட்டுகள் அமையுமிவ் வாறே.

மோக அவநுதி

183. அமுதமும் தண்மையும் உடையனென் றறைதல்
திங்கள் தனக்குச் சிறிதும் ஒவ்வாது.
ஆலமும் வெம்மையும் அவன்மிக வுடையன்.
இங்ஙனம் இசைத்தல் மோக அவநுதி.

தர்ம அவநுதி (184-185)

184. மலரல மதனின் நெருப்புக் கணைகள்;
அவன்புகழ் தன்னை அடியோ டழிப்பன;
என்உளம் தன்னை எரிக்கும் தீயின.
இங்ஙனம் இசைத்தல் தர்ம அவநுதி.
(தர்மம் – சுபாவம், தன்மை)

185. காமன் கணைகள் கடிது பாய்ந்தென்
உடலைத் துளைத்தே ஊடுரு வும்மே.
ஆயினும், 'அவ்வழி கட்புலன் ஆகாது
அம்புகள் அல' எனல் தர்ம அவநுதி.

பண்பு அவநுதி

186. காமன் செலுத்திய கணைகள் ஐந்தல;
கோடிக் கணக்கெனக் கொள்ளுதல் வேண்டும்.
இன்றேல் பிரிந்தவர்க் கெல்லாக் காலமும்
இடுக்கண் விளையா தெனல்பண் பவநுதி.

30. சுவை அணி

187. ஒன்பான் சுவைகளை உளங்கொளு மாறு
விளக்கிப் புனைதல் விளம்புங் காலை
சுவையணி என்னச் சொல்லப் படுமே.
அதன்வகை காட்டுடன் அமைவுற விளக்குவேன்.

188. வீரம், வியப்பே, அவலம், காமம்,
அச்சம், வெகுளி, அருவருப் பூட்டும்
இழிவே, நகையே, சாந்தம் என்ன
ஒன்பது சுவைவகை உரைக்கப் படுமே.

1. வீரம்

189. இராவணன் தன்னை இகலில் சாய்த்து
வெற்றிச் செல்வி தோளுற மேவிச்
சீதையை மீட்ட திறலுடை இராமனின்
வீரம் தன்னில் அச்சுவை மிளிரும்.

2. வியப்பு

190. கடலைக் கடந்துபோய் இராவணன் கடிநகர்
இலங்கை தன்னை எரியிட் டழித்த
அநுமனின் ஆற்றல் வியப்பினை யளிக்கும்.
வியப்புச் சுவைக்கிது மேவிய காட்டாம்.

3. அவலம்

191. கூடுதல் வேட்கையில் கூவிக் கூவி
உள்ளத் துணிவுடன் உறையுமிம் மடந்தை
நின்னைப் பிரியின் பிரிவெனும் நெருப்பால்
உருகுவள் அந்தோ! உன் அளி வழங்குக.

4. காமம்

192. தெரிவை நின் முகத்தில், சிலிர்ப்பு மேவிய
கன்னங்க ளோடுநற் கள்ளுண்டு சிவந்த
கண்களும், துடிக்கும் இதழ்களும் காண்போர்
மனத்தை மயக்கிடும் காமச் சுவைதரும்.

5. அச்சம்

193. பனங்காட் டிடையில் பயிலும் பேய்க்குலம்
முழக்கம் செய்து முழைவாய் பிளந்து
கைகொட்டி யாடுதல் கண்டே யானும்
அஞ்சினேன் அம்ம! அஞ்சினேன் மிகவே!

6. வெகுளி

194. 'சடாயுவை வீழ்த்திச் சீதையைத் தன்னோடு
எடுத்துச் சென்ற இராவணப் பதரை
எமன்வாய் இடுவேன்; இன்றேல் என்சினம்
தணியுமோ?' என்னச் சாற்றியது வெகுளி.

7. இழிவு

195. ஒன்பது வாயில் உடையதாய்ச் சீழ்மிகத்
தோலில் சுற்றி, ஊன்மிகக் கொண்டு
நில்லா அழகுடன் எலும்புகள் நெருங்கிய
இவ்வுடல் மிகமிக இழிவே யாகும்.

8. நகை

196. பிறனைப் புணர்ந்த பெண்டு தன் யாக்கையில்
விளைந்த வேறுபா டெல்லாம், கணவன்
காணாது மறைக்கக் கடிதின் முயலுதல்
நகைப்பினை மிகுதியாய் நல்கிடும் நமக்கே.

9. சாந்தம்

197. சமருக் குரிய ரஜோ குணம், தமோகுணம்
இரண்டும் உன்பால் சமமாய் இணைந்துள.
வேற்றுமை சிறிதும் விரவா துள்ள
உன்றன் உருவில் சாந்தம் ஒளிரும்

31. ஊர்ஜித அணி *(தன்மேம்பாட்டுரை)*

198. வீரன் ஒருவனின் மேம்படு மனத்தின்
செருக்கின் மிகுதியைச் செப்புதல் தானே
ஊர்ஜித அணியென உரைக்கப் படுமே.
அதற்குறு காட்டிதைப் புலவர் அறிக.

எடுத்துக்காட்டு

199. படைகளைக் கீழிடு; பற்றேன் நின்உயிர்;
புல்லினைக் கறித்துப் புற்றினைப் பற்றி
என்னடி வீழ்ந்துபின் எதிர்நிலா தேகுக;
இன்றேல் எழுந்திடு; படையுடன் எதிர்நில்.

32. வ்யாவிருத்தி அணி *(அந்தாதித்தொடை)*

200. அந்தாதித் தொடையில் அணிபெற அமைப்பது
வ்யாவிருத்தி என்ன விளம்பப் பெறுமே.
அதனைக் கவிஞர்கள் அடுத்துவரும் காட்டால்
செவ்விதின் உணர்ந்து தெளிகுவர் ஆக.

201. பிரிவு விளைத்திடும் பெருந்துயர்; அத்துயர்
காதலைப் பெருக்கும்; காதல் தாலும்
தலைவன் பெருமையைத் தகவுறக் காட்டும்;
அந்தப் பெருமை புணர்ச்சியை அளிக்கும்.

202. பேச்சினை யடுத்துப் பெட்புறு பார்வை;
பார்வையை யடுத்து மெய்தொட்டுப் பயிறல்;
மெய்தொட்டுப் பயின்றதும் வேட்கை மிகுந்து
காதலர் புணர்ச்சியைக் கடிதின் விளைக்கும்.

33. *ஆர்வமொழி அணி*

203. நாடி வந் தோரை நயமும் விநயமும்
வண்மையும் வனப்பும் வாய்ந்த சொற்களால்
முகமன் மொழிந்து விருப்புடன் போற்றுதல்
ஆர்வ மொழியணி காட்டுவரு மாறு.

எடுத்துக்காட்டு

204. இன்று தங்கள் வருகை எனக்கே
ஏத்திடும் பெரியோர் வாழ்த்தும் இனிய
புண்ணியப் பேறும் பொருந்த நல்கி
இன்ப நுகர்ச்சியை என்பால் இழைத்தது.

34. வாழ்த்து அணி

205. ஒருவன் உளத்தை உள்ளுற உணர்ந்து
பெரியோர், மகிழ்ச்சி பிறங்கிடும் சொற்களால்
வாழ்த்து வழங்குதல் வாழ்த்தணி யாகும்.
அதற்குறு காட்டினை அடுத்துக் காண்க.

எடுத்துக்காட்டு

206. வேந்தே! உனக்கு விரிகடல், வியன்நிலம்,
மலைகள் யாவும் வாழும் நாள்வரை
வாழ்நாள், செல்வம், வெற்றி, வைபவம்,
சந்ததி யாவும் தழைத்துப் பெருகுக.

35. *பாவிக அணி*

207. கவிஞர் கருத்தெனும் காப்பியப் பண்பே
பாவம் எனப்படும்; பாவம் விளக்குதல்
நிருப துங்க தேவன் நெறிப்படி
பாவிக அணியெனப் பகரப் படுமே.

36. *தொனி அணி*

208. சொற்களின் வடிவில் தோன்றும் பொருளில்
குறிப்பால் இகழ்ச்சியைக் குறிப்பது தொனியாம்.
'கமலந் தனில் இரு கயல்கள் பிறழும்'
என்பது குறிப்பால் இகழும் தொனியாம்.

(கமலம், தொனியால் முகத்தைக் குறிக்கும். முகத்தில் மீன்கள் பிறழும் என்பது அசம்பவமாகிய குறையே.)

பெருங்காப்பிய இலக்கணம்

209. உயர்வினை யுடையது, வரலா றுரைப்பது,
கதைத்திறம் மிக்கது, கவின் பொருள் கொண்டது,
ஒழுக்கம் தருவது, உயர்பண் பளிப்பது,
கொடையும் வீரமும் கொண்டு சிறப்பது ;

210. அறம் பொருள் இன்பம் வீடெனும் அனைத்தையும்
நலமுற நவில்வது, நகரம் நாடு
மலைவளம் இருசுடர்த் தோற்றம் மறைவு
விலங்கின வர்ணனை மேவித் திகழ்வது;

211. நன்மணப் பூங்கா வனப்பை நவில்வது,
நீர்விளை யாட்டு நிகழ்த்துவது, காமன்
நெறியில் இன்பம் நிறைப்பது, பல்வகை
மொழியால் அவையினை முறைப்படி நடத்துவது;
சந்தி செய்யும் சால்பினை யுடையது;

212. செல்வச் சிறப்பைத் திறம்பட மொழிவது
திருமண மகிழ்ச்சியைச் சிறப்புறப் புனைவது,
தன்னிகர் இல்லாத் தலைவன் பெருமையும்,
புகழ்தரு பகைவர்தம் செய்தியும் புகல்வது;

213. நீதி மந்திரம் தூது சொல்வது,
நிலையுறு நூல்அழகு நிரம்பித் திகழ்வது,
போர்நிலை புகல்வது, போற்றற் குரிய
தறுகண்மை வண்மை பெருமிதம் தாங்கிய
தலைவன் உயர்வைச் சாற்றுதல் உடையது;

214. உயர்வுறும் அணிநலம் ஓங்கிட மிளிர்வது,
தூய மொழிகளால் துளங்குமென் நடையது,
உள்ளங் கவரும் உரையாடல் உறுவது,
சந்தச் சிறப்பொடு சமைவது, சாற்றும்
சுவைபல தோன்றிடும் நிலைக்களம் ஆவது:

215. நூலோர் நுவலும் நுண்மை ஆளுமை
மக்கள் இயல்புகள் மாண்புடன் நவில்வது,
கலைநலம் யாவும் காட்டிச் செல்வது,
தத்துவ விளக்கம் தவப்பயன் தருவது;

216. குற்றம் அற்றது, பகைவர்பால் கொண்ட
செல்வம் தரும் மறம் செப்பித் திகழ்வது,
நால்வேறு மொழிகளை நன்கனம் பெற்றது,
உயர்குண மணிகட் குறைவிடம் ஆவது,
கடல்போல் பெருமிதம் கவினுறக் கொண்டு
மண்முதல் வான்வரை விரிந்து மலர்வது.

217. இங்ஙனம் வேறுபல வர்ணனை இயைந்து
எழிலுற் றுயர் பெருங் காப்பியம் என்றும்
அமோஹ வர்ஷனின் அளவிலாப் புகழ்போல்
நெறியுற நிமிர்ந்து மாயாது நிலைபெறும்.

இந்நூலாசிரியன் புகழ்

218. நிருப துங்க தேவன் நிறுவிய
அவைக்களப் புலவன் ஆன்ற அறிவினன்,
உலக வழக்கும் நூல்வழக்கும் உணர்ந்தவன்,
வைதிக ஞானி, மாசிலா இலக்கியப்
புலமை மிக்கவன், அறிவால் பொலிபவன்;

219. நிருப துங்கன் நெடும்புகழ் அவையினன்,
உயர்பே ராற்றல் உடையவன், சதுரன்,
நலமுறும் புலமை நனிமிகப் பெற்றே
இலக்கிய இலக்கணம் நிலைபெறச் செய்பவன்;

220. ஆய பொருள்எலாம் ஆய்தலில் வல்லவன்,
பன்மொழி இலக்கியம் பாங்குறக் கற்றவன்,
கடவுள், குரவோர், கனமிகு பெரியரை
வணங்குவோன், விகாரம் அற்ற மனத்தினன்;

221. தயைமிக உடையோன், குற்றம் சார்கிலான்,
மக்கள் அனைவர்தம் ஆதரவு வாய்ந்தவன்,
மற்றவர் குணம் குறை மதிப்பவன், நிருப
துங்கனின் தோழன் நூலறி மேலோன்;

222. ஆர்வம் தன்னொடு விழுமிய அறமும்
குலத்தின் சிறப்பும் வீடுறும் கொள்கையும்
ஆய்ந்து புகழ்மிகும் அறநெறி காட்டும்
ஒளிவிளக் காகும் உயர்அறி வுடையவன்;

223. மாண்புறு கொள்கையன் மானம் மிக்கவன்,
இகழ்ச்சியும் புகழ்ச்சியும் இரண்டும் கருதாது
விழுமிய காப்பிய வடிவில் விளங்கும்
இவ்வணி யிலக்கணம் இயற்றிய மேலோன்;

224. குணோதயன் என்னும் கோமக னான
நிருப துங்கன் நெறியினைப் போற்றி
இயற்றப் பெற்ற இந் நூலில் இலங்கும்
புதுமைகள் கண்டு அவைப் புலவர் மகிழ்ந்தனர்.

225. மன்னர் மரபில் வந்தஇப் புலவன்,
'சரஸ்வதி தீர்த்தாவ தாரன் என்னும்
விருதுடை நிருப துங்கனின் விழுமிய
செயல்கள் நாற்பொருள் பயப்பன ; மன்னன்
செவ்வன் ஆய்ந்து செய்வதில் நிகரிலான்'
என்று திறம்பட ஏத்திப் புகழ்ந்துளான்.

226. மாகுமறு பற்ற குலம் இனம் மற்றும்
நாடும் உடையவன், விநயன், நாளெலாம்
தனிமையில் இருந்துநூல் சத்துவம் தருவோன்,
உயர்குணம் உடையவன் உறுகுறை இல்லான்,
குருவருள் கொடுத்த கோதிலா அறிவினால்
உலகுறு விந்தைகள் யாவும் உணர்ந்தோன்;

227. மதமும் மானமும் மாயையும் அச்சமும்
உலோபமும் களிப்பும் ஆகிய உட்பகை
எல்லாம் வென்ற ஏற்றம் உடையவன்,
உலகியல் முற்றும் உற்றறி புலத்தினன்,
விநயமும் சீலமும் மேவிய புலவர்சொல்
ஏற்பவன் அவர்களை இனிது காப்பவன்;
(மானம் – அவமானம், செருக்கு)

228. பரம அநுபவன் மானம் படைத்தவன்,
நகையுணர் வாளன், நனிபெரி துயர்ந்தவன்,
வன்மை மிக்கவன், வகைவகை யானவன்,
அண்டினோர் தமக்கெலாம் ஆதர வளிப்பவன்,
பரோப காரன், பன்புரு வான
குணோதயன் உள்ளம் கொண்டநல் நண்பன்;

229. தனியனாம் மறவன், தறுகண்மை கண்டு
மகிழ்பவன், பல்வகை வர்ணனை யுடைய
பேரறிவு செறிந்தவன், பீடுறும் கலையெலாம்
வல்லவன், மதிபோல் மாசறு புகழெனும்
நல்லணி பூண்ட நல்லோன் ஆவன்;

230. உலகெலாம் சூழ்ந்த உறுபுகழ் வேந்தன்
நிருப துங்க தேவன் நெறிகளைக்
கற்பிப் போன், நற் காப்பியக் கடலைக்
கடக்கும் நன்மரக் கலமெனத் திகழ்பவன்,
மகாத்மா என்று மாநிலம் மதிப்பவன்;

231. மாசறு குலத்துறும் மாண்பெனும் பாற்கடல்
வெண்நுரை தந்த வெண்மை மிக்கவன்,
மலைகடல் பூமி திசையொடு வானம்
எல்லாம் கடந்த ஸ்ரீ விஜயன் இயற்றிய
சிறப்புறு நூலின் செறிவுறு புகழும்,
மகளிரும் மைந்தரும் முதியரும் வாழும்
உலகமும் விண்மதி மீன்கள் உளவரை
உயர்ந்த மகிழ்ச்சியில் ஓங்குக! வாழ்க!.

பரம சரஸ்வதி தீர்த்தாவதாரன் நிருபதுங்கதேவன் அருள்பெறும் கவிராச மார்க்கத்தில் பொருள் அணி வகைகளை விளக்கும் மூன்றாம் பரிச்சேதம் முற்றும்.

மிகைப்பாடல்கள்

நால்வகை எதுகைகள்

1. ஈரெழுத் தெதுகை, இருசொல் எதுகை,
காப்பியம் தன்னில் கவின்பெற் றமையும்
மூவெழுத் தெதுகை முதல் ஈற் றெதுகை
என நால் வகையுறும் எதுகைகள் உளவே.

(1) ஈரெழுத்தெதுகை

2. அரஸ ரொளெலெ நீம் ஸரஸம
நரஸியெ வோலாடுதிர்ப்பெ நிநகிதுகுணமே
அரஸர் ஸரஸம நறிவரெ
ஸரஸம நாட ரஸ ரல்லதவரொள் மகளே.

(பொருள்: மகளே! அரசிபோல் அரசனுடன் நீ விளையாடுவாய்! நினக்கிது தக்கதன்று. அரசர் விளையாட்டு அறிவரோ? அரசரல்லாதவரிடம் அரசர் விளையாடுவரோ?)

(2) இருசொல் எதுகை

3. ஒந்தொந்தற ஸௌந்தர்யம
நொந்தொந்தீக்ஷிஸ லொடர்ச்சி நாளிகமட்டம்
பந்தந்தம நீக்ஷிஸி பெற
நிந்தந் தீக்ஷி ஸூவுவள நிடியெஸல்கண்கள்.

(பொருள்: பரஸ்பரம் ஒன்று மற்றொன்றின் அழகைக் காண விரும்பிய அவள் மலர்க்கண்கள், இடையில் மூக்கு ஒரு தடையாய் நிற்பதைக் கண்டு கடைக் கணிக்கும்.)

(3) மூவெழுத்தெதுகை

4. நுடிஸித நெந்நம் நல்லம்
பிடிஸித நெந்நந்தரங் கதநுதா பமநொ
ல்துடிஸித நொள்ளுள் ளுடெயம்
துடிஸித நெகறி கெயப்ப மணி பூஷணமம்.

(பொருள்: என் காதலன் என்னைப் பேச வைத்தான். என் மனத்துயர் நீக்கினான். நல்ல நல்ல உடைகளை அணிவித்தான். சிறந்த அணிகலன்களைச் சூட்டினான்.)

5. தாரா பதிவத் கீர்த்தி விஹாரா
ஹாரா ப்ரபயா நிஜதநு பூரா
பூராஸ்ரித ஹ்ருத் கிலேஸ விதூரா
தூராவ்ருத பல விஸ்தாரா.

(பொருள்: திங்கள் போல் புகழுடையவன். மாலைகளின் ஒளியால் அழகுடன் திகழும் உடம்புடையவன். தன் ஆதரவில் உள்ளவர்களின் துயரைப் போக்குபவன். வெகுதூரம் பரவியுள்ள ஆற்றல் மிக்கவன்.)

இவை முறையே, ஈரெழுத்தெதுகை, இருசொல் எதுகை, மூவெழுத்தெதுகை, முதல்–ஈற்றெதுகை ஆகும். நான்கும் வெவ்வேறு நெறிகளின் இலக்கணம்.